உ

கடவுள் துணை

851

ஆறுபாகங்களடங்கிய

ஐதீகப்பிரகாரம் விசித்திர படங்களமைந்த

நூதன பெரிய

ஒட்டநாட்டார்
நாடகாலங்காரம்.

904
3.20

சென்னை - சூளை

...ராஜவேலு நாயுடு அவர்களால்

... இந்தியா பிரஸ்ஸில்

...க்கப்பட்டது.

1920.

O-,2 N
N20
120250

உ

கடவுள் துணை.

நூதனபெரிய ஒட்டநாட்டார்

நாடக அலங்காரம்.

விநாயகர் தோத்திரம்.

கதிர்மதியுஞ்சுழிமுனையுங் கலந்துநின்று
காரணமாகாரணமாய் கருத்தில்தோய்ந்து
முதிர்மறையோர்க்கெட்டாத வடவாய்வந்த
முச்சுடராய்ப்பரம்பரையாய் தொழில்மூன்றாகி
சதிர்சபையாய்சண்முகனார் தனக்குமூத்த
தந்திமுகர்ஒட்டநா டகத்தைப்பாட
யெதிர்புகலாதிருவடிசெங் தாமரைத்தாள்
எங்கள்சிறந்தனிலணிந்தோ மிடர்தீர்ப்பாயே.

சுப்பிரமணியர் வணக்கம்.

செஞ்சடையோன்விழிதனிலே பெரியோராகி
திகழ்பரவுஞ்சரவணையில் வீழ்ந்தகாலம்
மிஞ்சுற்றபாலர்களா யிருந்தபோது
விமலிகரங்கொண்டேந்த உடலொன்றானாய்
கஞ்சனையுஞ்சிறையில்வைத்தாய் வள்ளிபங்கா
கானமயில்மீதேறுங் கந்தாவேலா
தஞ்சமென்றுநின்னடியைத் துதித்தேனிந்த
தருணம்ஒட்டநாடகத்திற் கருள்செய்வாயே.

சரஸ்வதிதோத்திரம் கலி விருத்தம்.

ஆதிமாமறை தேடியகாரணி
வேத ாவில் விளங்குஞ்சரஸ்வதி
பூதலந்தனில் புகழ்ஒட்டன்கதையை
ஓதிப்பாட வரமருளன்னையே

சிவன் தோத்திரம்.

சத்தியந்தவரூம் இருதயந்தனில்
சதாசிவ முனைத்தொழுதேன்
பத்தற்குநல்ல் பராபரப்பொருளே
அருளேபரஞ் சுடர்மணியே



உனைகத்தியே ஒட்டநாடகந்தனை
நவின்றிட எண்ணினேன்யான்
அந்தனேநின் னருள்கொடுத்தாளும்
அமரர்போற்றிடு மெய்ப்பொருளே.

விஷ்ணு தோத்திரம்.

பர்சமுடன்தசரதனுற் மகனுய்த்தோன்றி
பத்துதலைராவணனை சம்சரித்தாய்
லோகமெல்லாமாண்ட இரணியனைத்துலைக்க
நொடியில்பிரகலாதனனுக் குபதேசித்தாய்
தாகமுடன்பாண்டவரைக் காக்கவென்று
சபைதனிலேகங்கணங்கள கட்டிநின்றாய்
சாகரஞ்சூழுலகில் ஒட்டநாடகத்தை
சாற்றுதற்குதருணம்வர மருள்வாய்நீயே.

அவையடக்கம்.

மும்மதம்பொழியும் யானைதன்னுடையை
முடிக்கியேபிடிப்போ மென்றெறும்பின்
சம்பதுமதுபோல் ஒட்டநாடகத்தை
சாற்றிடமனதில் துணிந்தேன்
செம்மையாருதித்த ஜெகதலமதனில்
சீருள்பெரியவர்கடம்மை
தம்மையேயறிந்து தைரியம்படைத்தே
தயவதுபுரிந் தருள்வீரே.

விநாயகர் வருகிற பொது விருத்தம்.

மதியணிசடையோனதந்த வளமிகுதனயனானோன்
பதிபுகழ்பேருதனனில் பாரதமெழுதவல்லோன்
சதிருடனன்பர்போற்றுந் தயாநிதியானமூர்த்தி
துதிவுண்டிடுங்கணேசன துலங்கிடுஞ்சபையில்வந்தார்.

விநாயகர் வருகிற தரு-இ-ம் தோடி—அடதாளம்.

பல்லவி.

ஆதிவிநாயகர் வந்தனரே
ஆகுவாகனமேறி

அநுபல்லவி.

பாதிப்பிறையணிந்த சிவனார்தன்
பாலகரும் வந்தாரிதோ

சரணம்.

சத்தமகிழ்பாலகனும் மயிலேறுஞ்
சண்முகற்குமூத்தவனும்
பக்தியுடனேயெந்நாளும் துதித்தோரை
பாதுகார்த்தவல்லபனும்
பாரதந்தானெழுத ஒற்றைக்கொம்பை
பலமாயொடித்தவரும்
தீரன்ஒட்டன்கதைக்கு அருள்செய்ய
சிறப்புடன்வந்தனரே
ஐந்துகரம்படைத்து மார்பினில்
அழகுபூணூல்தரித்து
தொந்தோமென்றாடிக்கொண்டு கணநாதன்
துலங்குஞ்சபையில்வந்தார்

அர்ச்சகர்வருகிற விருத்தம்.

திங்களும்புனலுங்கொன்றை
சிரமதிலணிந்தோன்தேவி
மங்கைபார்வதியாள்சேயன்
வள்ளல்தன்பூசைசெய்ய
பொங்கமாய்நதிகளாடி
புகழ்சபதபமுடித்து
செங்கையில்மலருங்கொண்டு
சிவகுருக்களும்வந்தாரே.

வசனம். அகோதெப்படி யென்றால் புண்ணிய தீர்த்தத்திலாடி ஜெபதபமுடித்து நானாவித நறுமலரோடு பஞ்சவில்வங்கள் பூக்குடலையிற்கொண்டு நைவேத்திய ஆராதனைகளோடு விநாயகக்கடவுளை பூசிக்க குருக்கள் வருகிற விதமெப்படி யென்றால்.

தரு இ-ப் மத்யமாவதி அடதாளம்.

பல்லவி

குருக்கள்வந்தாரே கோயிற்
குருக்களையரும்வந்துதோன்றினாரே குரு

அநுபல்லவி.

கையில்ஜெபமாலையேந்தியே
கழுத்தில்ருத்ராட்சக்கேவிடணிந்து
மெய்யில்நீறணிந்துவேதப்
பிராமணர்வந்துதோன்றினாரே குரு

சரணங்கள்.

அரையிற்காவியுடுத்தி பூசைவிதி
முறைதவறாமலேபூசைசெய்ய
அருகுடன்வில்வங் கொன்றைபுன்னை
இருவாட்சிசாமந்திப் பன்னீர்வட்டமலர்
மருவுமருக்கொழுந்து முல்லைவில்வமல்லி
மந்தாரைசெந்தாரை தாமரைப்பூவுடனே
அலுகுப்புனுகுபன்னீர் வெட்டிவேர்
அத்தர்பரிமளாதி யாவுங்கொண்டு குரு

அப்பளம்வடைதோசை சுண்டல்போளி
அழகுப்பலாச்சுளை மாங்கனியும்
நற்பயர்பொரியெள்ளு அவலுடன்
நாற்றிசைப்புகழும் வாழைக்கனி
மிட்டால்லட்டுண்டை தேனுகுழை
முந்திரிகொய்யாக் கனியுடனே
தேங்காய்க்கற்பூரம் சாம்பிராணி குரு

தேன்பால்இளநீர் தானெடுத்து
முந்திவிநாயகனைப்பூசிக்க
முத்துக்குருக்கள்வந்து தோன்றினரே
சந்திரசேகரன் மகனைப்பூசிக்க
சடாட்சரக்குருக்கள வந்து தோன்றினரே குரு

தோத்திரம் சுலோகம்.

சுக்கலாம்பரதரம் விஷ்ணும்
சசிவர்னம் சதுர்ப்புஜம்
பிரசன்ன வதனம் தியாயே
சர்வவிக்கினோப சாந்தயே.

வேறு சுலோகம்.

மூஷிகவாகன மோதகஹஸ்த
சாமளகர்ன விளம்பிதசூஸ்திர
வாமனரூப மயேஸ்வரபுத்ர
விக்கினவிநாயக பாதநமஸ்தே நமஸ்து.

சோடசநாமங்கள்.

ஓம் சுமுகாயநமா
ஓம் ஏகதந்தாயநமா
ஓம் கபிலாயநமா
ஓம் கஜகர்ணிகாயநமா
ஓம் லம்போதராயநமா
ஓம் கணதிபதியேநமா
ஓம் தூமகேதுவேநமா
ஓம் கணாதியாயநமா
ஓம் பாலசந்திராயநமா
ஓம் கஜானநாயநவா
ஓம் வக்ரதுண்டாயநமா
ஓம் சூர்ப்பகர்ணாயநமா
ஓம் ஏரம்பாயநமா
ஓம் ஸ்கந்தபூர்வாயநமா

காசிருக்... கொண்டுவாடா என்ற அரிச்சந்திரவிலாச
வர்ன மெட்டு.

விநாயகர் தோத்திரம்-தரு.

மூந்திமுந்திவிநாயகனே	யேனையா	முருகாசாஸ்வதியே
கந்தனுக்குமுன்பிறந்த	யேனையா	கணபதியேமுன்னடவாய்
ஆலயடிப்பிள்ளையாரே	யேனையா	ஐங்கரனேமுன்னடவாய்
பேழைவயிற்றோனே	யேனையா	பெருச்சாளிவாகுனரே
பெருச்சாளிவாகனேரா	யேனையா	உன்பொற்பாதம்மறவேன்
ஒட்டருடதன்கதையை	யேனையா	உறுதியுடன்படிக்க
எந்தன்நாவில்குடியிருந்து	யேனையா	நடத்துமையாநாடகத்தை
பாடினபிள்ளைகட்கு	யேனையா	பழுதொன்றும்வாராமலே
கார்க்கக்கடனுனக்கு	யேனையா	திருவடிநான்மறவேன்

கட்டியக்காரன் வருகிற பொது விருத்தம்.

கச்சையுமிருக்கிக்கட்டி ...கதனில்தடியுமேந்தி
யச்சமுற்றிடவேபார்த்தோ ரதட்டியேவார்ப்பரித்து
பட்சமாய்ராயவொட்டன் பழுதிலாச்சபையைக்கார்க்கும்
உச்சிதக்கட்டியக்காரன் உகநதிதோவருகின்றானே.

கட்டியக்காரன் வருகிற தரு.

இராகம் மோகனம் மீசுரதாளம்

பல்லவி

கட்டியக்காரன்வந்தான் அலங்கிர்த
கட்டியக்காரன்வந்தான்

அநுபல்லவி.

தட்டிஜல்லடமிட்டு	தலையிற்பாகையணிந்து
கெட்டிமிகுந்தசிங்கக்	குட்டியைப்போல்துள்ளி-கட்டி

சரணங்கள்.

கண்டவர்மனங்களுங்	கலங்கித்தவித்திட
கனத்தசபையிலுளளோர்	ரனைத்துந்திகைத்திட
பண்பானமார்பினில்	பதக்கஞ்சொலித்திட
கறுத்தவெள்ளிததடிஎப	திருத்தமாய்பிடித்தி்தோ கட்
தரித்தவாபரணங்கள்	தத்தகதகவென்ன
தலையிற்சரிகைபாகை	நிகநிகநிகவென்ன
திருந்தமாய்சபையலங்	கார்மிகவேபண்ண
ஜெயமதுகூறியே	ஜயமதுவாமென்ன கட்
ஒய்யாரமாகவே	உயர்ந்தநடைநடந்து
ஓரக்கப்பேசுவோரை	பதட்டிமிகத்தடிந்து
வைவோரைராசனிடம்	வதட்டிகெட்டிகொணர்ந்து
வாதைப்படுத்துஞ்சுட்டி	வாசல்கார்க்குங்கெட்டி கட்

கட்டியக்காரனுக்கும் பரதாசாரிக்குந் தர்க்கம்.

வ-ம். கட்டி சத்து சத்து அபிரமியா அஜாத் நீங்கள்யார் ஓய் ராமவொட்டராசன் கொலுச்சபையென்றறியாமல் ஆட்டமென்ன பாட்டமென்ன கூட்டமென்ன தடாபிடாவென்ன லொடாபிடா வென்ன எள்ளளவாவது பயமச்சமில்லாமல் மாரிகாலத்திலே மதிச்சிப்போன தவலைகளைப்போல தலைதெரிகக கத்தரீங்கோ அச்சாகுப்கோ நீங்கள் யார் ஓய்.

பரதாசாரி நாங்களெல்லாம் உமதரசன் புத்திரசிகாமணியினுடைய விவாகமுகூர்த்தத்திற்கு வந்த வித்வாம்சாள் ஓய்.

கட்டி நீங்கள் யெத்தனைபேர் வந்தீர்கள் ஓய்.

பரதாசாரி இந்த சபையிலே வந்திருக்கிறவர்கள்எல்லோரும் எங்களைச்சேர்ந்த பேர்கள் தான ஓய்.

கட்டி அடேயப்பா யித்தனைபேருக்கும் யெங்கேயிருந்து சர்பளுபண்ணுகிறது ஆமாஓய் நீங்கள் வருகிறவழிகளிலே காடு செடி கல்லு கறடு பள்ளம் படுகுழி கரடி புலி பாம்பு தேள் இதுகளிலே ஒண்ணுமில்லையா.

பரதாசாரி ஏண்டா அப்பா இவ்வளவு கடுமையாய் கேழ்க்கிறாய்.

கட்டி உங்களத்தனைபேருக்கும் வைகுந்தத்திற்கு வழிகாட்டத்தான் ஓய்.

பரதாசாரி எங்களையேண்டா அப்பா அப்படிசொல்லுகிறாய்.

கட்டி இல்லாவிட்டால் ஒங்களப்பன் பணஞ்சேர்த்து வட்டிக்கி போட்டிருக்கிறீங்களோ.

பரதாசாரி ராமஒட்டராசன் சொத்தெல்லாம் உங்கள்பாட்டிக்கொற்றைநூற்றதோ.

கட்டி அடஓய் நீங்கள்வருகிறவழிகளிலே ஆறுகுளங்களுண்டா.

பரதாசாரி மூடிவுகொண்டான் குடமுருட்டி திருமலைராசன் அரசலாறு காவேரி கொள்ளடம் இதுகள்தா னிருக்குது,

கட்டி இந்த ஆறுகளிலே தண்ணீ ரெவ்வளவிலிருக்குது ஓய்.

பரதாசாரி இடுப்பளவு மாரளவு வாயளவு யிருக்கும்.

கட்டி இன்னம் நாலுவிரக்கடை தண்ணீர் பஞ்சமாபோச்சா.

பரதாசாரி ஏண்டா அப்பா இவ்வளவு பரிதாபப்படுகிறாய்.

கட்டி-உங்களை யப்படித்தானே அடித்துக்கொண்டு போகாமல் போச்சே யென்ற துக்கந்தான்.

பரதாசாரி நாங்கள் வேண்டுமானுல் சொல்லாமல் பறப்பட்டு ஓடிப்போய்விடுகிரேம் நீயேன் இவ்வளவு மனஞ்சலிக்கிருய்.

கட்டி-பஞ்சகாலத்திலே ஒருத்தர்விட்டுக்கு ஒருத்தர்வந்தால் பரிதாபமாயிருக்காதா ஒருத்தரா ரெண்டுபேரா தாங்குகிறதற்கு இந்தப்பக்கத்திலேயிருக்கிறவர்களெல்லாம் யார் ஒய்.

பரதாசாரி-அவர்களும் பரதநாட்டியஞ் செய்யப்பட்ட பாடகாள் ஒய்.

கட்டி-ஆஆஆ சபாஷ் சபாஷ் உங்களுக்கு பாரம் பரியமாய் இதுதாஞ பிழைப்பு

பரதாசாரி-ஆம் எங்கள் குடும்பந் தோன்றியநாள் முதலாக இதுதான் பிழைப்பு.

கட்டி-நல்லது ஒய் ஒருத்திக்கு பாடுகாதனம்பண்ணினுல் உங்கட்கு என்னவோய் தாகு கொடுப்பாங்கோ.

பரதாசாரி என்னடா தட்டுகெட்டப்பயல் தாறுமாறுய்ப்பேசுகிருய் அடேவோய் நாங்கள் சங்கீதசாத்திரமறிந்து பரதநாட்டியங்கற்ற வித்வாம்சாள் ஒய்.

கட்டி-அடே இந்த சொற்பகாரியத்திற்கு வாயிலே வந்ததெல்லாம் உளறுவானேன் உங்களுக்குத்தெரிந்த வித்வத்தன்மையைப் பார்க்கலாம் என்னென்ன இராகம் உங்களுக்கு பாண்டித்தியமுண்டு சொல்லுவோய் பார்க்கலாம்.

பரதாசாரி நாட்டை நவரோசு செஞ்சுருட்டி நாதநாமக்கிரியை சங்கராபரணம் இப்படி யின்னுமனேகிசு இராகந்தெரியும்.

கட்டி-அரே ஒய் நம்பளது இப்படி யிருக்காதுவோய் ரொம்பவும் கம்மத்தாயிருக்கும் ஒய்.

பரதாசாரி-ஆனுல் உங்களுக்குத்தெரிந்த இராகதாளங்களிலே கேட்டாலும் பாடுகிறேம்.

கட்டி-ஆ ஆ சபாஷ் சாக்கடைராகம் தோண்டிராகம் குண்டிசட்டிராகம் இதுகளெல்லாம் பாடுவோய் பார்ப்போம்.

பரதாசாரி இதுகளெல்லாம் எங்கேவோய் பார்க்கலாம்.

கட்டி-இதுகளெல்லாம் உங்களுக்கு தபசுபண்ணினுலுங்கிடைக்காதுவோய் நான் ஒரு பெரியவரிடம் இராப்பகலாக தூங்கின கண் விழிக்காமல் ஒருமாமாங்கம் கற்றுக்கொண்டேன்வோய்

பரதாசாரி உம்முடைய வித்வத்திற்கு நாரதாதிகளும் ஈடல்ல இப்போது இராசன் சமுகத்திற்கு அழைத்துப்போய் தியாகம்வாங்கிக்கொடும் கட்டியக்காரரே.

கட்டி-அப்படியே செய்விக்கிறேன் நீங்களெல்லாம் இங்கே தானே யிருங்கள் ஓய்.

பாதாசாரி இப்போது யாரார் சபைக்கு வருகிறார்கள்.

கட்டியன் விருத்தம்-இ-ம்-தன்னியாசி.

உன்னதமாகுமெங்க ளுசிதமேல்நாட்டையாளும்
மன்னனும்ராமவொட்ட மகிபனுமமைச்சரோடு
தன்னிகராகவேதான் தான்கொலுவிருக்கவாரார்
இன்னிலச்சபையிலுள்ள யாவருமறிகுவீரே.

வ-ம் கேளுங்கள் கனவான்களே ராஜாதிராஜ ராமவொட்ட நாட்டார் அமைச்சரோடு கொலுவுக்கு வருகிறபடியால் சந்தடி செய்யவேண்டாம் சபையோர்களே.

இராமவொட்டநாட்டார் கொலுவுக்கு வருகிற

தரு-இ-ம்-பூரிகல்யாணி-அடதாளம்.

பல்லவி.

இராமவொட்ட ராசன்வந்தான் கொலுவிருக்க
இராமவொட்ட ராசன்வந்தான்.

அநுபல்லவி.

நேமமாயிருபுறமும்   நெருங்கிமந்திரிகள்சூழ
நேத்தியதாய்ப்பட்டுக்   குடைகள்பிடித்துத்தாழ
சேமமாகவேகிரீடம்   சிரசிடுவாளிமின்ன
சித்திரம்போலின்னம்   மெத்தப்பணிகள்துன்ன-ராம

சரணங்கள்.

அங்கியுருமாலை   அழகாகவேயுடுத்தி
அடுக்கையினில்செங்கோல்   பிடித்துவெகுநேத்தி
இங்கிதமானபெண்கள்   யெடுக்கஆலாத்தி
இச்சையாம்கொலுவினி   லிருந்திடவேபூர்த்தி-ராம

உலகக்குடிகளுக்கு   ஒருகுறைவன்றிக்காப்போன்
உத்தமமைம்வெகு   சுத்தமுடையதீர்ப்போன்
நலமிகுமொட்டர்க்கெல்லா   மேலதிபதியானோன்
நாட்டினில்கீர்த்தியோங்கும்   தாஷ்டிககுணமுள்ளோன்-ராம

அஷ்டதிக்குள்ளவொட்ட   ரனைவர்க்கரசனானோன்
அன்பானமேல்நா   டாளுமகிபசீலன்
திட்டமதாகக்காளி   திருவடியருள்பூண்டோன்
தீவிரமாய்க்கொலுவை   தேகமிகவேநாடி-ராம

இராமவொட்டராசன்-கொலுவிருத்தம்.

இராகம்-பைரவி.

பத்தியாய்தேவர்மூவர் பாதமென்னாளும்போற்றி
மற்றுமுள்ளரிஷியோடின்ன மந்திரவிப்பாதம்போற்றி
இத்தரைதழைத்துநாளு மெனதுசெங்கோலுமோங்க
சுற்றமாமென்தாய்காளி திவ்யபொற்பாதம்போற்றி.

தேசவிசாரணை விருத்தம்-இ-ம்-தன்யாசி.

சீர்பெரும்நமதுராஜ்யம் செழித்துமெக்நாளுமோங்கி
பேர்பெருங்குடிகளெல்லாம் பொருமையாய்வாழ்கின்றாரா
கார்பெருமாலயங்கள் கனபூசைகிதமுமேதான்
தார்பெறநடக்குதாசொற் றழைத்திடும்வீரமந்திரி.

வ-ம். கேளும் மந்திரி நமது ராஜ்யத்தில் குறைவின்றி மாத மும்மாரிபெய்து தான்யவிர்த்தியோடு குடிகள்யாவும் க்ஷேமமாகவும் தேவாலயங்கள் தவறாமல் நடந்து வருகின்றதா யெனது வீர மந்திரி.

வீரமந்திரி இராஜனுக்குச்சொல்

விருத்தம் இ-ம்-கமாஸ்.

ஒருகுறைவன்றிதானும் வோங்கிமேகுடிகளெல்லாம்,
பெருமையாம்புகழ்பெற்றோங்க பிரபலமாகுதையா
தருமநெறிவாலயங்கள் தவறாமல்பூசையோங்க
வருமநெறிநமதுராஜ்யம வருத்தமொன்றில்லைவேந்தே.

வசனம்.

கேளும் வேந்தே நமது ராஜ்யம் யாதொரு குறைவன்றி மாத மும்மாரிபெய்து குடிகள் க்ஷேமமாக வாழ்கின்றார்கள் தேவாலயங்களில் பூசைமுதலான பிரம்ம உற்சவங்கள் குறைவின்றி நடந்து வருகின்றதையா சுவாமி.

இராசன் மந்திரிக்குச்சொல் விருத்தம்

இராகம்-மத்தியமாவதி.

உன்னிதமாகயுக்தி யுரைத்திடுமந்திரிமாரே
என்னிடபாலனுக்கு யெழில்மணஞ்செய்யவேண்டும்
நன்னயமாகுமெந்தன் நலம்பெருமனையாள் தன்னை
தன்னிகராக்குமிந்தச் சபைதனிலழைத்திடீரே.

வசனம்.

கேளும் மந்திரி எனது குமாரனாகிய சாமி ஒட்டனுக்குத்திரு மணஞ்சூட்ட வேண்டுமாதலால் எனது மனைவியாகிய செங்கமலத்தை கொலுவிற்கு அதிசீக்கிரமாக அழையும் மந்திரி.

மந்திரிசொல் வசனம்.

அப்படியே அழைப்பிக்கிறேனையா.

மந்திரி கட்டியனுக்குச்சொல் விருத்தம்.

இராகம்-ஆனந்தபைரவி.

ஆரடாகட்டியக்காரா அதிவிரைவாகவோடி
நேரதாய்ராஜன்மாதை நிமிஷத்திற்சபைக்குத்தானும்
சீரதாவரசன்றானும் சிறப்புடனழைத்தாரென்று
கூறியேவிரைவில்நீயும் கொப்பெனவருகுவாயே.

வ-ம். கேளும் கட்டியக்காரா நமதரசன் தேவியாகிய செங்கமல அம்மாளை அரசன் கொலுவிற்கு அழைத்தாரென்று அதிசீக்கிரமாகப்போய் உரைசெய்குவாய் கட்டியனே.

கட்டியன்சொல் வசனம்.

அப்படியே தெரிவிக்கிறேனையா சுவாமி.

கட்டியன் தாதிகளுக்குச்சொல் விருத்தம்.

இராகம்-ஆனந்தபைரவி.

அரிவைநல்தாதிமாரே வரசனார்தேவிதன்னை
திறைசபைதனக்குமிப்போ ராசனுமழைத்தாரென்று
குறையறவுரைத்துநீங்கள் கொப்பெனநிமிஷந்தன்னில்
வறையுறும்சபைதனக்கு வாகுடன்வரச்செய்வீரே.

வ-ம். கேளுமம்மா தாதிமார்களே நமதரசன் தேவியாகிய செங்கமலவம்மாளை அதிசீக்கிரமாக கொலுவிற்கு அழைத்தாரென்று தெரிவிப்பீர்கள் தாதிமார்களே.

தாதிகள் கட்டியனுக்குச்சொல் வசனம்.

அப்படியே தெரிவிக்கின்றோம் கட்டியக்காரா.

தாதிகள் செங்கமலத்திற்குச்சொல் விருத்தம்.

எங்களையாளுமெங்க ளரசியேகேளுமம்மா
பொங்கமாவரசன்றானும் புகழ்சபைதனக்குமிப்போ
உங்களையழைத்தாரென்று வோதினான்கட்டியக்காரன்
மங்களமானவார்த்தை யரசியேவுரைத்தோந்தாயே.

வ-ம். கேளுமம்மா தாயே நமதரசன் உங்களை கொலுமுகத்திற்கு அழைத்தாரென்று கட்டியக்காரனறிக்கையிட்டானம்மணி.

பொது விருத்தம்.

அன்பனழைத்தாரென்று மதிரைவாகவப்போ
செங்கமலப்பெண்மாது ஸ்நானங்கள்மிகவேசெய்து
[illegible] பேடு வாபாணைகிபூண்டு
பொங்கமாய்சபைக்குமிப்போ புகழுடன்வருகின்றாளே.

வ-ம். அதோ தெப்படியென்றால் இந்தப் பிரகாரமாக ராம வொட்டன் மனைவியாகிய செங்கமலவம்மாள் கொலுவிற்கு வருகிறவிதங்காண்க.

செங்கமல அம்மாள் கொலுவிற்கு வருகிற தரு

இ-ம்-அநுமந்தத்தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

செங்கமலமும்வந்தாள் ஒய்யாரமாக
செங்கமலமும்வந்தாள்.

அநுபல்லவி

இங்கிதமாயரசன் இஷ்டமாயழைத்தசேதி
பொங்கமுடனறியப் புகழாய்க்கொலுவைத்தேடி செங்

சரணங்கள்.

படத்திலுருவைப்போல பாவைப்பணிகள்பூண்டு
பாதவிரல்கட்கெல்லாம் கோதிரமேயணிந்து
உடுத்தியாடைரவிக்கை பொட்டியாணங்கள்பூண்டு
உத்தமிகையினில்நல்ல சித்திரவளையல்மின்ன செங்

அண்டையில்தாதியர்கள் ஆனகவரிவீச
அடுத்துமேவெகுமதன் தொடுத்துப்பக்கமேசூழ
தண்டைப்பாதத்தில் தகதகதகவென்ன
தங்கப்பதுமையைப்போ லங்கமதுசொலிக்க செங்

சித்திரமுக்குத்தியது சந்திரனொளிமின்ன
சிங்காரமாகபெண்கள் எங்குமாலாத்திவாங்க
உத்தமராமவொட்டன் வோங்குஞ்சபையைநாடி
உல்லாசமாகவே சல்லாபமுடன்கூட செங்

செங்கமலம் ராசனுக்குச்சொல் விருத்தம்,

இ-ம்-கொச்சகம்,

மன்னவரேயானசரணம் மகிபாவுன்மலர்சரணம்
தன்னிகராயிச்சபைக்குத் தானழைத்தகாரணத்தை
இன்னதென்றடியாட்கு யியம்பிடவேகிருபைசெய்து
நன்மையுடன்காத்தருள்வீர் நங்கையருமனமகிழ.

வ-ம். கேளும் என்பிராணபதமானவரசே அடியாளையழைத்தசேதி தெரிவிப்பீரையா சுவாமி

இராசன செங்கமலத்திற்குச்சொல்-விருத்தம்.

இ-ம்-நாட்டை.

மங்கையேயழைத்தசேதி மகிழுடன்சொல்லக்கேளாய்
பொங்கமாய்ப்பாலனுக்கு புகழ்மணஞ்செய்யவேண்டும்

சங்கையில்லர்மல்பெண்ணை சதுதியில்பார்த்துமிப்போ
இங்கிதமாகச்செய்ய யிஷ்டமெப்படிச்சொல்வாயே.

வ-ம். கேளாய் என் பிராணநாயகி நமது குமாரனுகிய சாமி ஒட்டனுக்கு திருக்கலியாணஞ்செய்ய வெண்ணங்கொண்டேன் ஆனபடியால் உன்னிஷ்டத்தைச்சொல்லடி மாதே.

இராசனுக்கு செங்கமலம் சொல்லியது இ-ம்-கெண்டா.

என்னிடபிராணநாதா யியம்பிடக்கேளுமிப்போ
உன்னிதவடரங்கத்தி லுற்றயென்தமயன்பெண்ணை
நன்னயமாகப்பேசி நமதுநல்பாலனுக்கு
மன்னியமணமேசெய்ய மங்கையற்கிஷ்டம்நாதா.

வ-ம். கேளும் என்பிராணநாயகா வடரங்கபுரமென்னுந் தேசத்திலிருக்கும் எனது தமையன்பெண் சித்திரவல்லியைப்பேசி முடிவுசெய்து நமது பாலனுக்கு திருமணஞ்செய்ய இஷ்டமாகினேன் நாதா.

இராசன் செங்கமலத்திற்குச்சொல் வசனம்.

அப்படியே செய்விப்போம் போய்வருவாய் மாதே.

பொது விருத்தம்.

அப்போதுவாசன்தானு மந்தநல்வடரங்கத்திற்கு
செப்பமாயெழுதியோலை சேதியுமறிந்தபின்னல்
கொப்பெனவிவாகஞ்செய்ய கூடியேநாள்நேமித்து
ஒப்புடன்பந்துக்கெல்லாம் ஒலையுமனுப்பினுரே.

வசனம்

அகோதெப்படியென்ருல் மனைவியின் இஷ்டப்படிக்கு வடரங்கபுரத்திற்கு ஒலையெழுதி பெண்பேசி முடிவுசெய்து பந்துகளுக்கெல்லாம் ஒலையெழுதித் தெரிவித்து நாளிட்டு பட்டணமுழுதும் அலங்கிர்தஞ்செய்து திருமணஞ்செய்கிற விதங்காண்க.

திருக்கலியாணச் சபை.

சாமிவொட்டனுக்கும் சித்திரைவல்லிக்கும் திருமணஞ்செய்

நொண்டிச்சிந்து.

கண்டான் ராமவொட்டன்-அப்போ-கடுகெனவேதியரை மிக வழைத்து, சாமிக்கும் சித்திரவல்லிக்கும்-பொருத்தம்-சரியாகப் பார்த்து நீயுரையுமென்ருன், கொண்டாட்டமாய்மறையோன்-ஒரு குறைவுமில்லையென்று அவருரைக்க, நாளுடன்முகூர்த்தமிட்டு-தன் நகரெங்குமலங்கார மிகவேசெய்து, கூட்டமாய்த் தனதுறவோர்-யாவருங்-கூடியே, வந்துமங்கேயாடியபின் மணவரையலங்கரித்து-பிள்ளைபெண்ணை, மங்களமாகக் குந்தவைத்து - மறையோர்கள்

வேதம்படிக்க-அங்கே-மகிட்சியாய், வாத்தியங்கள் மிகவடிக்கவும் மிலலமாக-எதிரில் - அரசாணிகாலுமே மிகநிறுத்தி, சர்லங்காரக முடன்-இன்னம்-சதுரான குடவிளககேபெரிய, ஒமங்கள் மிகவளா ர்த்தி-அதற்கு-உகந்திடும் சேஷை யரிசியிட்டு பாங்காகப்பெரியோ ர்க்கு-மப்போ - பாதபூசைகளும் புரிந்துசெய்து அக்ஷயமாசவே தான்-மங்கையற்கு-அன்பான மங்கிலியம் மிகதரித்து அம்மிதனை மிதித்து-அந்த அரசாணிகாலையுஞ் சுற்றிவந்து அருந்ததிகளைப் பார்த்து-அப்போ அன்பாகப் பாலுபழமுமுண்டு வந்திடும்பேர் கட்கெல்லாம்-வரிசையாய் தாம்பூலம் போஜனமளித்து விந்தை யாம் சாமிவொட்டற்கு-உடனே-விளங்கவேபட்டமதுகட்டினும் மகிழுடன் வந்தவர்கள் தங்கள் தங்கள்-மனை தனக்கு மவர்போய்ச் சேர்ந்தார் சுகமுடன் சாமிவொட்டன்-கொலு-சுந்தரமாகவே யா ண்டிருந்தான், தந்தினம் தனதனனம்.

பொது விருத்தம்.

அன்புடன்சாமிவொட்ட னமைச்சர்களோடுதானும்
பண்புடன்ஒட்டர்க்கெல்லாம் பாதரம்விளங்கும்வீரன்
இன்பமாய்க்கொலுவிருக்க வியலுடன்பணிகள்பூண்டு
தென்புடன்சபையைநாடி தானிதோவருகின்றாரே.

வ-ம். அகோதெப்படி யென்றால் ராமவொட்டன்புத்திரசிகா மணியாகிய சாமிவொட்டவரசர் மந்திரியார் புடைசூழ கொலுவு க்கு வருகிற விதங்காண்க.

சாமிராசன்-வருகிற-தரு-இ-ம்-கலியாணி-ஆதிதாளம்.

பல்லவி.

சாமிஒட்டராஜன்வந்தான் கொலுவிருக்க
சாமிஒட்டராஜன்வந்தான்

அநுபல்லவி.

பூமியில்வெகுகீர்த்தி புகழதுபெருகிட
நேமமாயிருபுர மமைச்சர்கள்நெருங்கிட சா

சரணங்கள்.

தங்கமுடியது தகதகதகவென்ன
தரித்தவங்கியுடன் ஆரம்பளபளென்ன சா
இங்கிதமானபெண்க ளிருபுறஞ்சவரிவீச
ஏற்றப்பட்டுக்குட்டைகள் நேத்திபதாய்பிடிக்க சா
வாகுவலயமுடன் வலதுகையிற்செங்கோலும்
வரிசையுடன்பிடித்து வருகமார்தர்களாட சா
பாகுசேர்கட்டியர் பலருமெச்சரிக்க
பண்பாய்கொலுவிருக்க வின்பமதாகவே சா

அடுத்தவரைக்காக்கும் ஆபத்பாந்தவன் தான்
அகிலவொட்டர்க்கெல்லா மதிபதியாம்சீலன் சா

கடத்தும்ஞாயத்துக்கோ நல்லமகிபாலன்
நலந்தருமேல் நாட்டுக்கதிபலோலன் சா

சாமி ஒட்டராஜன் கடவுள் வணக்கம்.

விருத்தம் இ-ம்-ஆனந்தபைரவி.

அகிலமீரேழும்வாழ்க வரனயன்மாலும்வாழ்க
மகிமைசேர்மதிரவியும் மறைமுனிதேவர்வாழ்க
தகைமைசேரெனதுசெங்கோல் தாழ்விலாநாளும்வாழ்க
ஜெகமதில்விளங்குங்காளி தேவிபொற்பாதம்வாழ்க.

சாமிஒட்டராஜன்-சாத்மீகமந்திரிக்குச்சொல்

விருத்தம் இ-ம்-கமாஸ்.

சாத்மீகமந்திரிகேளாய் சதிருடன்நமதுநாட்டில்
கீர்த்தியாய்க்குடிகளெல்லாம் கிருபையாய்வாழ்கின்றாரா
நேர்த்தியாய்மாதமூன்று மாரியும்பெய்துவோங்கி
பூர்த்தியாய்வாலயங்கள் பூஜைகள்நடக்குதாசொல்.

வ-ம். கேளும் மந்திரி நமது மேல்நாடென்னும் இராச்சிய மெங்கும்வாழும் குடிகள முதலானவாலயங்களும் தவறாமல் பூஜை முதலானது நடந்துவருகின்றதா சொல் மந்திரி.

சாத்மீகமந்திரி-இராசனுக்குச்சொல்

விருத்தம் இ-ம்-செண்டா.

மன்னனேயென்னசொல்வேன் மாரியும்நமதுநாட்டில்
அன்னிதமாகமூன்று வாண்டதாய்பேயாதாலே
இன்னிலங்குடிகளுக்கு யியம்பொணுவருத்தமாச்சு
பின்னென்றுமில்லைசாமி புகழுறும்நமதுநாட்டில்.

வ-ம். கேளுமரசே நமது நாட்டில் மூன்றுவருஷமாய் மழை யில்லாமையால் குடிகள் மெத்தவும் வருத்தப்படுகிறார்கள் மற்ற யாதொரு குறைவில்லை வேந்தே.

ஆசையாகிவந்தேனிங்கு என்கிற வர்னமெட்டு.

இராஜனுக்கும் மந்திரிக்கும் தர்க்கம்-தரு.

ராசன். மூன்றுவருடமாரியில்லா முறைதானென்னமோ
முக்கியமாய்குடிகள்கஷ்டம் சிக்கினார்களோ

மந்திரி. ஆமரசேகுடிகள்படும் அவஸ்தையென்சொல்வேன்
ஆயன்செயலெப்படியோ வறியோமென்வேந்தே

ராசன். என்னமாய்நானிந்தவரசை இருந்தாளுவேன்
ஏழைபடுங்கஷ்டமெந்தன் காதில்போடுவே

மந்திரி. வருகும்விதிதன்னைவிலக்க யெவராலாகுமோ
ஆதிசிவன்சோதனையை வறியப்போகுமோ

ராசன். நித்திரையின்சோகமது மெத்தப்பெருகுதே
நிகழுங்கொலைகளைந்து செல்லுவீர்

மந்திரி. அரசேயரண்மனைக்குநீரு மன்பாய்செல்லுவீர்
அடிமையாங்களுத்திரவின் படியேசெய்குவோம்.

சாமிவொட்டன்-சித்திரவல்லிக்குச்சொல்

விருத்தம் இ-ம்-மூகாரி.

மங்கையேசித்திரவல்லி மாதாசாளேகேளாய்
பங்கமாயெனக்குமிப்போ பெருகுதுநித்திரைசோகம்
சங்கரன்செயலோயேதோ தானதுவறிகிலேனுன்
பொங்கமாய்சற்றுநேரம் படுத்துநித்திரைசெய்வேனே.

வ-ம். கேளும் என்பிராணபதமான பெண்ணே எனக்குயிப்போது ஒருக்காலும்வராத நித்திரை வருவதால் சங்கரன்செயல் யாதோ வறிகிலேன் ஆகிலும் நான் சற்றுநேரம் மஞ்சத்தின்மீது நித்திரைசெய்கிறேன் மாதே.

சித்திரவல்லிசொல்-வசனம்.

அப்படியே செய்குவீர் எனது பிராணநாதா.

பொது-விருத்தம்.

அப்போதுவரசன்தானு மரண்மனைதனக்குச்சென்று
ஒப்புடன்மஞ்சமீது வுகந்துநித்திரைகள்செய்ய
கொப்பெனக்கினவுகண்டு குடலதுநடுங்கித்தானும்
செப்பமாயமைச்சரோடு சேதியுஞ்சொல்லுவானே.

வ-ம். அகோ அதப்படியென்றால் சாமிவொட்டராசன் கொலுகலைந்து அரண்மனைக்குவந்து மஞ்சத்தின்பேரில் சயனித்து நித்திரைசெய்யும்போது கினவுகண்டு திடுக்கிட்டெழுந்து மனக்கிலேசமுடன் மந்திரியிடம் சொல்லும் விதங்காண்க.

சாமிவொட்டராசன் கினவுகண்டு மந்திரியிடம்

சொல்லும்-தரு.

அன்புள்ளவமைச்சனுரே வரகாககினவுவொன்று
கண்டேன்யான் கினவுகண்டேன்யான்

அந்தமுடனயான்கொலுவில் விந்தையாகவீற்றிருக்க
கண்டேன்யான்கினவுகண்டேன்யான்

வந்தகல்லவேணுடில்லியாளும்பாசூதாவர்க்கார்வரக்
கண்டன்யான்கினவுகண்டன்யான்

வந்தவுடனென்னைபாட்சா.வாவழைத்தார்வாருமென்ன
கண்டன்யான்கினவுகண்டன்யான்

சொன்னவுடனவாபிறகே சுமந்திரர்வானும்போகக்
கண்டன்யான்கினவுகண்டன்யான்

போனவுடன்பாட்சாமுன்னே பிடித்தென்னைநிறுத்திடவும்
கண்டன்யான்கினவுகண்டன்யான்

அப்பொழுதுபாட்சாவென்னை யதட்டியேபகுதிகேழ்க்க
கண்டன்யான்கினவுகண்டன்யான்

மூன்றுவருஷமதாய் மோசமழைபெய்யுதென்றுசொல்லவே
கண்டன்யான்கினவுகண்டன்யான

அம்மொழிக்குபாட்சாவும் அதட்டியென்னையேதுசொல்லக்
கண்டன்யான்கினவுகண்டன்யான்

எட்டுநாளில்பகுதிபணங் கட்டவேண்டுமென்றுசொல்லக்
கண்டன்யான்கினவுகண்டன்யான்

கட்டாவிட்டாலெந்தனைபாட்சா கனத்ததுன்பஞ்செய்வேனென
கண்டன்யான்கினவுகண்டன்யான்

அந்தமொழிகேட்டுயானும் அடுத்தமேல்நாட்டுவர
கண்டன்யான்கினவுகண்டன்யான்

வந்தவுடன்மனைவியிடம் வழுத்தியேசேதியெல்லாங்
கண்டன்யான்கினவுகண்டன்யான்

இந்தக்ஷணமறுதேசம் ஏகவேண்டுமென்றழைக்கக்
கண்டன்யான்கினவுகண்டன்யான்

அப்போதுசித்திரவல்லி அடுத்துதர்க்கஞ்செய்திடவுங்
கண்டன்யான்கினவுகண்டன்யான்

தர்க்கஞ்செய்திருவர்களும தான்வழிநடந்திடவுங்
கண்டன்யான்கினவுகண்டன்யான்

அப்போதுவேணவேயர்காச்சகுனம்வரக்
கண்டன்யான்கினவுகண்டன்யான்

விந்தையுள்ளதென்தேசம் வந்திடவுந்திண்டிவனம்
கண்டன்யான்கினவுகண்டன்யான்

சத்திரத்தில்போயிறங்கி சாதமும்சமைத்துவுண்ண
கண்டன்யான்கினவுகண்டன்யான்

மனையாளைசத்திரத்தில்விட்டு மன்னனுக்கூலிவேலைக்குப்போக
கண்டன்யான்கினவுகண்டன்யான்

அப்பொழுதுமனையாளை அடுத்தவொட்டனிழுத்துப்போகக்
கண்டன்யான் கினவுகண்டன்யான்

இழுத்துப்போனமாயவொட்டன் ஏகபோகமாய்குட்டன
கண்டன்யான்கினவுகண்டன்யான்

அப்பொழுதுசித்திரவல்லி ஆண்பிள்ளையிரண்டுபெறக்
கண்டன்யான்கினவுகண்டன்யான்

பிள்ளையும்பிறந்தவுடன் கள்ளவொட்டன்பிரிந்திடவுங்
கண்டன்யான்கினவுகண்டன்யான்

ஐயங்கேழ்க்கநாணங்கொண்டு அடுத்திடவேசித்துகாடு
கண்டன்யான்கினவுகண்டன்யான்

காட்டினிலேசென்றபின்பு கனிகளும்பறித்திடவே
கண்டன்யான்கினவுகண்டன்யான்

சின்னதோர்பாலகனை சீறியேபுலியடிக்க
கண்டன்யான்கினவுகண்டன்யான்

மூத்தப்பிள்ளைகண்டுமப்போ தூக்குப்போட்டுமாண்டிடவுங்
கண்டன்யான்கினவுகண்டன்யான்

கனிபறிக்கப்போனமாது கன்னியரும்வந்துபார்க்கக்
கண்டன்யான்கினவுகண்டன்யான்

பார்த்தவுடன்மாதவளும் பாழ்கிணற்றில்விழப்போகக்
கண்டன்யான்கினவுகண்டன்யான்

அந்தநல்லவேளையிலே குறத்திவந்துகுறிசொல்ல
கண்டன்யான்கினவுகண்டன்யான்

அப்பொழுதுக ளியரும் அரிவையற்குபிரசன்னமாகக்
கண்டன்யான்கினவுகண்டன்யான்

மாதுடதுயர்நீக்கி மைந்தர்களைத்தானெழுப்பக்
கண்டன்யான்கினவுகண்டன்யான்

மூவரோடுதேவர்களும் ஆயலாகயங்குவாக்
கண்டன்யான்கினவுகண்டன்யான்

காட்சியாய்வரமதுவும் நெறியாகதானளிக்க
கண்டன்யான்கினவுகண்டன்யான்

அன்புடனேடில்லிபாக்ஷா யானைகையில்மாலையீயக்
கண்டன்யான்கினவுகண்டன்யான்

அந்தநல்லயானை மூத்த மைந்தனுக்குமாலைபோடக்
கண்டன்யான்கினவுகண்டனயான்

கட்டியேசுகமுடனே காசினியையாண்டிடவுங்
கண்டன்யான்கினவுகண்டன்யான்

மந்திரி இராஜனுக்குச்சொல் விருத்தம்.

இ-ம்-கமாஸ்.

அன்றயன்விதித்தவாறை அகற்றிடப்போமோவேந்தே
குன்றினைமழுததாலே கொடுந்துயர்விலக்குமோதான்
நன்றெனக்காளிபாதம் நலமுடன்கருத்திலெண்ணி
சென்றுநீயரசுநீதி செலுத்துவீரெந்தன்கோவே.

வ-ம். கேளும்வேந்தே அன்று அயன் எழுதியவாறுபோல் முடியுமன்றி நம்மால் ஒன்றுமாவதில்லை இப்போது நீர்கண்ட கினவைப்பற்றி துயரப்பட்டால் வருகிறது விலகப்போகிறதில்லை மனதில் சினைத்து ஸ்தோத்திரஞ்செய்வீர் வேந்தே.

இனி இரண்டாம்பாகமென்றறிவீர்.

கட்டியக்காரன் சபைக்குவருகிற பொதுவிருத்தம்.

தட்டியையிறுக்கிவெள்ளி தடியுங்கையிருக்கிப்போர்த்து
கிட்டியேயெழுப்பிமேலே கிளம்பியேபாயுஞ்சிங்கக்
குட்டியைப்போலராசன் கொலுவலங்காரஞ்செய்ய
கட்டியக்காரன்வந்து களரியிற்றோன்றினனே.

தரு இ-ம்-மோகனம்-சாப்புதாளம்.

தட்டுச்சல்லடமிட்டு சரிகை
தலைப்பாகைதான்தரித்து
மட்டில்லாக்கீர்த்திபெற்ற கட்டியக்காரன்
வந்தானிதோசபையில்

பார்ப்போர்திடுக்கிடவே கைதன்னில்
பருத்தவெள்ளித்தடியும்
தீர்த்தமாகப்பிலித்து சபைதனில்
சிறக்கவந்தாடினனே

மார்பினில்பதக்கமின்ன இருகர்தில்
வயிரக்கடுக்கன்துன்ன
சீர்மைமகமல்சொலிக்க அணிந்திந்த
திகழ்சபைதன்னில்வந்தான்

தங்கமுருந்சணிந்து மேன்மையான
சாந்துரவ்வாதணிந்து
துங்கமாகச்சபையில் கட்டியக்காரன்
சிங்கம்போலவேவந்தான்

கட்டியக்காரன்-வசனம்.

டில்லிதேசத்தை யாளாநின்ற இராஜாதிராஜன் இராஜமார்த் தாண்டனான டில்லிமகாராசன் மந்திரி பிரதானிகள்சூழ கொலுச் சபைக்கு வருகிறபடியால் வெள்ளிவாழை தங்கவாழை மகாதோ ரணங்கள் இதுகள் ஆஜராய்க் கட்டவேணும் அப்படிக்கு கட்டாவி ட்டால் இராசன் ஆக்கினைக்குள்ளாவீர்கள் ஓய்.

பொது-விருத்தம்.

மந்திரம்யாகம்வோமம் வரிசைமாதவர்கள்மற்றும்
இந்திராமுதலோர்போற்றும் இசைபெருந்தலத்தையாளும்
சந்திரடில்லிவாழும் துரைகொலுவிருக்கநல்ல
மந்திரிமார்கள்சூழ மகிழ்வுடன்வருகின்றானே.

டில்லிராஜன் கொலுவுக்கு வருகிற தரு-இ-ம்,
கலியாணி-தாளம்-ஆதி.

ராசாதிராசனான டில்லியாளும்
இராசன் கொலு இருந்து
தேசவிசாரணைகள் செய்யவெண்ணி
சிறப்பாய்ச்சபையில் வந்தான்
மந்திரிமார்கள் இருபக்கத்திலும்
வரிசையாய் சூழ்ந்துவர
சுந்தரமாய் நாட்டியப்பெண்களாட
துலங்கும் சபையில்வந்தான்
வேறுதேசத்துமன்னன் வெகுபேர்கள்
விரும்பியே பணிந்திருக்க
தூதுசெய்தவர்தமை சிஷ்டைசெய்யும்
சூராதிசூரன் வந்தான்
சாமரங்கைபிடித்து இருபெண்கள்
சந்தோஷமாய் வீசிவர
சோமன்முகம்படைத்த டில்லிவாழும்
துரைகொலுவந்தமர்ந்தான்.

டில்லிராஜன் சொல் விருத்தம் இ-ம்-பைரவி.

மாதமும்மாரிபெய்து மானிலந்தழைத்துவாழ்க
காதலாயெனதுமந்திரி கனிவுடன்மிகவும்வாழ்க
யாதவர்குடிகள்மற்ற யாவரும்தழைத்துவாழ்க
கோதிலாவெனதுசெங்கோல் குறைவின்றிவாழ்கத்தானே.

இராசன் கட்டியகாரனுக்குச்சொல்
விருத்தம் இ-ம்-தோடி.

ஆரடாகட்டியக்காரா அலைகடல்சூழுமிந்த
தாரணிராசரெல்லாம் சரிவரவேநமக்கு

சேரவேண்டியதோப்புருவும் செலுத்தினரோரில்மந்திரி மார்களைகேட்டுசீக்கிரம் வருத்துவாய்கட்டியக்காரா.

வ-ம். கேளடா கட்டியக்காரா சமுசுதிரம்சூழ்ந்த இந்தவுலகத்தின்கண் விளங்காநின்ற இந்த ஐம்பத்தாறதேசத்து ராசாக்களெல்லாம் நமக்குச் சரிவரத்தோப்புருப்பணம் கட்டிவிட்டார்களாவென்று நமது பன்னீராயிரம் மந்திரிகளையும் வரவழைத்துக்கேட்டு அதிசீக்கிரத்தில் தெரிவியும்பிள்ளாய் கட்டியக்காரா.

கட்டியன்-வசனம்.

அப்படியே தெரிவிக்கிறேனையா சுவாமி.

கட்டியன்-மந்திரிக்குச்சொல்

விருத்தம் இ-ம்-கெண்டா.

மந்திரிமாரேகேளாய் மறுதேசமன்னரெல்லாம்
தந்திடுவாய்தாவெல்லாம் சரிவரயீந்திடாரோ
உந்தனைவேந்தன்கேழ்க்க உரைக்கிட்டார்சீக்கிரத்தில்
சிந்தையிலறிந்தமட்டும் செப்புவீர்செப்புவீரே.

வ-ம். கேளுங்களையா மந்திரிமார்களே இந்த ஐம்பத்தாறுதேசத்து மன்னரெல்லாம் நமக்குக்கட்டவேண்டிய வாயித்தாபணம் முழுதுங்கட்டிவிட்டார்களாஇல்லையாவென்று நமதரசன்தங்களைக் கேட்டுத்தெரிவிக்கும்படி உத்தரவளித்தாரையா மந்திரிமார்களே.

மந்திரி கட்டியனுக்குச்சொல் விருத்தம் இ-ம்-தன்னியாசி.

கட்டியக்காராகேளாய் காசினிராசரெல்லாம்
கட்டிடும்வாய்தாவெல்லாம் கணக்குடன்செலுத்தினராம்
ஒட்டதேசத்துநல்ல செட்டிமூன்றுண்டாய்வாய்தா
கட்டவேயில்லையென்று கடிகினில்போய்சொல்வாயே.

வ-ம். கேளும்பிள்ளாய் கட்டியம் ஐம்பத்தாறுதேசத்து ராசர்களில் அன்பத்தைந்துதேசத்து பணமாத்திரம் வரவில்லையென்றும் நமது அரசனுக்கு தெரிவியும் பிள்ளாய்.

கட்டியன்-வசனம்.

நல்லதையா மந்திரிமார்களே.

கட்டியன்-ராசனுக்குச்சொல்-வசனம்.

கேளுங்களையா சுவாமி நம்முடைய பன்னீராயிரம் மந்திரிமார்களையும் அறுபதினாயிரம் இங்கிலீயர்களையுங்கேட்டதில் ஐம்பத்தைந்து தேசத்து பணம் ஜடாவாய் வந்துவிட்டதென்றும் மூன்று வருஷகாலமாக ஒட்டதேசத்து பணம் வந்து சேரவில்லையென்று சொல்லுகிறார்களையா சுவாமி.

இராசன் கட்டியனுக்குச்சொல் விருத்தம் இ-ம்-நாட்டை.

நல்லதுகட்டியக்காரா நலம்புகழ்மந்திரியின்னம்
வல்லகிங்கிலியரோடு வலுமைசேர்படைவீரர்க்கும்
சொல்லுவாய்ஒட்டதேசத்து முதல்வனையெந்தன்முன்னே
சலுதியில்விடும்படிக்கு க்ஷணத்தினில்சொல்வாய்நீயே.

வ-ம். கேளடா கட்டியக்காரா நல்லது நமது மந்திரி கிங்கிலியரின்னம் நமது படைவீரர்கள் யாவரும் அதிசீக்கிரத்தில்சென்று அந்த ஒட்டதேசத்தில் முதன்மையாயிருக்கிற ஒட்டனைப் பிடித்து வரும்படி சொல்லடா கட்டியம்.

கட்டியன்-வசனம்.

அப்படியே சொல்கிறேனையா சுவாமி.

கட்டியன்-கிங்கிலியருக்குச்சொல்-வசனம்.

ஆனால் கேளும் கிங்கிலியர்களே ஒட்டதேசத்து தோப்புறு பணம் மூன்றுவருஷமாக வராமலிருப்பதினால் சீக்கிரமாகச்சென்று ஒட்டர்களுக்குத் தலைவனாயிருக்கிறவனைப் பிடித்துவரும்படியாக நமது அரசன் கட்டளையிட்டார் கிங்கிலியர்களே.

கிங்கிலியர்சொல்-வசனம்.

அப்படியே செய்கிறேன் கட்டியக்காரரே.

கிங்கிலியர் அரசனுக்குச்சொல்-விருத்தம்.

துஷ்டநிக்கிரகசிஷ்டபரிபாலன சூரமார்த்தாண்டாபோற்றி
நிஷ்டூரகண்டர்களைக்கண்டிக்குமதிதீர நிற்பயவேந்தாபோற்றி
அஷ்டதிக்குள்ளோர்வாழ்த்தியேபோற்றிடுமதிசூரவீராபோற்றி
இஷ்டமுடனொட்டதேசம்வாழ்தலைவனையிதோ கொண்டுவந்தேன்
[வேந்தே.

வ-ம். துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலன சூரமார்த்தாண்டா நிஷ்டூரகண்டர்களைக் கண்டிக்கு மதிதீரநிற்பயவேந்தே எட்டுதிக்குள்ளோர்கள் வாழ்த்தியேபோற்றிடும் அதிவீரசூர பராக்கிரமசாலியாகிய ராஜாதிராஜகெம்பீரனான டில்லிவாழ் வேந்தனே சரணம் தங்களிஷ்டப்படி ஒட்டதேசத்து தலைவனை இதோ தங்கள் சமுகத்துக்குக் கொண்டுவந்தேன் மகாராஜனே.

டில்லிராசன் சாமி ஒட்டனுக்குச்சொல்
விருத்தம் இ-ம்-காம்போதி.

என்னடாவொட்டாநீதான் இவ்வளவுகாலமாக
உன்தேசவாய்தாவிற்கு ஒனறுமேகொடுக்கவில்லை
பன்னடாசீக்கிரத்தில் பணமதுசெலுத்தாவிட்டால்
கன்னியங்குறைந்துவீணாய் கட்கத்திறஞ்சையாவாயே.

வ-ம். கேளும்பிள்ளாய் ஒட்டநாட்டானே ஏன் நீங்கள் மூன்றுவருடகாலமாக உங்கள் தேசத்துபணம் செலுத்தாமலிருக்கின்றீர்கள் இக்ஷணம் செலுத்தினலாச்சுது செலுத்தாவிட்டால் உன் கௌரவங் குலைந்து என் வாளுக்கு இரையாகுவாய் ஒட்டநாட்டானே.

சாமிவொட்டன்சொல் வசனம்.

சரணம் சரணமையா சுவாமி எங்களுடையதேசத்தில் மூன்றுவருடகாலமாக மழைத்தண்ணீரில்லாமல் தென்னை சாமை வரகு சோளம் கருங்குருவை இப்பேர்ப்பட்டானின்ற நவதானியம் விளையாதபடியினல் பஞ்சகாலம்வந்து நாங்கள் மிகவும் கஷ்டத்தையடைந்துக்கொண்டிருக்கிறோம் இந்தவருஷம் மாகுலை கொடுத்து உங்களுக்கு செலுத்தவேண்டியபணத்தை ஜாடாவாய் செலுத்துகிறேனையா சுவாமி.

இராசன்-சாமிவொட்டனுக்குச்சொல்

விருத்தம்-மோகனம்.

பஞ்சங்கள்வந்ததென்றும் பாழ்நரகாச்சுதென்றும்
அஞ்சாமல்சொல்வதுந்தன் ஆண்மையோயதனையாலும்
கொஞ்சமும்நம்பேன்நம்பேன கூறியவாரமொன்றில்
தஞ்சமென்றென்மின்றொக்கம் தான்செலுத்திடுவாய்சொன்னேன்

வ-ம். கேளும்பிள்ளாய் ஒட்டநாட்டானே பஞ்சங்கள் வந்ததென்று அஞ்சாமல்சொல்லவந்தாய் கொஞ்சமும் நம்பமாட்டேன் ஆனதினல் ஒருவாரத்திற்குள் பணத்தை ஜாடாவாய் செலுத்தாவிட்டால் உன்கண்ணைப்பிடுங்கி சித்திரவதைசெய்து போடுவேன் ஒட்டநாட்டானே.

அப்படியே செலுத்துகிறேனையா சுவாமி

பொதுவிருத்தம்.

சந்தனக்களபகெந்தம் தரித்திடும்மேனிவாட
சிந்தையில்வருந்தமுற்று தேவியுந்தானுமாக
எந்ததேசத்திற்கேனும் ஏகியேபிழைப்போமென்று
வந்திட்டான்சாமிஒட்டன் மனைவிதன்னுடனே தானே.

காசிருந்தாகொண்டுவாடா என்ற அரிச்சந்திரவிலாச

வர்ணமெட்டு.

சந்தனப்பொட்டுமிட்டார் ஒட்டநாட்டா சரிகைதுணியணிந்து
விந்தையுடன்சபையில் விரைவுடன்வந்தனனே
முண்டாசுதானிறுக்கி முகத்தில்மீசைமுறுக்கி
கொண்டமனைவியுடன் கொலுவில்வருகின்றானே

தங்கப்பதக்கமிப்போ சாந்துசவ்வாதணிந்து
சிங்காரமாகவேதான் சிறப்பாகவந்தனனே
மாரில்மூந்நூலணிந்து மரகதமாலையணிந்து
பாரில்புகழ்பெருக பதியில்வந்தனனே
கச்சைவரிந்துகட்டி கருங்கச்சைசுங்குவிட்டு
இச்சையுடன்சபையில் இளங்கொடியாளோடிவந்தாள்
காதில்கடுக்கன்மின்ன கால்கச்சைசப்தமிட
ஜோதிமுருகணிந்து துலங்கும்சபையில்வந்தாள்

சாமிஒட்டன்-பெண்சாதிக்குச்சொல்-விருத்தம்.

இ-ம்-நாதநாமக்கிரியை.

மங்கையரேநமதுதேசத்தில்மூன்று
வருஷமாய்மழைத்தண்ணீரில்லாதாலே
எங்கினுமேபயிர்கள்விளைவிலாமலே
ஏழைகளானும்டில்லிராசனுக்கு
தங்கிவிட்டதின்றுடனே மூன்றாண்டுவாய்தா
சரிவரவேவாரமொன்றில் செலுத்தாவிட்டால்
சங்கடங்கள்வருமினியித்தேசம்விட்டு
சனுதியினில்மறுதேசம்செல்வோம்வாராய்.

சாமிவொட்டனுக்கும் சித்திரவல்லிக்கும்-தர்க்கம்.

குள்ளத்தாரா வர்ன மெட்டு.

ஆண் மங்கையரேபென்னசெய்வோம்-ஒட்டப்பெண்ணே
மறுதேசம்போகவேணும்
மறுதேசம்போகாவிட்டால்-ஒட்டப்பெண்ணே
மாண்டுமடிந்திடுவோம்

பெண் மாண்டுவிட்டால்தோஷமில்லை-ஏசாமிநாம்
ஆண்டிருந்தசீமையிலே
ஆண்டிருந்தசீமைவிட்டு-ஏசாமி
தாண்டிடவுமாகாதையா

ஆண் ஆகாதுயென்றுசொன்னால்-டில்லிராசனால்
ஆக்கினைவருகுமடி
ஆக்கினைவருகுமுன்னே சித்திரவல்லிநாம்
அடுத்தஊருபோகவேணும்

பெண் போகவேணுமென்றுசொன்னீர்-ஏசாமியெந்தன்
பொல்லாதசாலமோதான்
பொல்லாதகாலமோதான்-ஏசாமி
பிழைமோசம்வந்ததையா

ஆண் பிழைவருகுமென்றுசொல்லி-சித்திரவல்லி
பெண்புத்தியாலேசொன்னாய்
பிழைக்குமிடந்தனிலே-அடிமாதே
பிழைவருவதென்னமோடி

பெண் பிழைவருவதென்னவென்று-ஏசாமிநீர்
பெண்புத்திகெட்டதென்றீர்
பெண்புத்தியாலல்லவோ-அநேகம்
பெயர்கள்பதவியடைந்தார்

ஆண் பதவியடைந்தாரென்று-அடிமாதே
பதறாமல்சொல்லவந்தாய்
அதனாலானிராவணனும்-தங்கையாலே
அறிவாயோபெண்மயிலே

பெண் அறிகுவேன்என்சுணவா-வல்லாளன்
அடைந்தவிதமுமக்கு
தெரியாமல்போவதென்ன-ஏசாமியுன்
சித்தம்போலேநடப்பேன்

ஆண் நடப்பதுவுண்மையடி-சீதையாலேஸ்ரீ
ராமன்மதிமயங்கி
தொடர்ந்தானேமானதுபின்-இதுபொய்யோ
தோகையரேபெண்மயிலே

பெண் தோகையரேயென்றுரைத்த-ஏசாமிசிறுத்
தொண்டர்கதைகேட்டிலையோ
ஆகையினாலென்மொழியை-கெட்டதென்றுநீர்
அறைவதுமக்கழகோ

ஆண் அறைவதுமுண்மையடி-அடிமாதே
அடுக்காமொழியுரைத்தாய்
புருஷன்சொல்தள்ளினரோ-நீசொன்னவர்கள்
பெண்மயிலேசொல்லடிநீ

பெண் சொல்லடியென்றுரைத்தீர்-ஏசாமிநீர்
சொன்னதுபோல்நடக்க
வல்லவள்நானல்லவா ஏனையாவுன்
மனதுபோல்வாரேனையா

ஆண் வாரேனென்றுசொன்னாயடி-அடிமாதேகாம்
மனவருத்தமில்லாமலே
தூரதேசம்போய்பிழைக்க-அடிமாதேயென்
சுந்திரமேவந்திடடி

பெண் வருகிறேன்நாயகரே-ஏனையாவுன்
மனதில்வருத்தம்வேண்டாம்
வருத்தங்கள்வேண்டாமையா-ஏசாமி
வழிகள்நடந்திடுவோம்

ஆண் நடந்துவிடுவோமடி-சித்திரவல்லி
நலமுள்ளசீமைத்தேடி
சீமையில்நாமும்சென்றால்-சித்திரவல்லி
செழிப்பாயிருக்கலாமே

பெண் செழிப்பாயிருப்போமென்றீர்-ஏசாமி
தேசவரும்நடக்க
இந்தவழிகள்நடக்கையிலே-ஏசாமி
வலியனுங்கட்டுதையா

சித்திரவல்லிசொல்-விருத்தம் இ-ம்-முகாரி.

வஞ்சகன்வலிய ஆந்தை வலப்புறமாகுதையா
என்செய்வேன்கருடன்பூனை யிடப்புறமாகக்கண்டேன்
சஞ்சலத்தோடுமங்கை தனைவிரித்தழுதுவாருள்
பஞ்சமாபாவிவொத்தப் பார்ப்பானுமெதிரிட்டானே.

சாமிஒட்டன்சொல்-தரு.

ஆண் வலியனுங்கட்டுதென்று-சித்திரவல்லியே
மனவருத்தம்வைக்காதடி
மனவருத்தம்வைக்காதடி-சித்திரவல்லிநாம்
வயர்பிழைக்கப்போறோமடி

பெண் போகிறோமென்றுசொன்னீர்-ஏசாமியிதோ
பொல்லாதஆந்தையொன்று
பொந்திலிருந்துக்கொண்டு-ஏசாமியிதோ
புலம்பித்தவிக்குதையா

ஆண் கூடினஆண்குருவி சித்திரவல்லியது
கூடுவிட்டுப்போனதினால்
கூடுவிட்டுப்போனதினால்-பெண்குருவி
கூவியழைக்குதடி

பெண் கூவியழைக்குதென்றீர்-ஏசாமி
குணமானபூனையொன்று
குணமானபூனையொன்று-ஏசாமி
குறுக்காகநடக்குதையா

ஆண் குறுக்காகநடக்குதென்று-சித்திரவல்லிநீ
கோதையரேயெண்ணாதடி-அடி

யெண்ணிடவேண்டாமடி-சித்திரவல்லி
யிருளன் துணையிருப்பார்

பெண் இருளன் துணியிருந்தால் எசாமிநாம்
இப்படிகாணுவமோ
கருடனிடப்புறமாய் எசாமிநாம்
காண்பேன்வசகுனம்

ஆண் சகுனங்களாகுமென்று-அடிமாதேநீ
தவிப்பதுஞாயமல்ல
பகவான்கிருபையுண்டு அடிமாதேநமக்கு
பயமொன்றுமில்லையடி

பெண் பயமொன்றுமில்லையென்று-எசாமிநீர்
பகர்ந்ததுஉண்மைதானே
வயதிற்மிகுந்தவனும்-ஒத்தைப்பார்ப்பான்
வருகிறான்பாரெதிரே

ஆண் வேதியர்வருவதினால்-சித்திரவல்லியே
நமக்கிடரொன்றும்வருதடி
விதிபோலேநடக்குமல்லால்-அடிமாதேநீ
வேறொன்றும்எண்ணுதடி

சித்திரவல்லிப்பெண்சொல் விருத்தம் பைரவி.

ஆவியில்ஆவியான அன்புள்ளதுணைவாகேளாய்
பாவியும்டில்லிவேந்தன் படுத்திய துயரத்தாலே
காவியில்புகுந்துநாமும் கடுகியேநடந்துவந்தோம்
மேவியேயிருப்பதெங்கே விபரமாய்தெரிவிப்பாயே

பெண் என்னுதேயென்றுசொன்ன-எசாமியிது
எந்தவூருஎந்ததேசம்
எந்தவூர்யார்தேசமோ எசாமி
எனக்கறியச்சொல்லவேண்டும்

சாமி ஒட்டன் சொல் தெம்மாங்கு.

சொல்லுகிறேன்கேளடியே தோகைமனோரஞ்சிதமே
வல்லமையாய்வாழ்ந்திருக்கும் வலமானதிண்டிவனம்
நல்லமதிபெண்ணரசே நாயகியேயென்பிறகே
மெள்ளநடந்துவாடி மோகனங்கிபெண்மயிலே

தரு.

ஆண் சொல்லுகிறேன்கேளடியே-அடிமாதேயென்
தோகைமனோரஞ்சிதமே

குளஞ்செட்டிவெட்டுவெட்டும்-அடிமாதே
இதுகுணமானதிண்டிவனம்

பெண் திண்டிவனத்தெருவே-எசாமிநான்
திரும்பிநடக்கையிலே-புது
தோணடியிடுப்பில்வைத்து-எசாமியிதோ
தோகையரும்வாருளேயா

ஆண் தண்ணீர்குடமெடுத்து-சித்திரவல்லியே
தையலரும்வந்தாலுமே-அது
தவறிகீழேவிழுந்தால்-சித்திரவல்லியே
தண்ணீர்குடம்போய்விடுமே

பெண் தண்ணீர்குடம்போகுமென்றீர்
தையலர்ஒருத்தியவள்
தலையைவிரித்துக்கொண்டு-என்சாமிஅவள்
தானழுதுவாருளேயா

ஆண் செய்யாதகுற்றங்களைச்-சித்திரவல்லியே
செய்ததினாலேயல்லோ
செய்ததினாலேயல்லோ-அடிமாதேஅவன்
தெருவிலேவிட்டானடி

பெண் தெருவிலேவிட்டானென்றீர்-எசாமிநான்
செல்லுமிடந்தானெங்கே
செல்லுமிடங்களையும்-என்சாமிநீர்
தெரிந்திடச்சொல்லுமையா

ஆண் தெற்கேவெகுதூலைதான்-சித்திரவல்லியிதோ
தென்னமரச்சோலைபாராய்
தென்னமரச்சோலைபாராய்-சித்திரவல்லி
சிங்காரவனங்கள்பாராய்

பெண் தென்னமரச்சோலைகண்டேன்-என்சாமி
சிங்காரவனத்தைக்கண்டேன்
சிங்காரவனத்தருகே-என்சாமிநான்
சிற்சாலடிகாணேன்

ஆண் காணேனென்றுசொன்னதொரு-சித்திரவல்லியேஎன்
கானக்குயிலன்னமே
அன்னமேசத்திரத்தே-சித்திரவல்லியேஉன்
கண்ணாரப்பாரடியே

பெண் கண்டேன்மனமகிழ்ந்தேன்-என்சாமி
கவலைமிகத்தெளிந்தேன்

கண்ணூளர்சத்திரத்தில்-என்சாமிஇந்த
கட்டழகிவீற்றிருப்பேன்

ஆண் வீற்றிருப்பேனென்றுசொல்லும்-சித்திரவல்லி
மெல்லியரேசொல்கிறேன்கேள்
மேல்நாடுசீமைசென்று- சித்திரவல்லிநான்
வேலைசெய்துவாரேனடி

பெண் வேலைக்குப்போரேனென்று-என்சாமிநீர்
விருப்பமுடனேசொன்னீர்
விருப்பமுடனேசொன்னீர்-என்சாமிநீர்
பொறுக்கமுடியவில்லை

ஆண் ஆகாதுயென்றுசொன்னூய்-சித்திரவல்லிநான்
அரும்பஞ்சம்வந்ததடி
பஞ்சம்பிழைக்கவேதான்-சித்திரவல்லிநாம்
பாவையரேவந்தோமடி

சாமிஒட்டன்சொல் விருத்தம்-இ-ம் முகாரி

பஞ்சத்தால்தேசம்விட்டு பட்டினியோடிருந்து
வஞ்சிநாமிந்ததேசம் வந்திட்டோம்சத்திரத்தில்
கஞ்சிகாய்ச்சியேநாமுண்ண கையினில்காசுமில்லை
கொஞ்சிடும்கிளிசொல்மாதே கூலிவேலைக்குப்போறேன்

அரிச்சந்திரவிலாசத்தில் பாலாபெண்ணகாலம்
வந்துதோடா என்கிற வர்னமெட்டு.

சாமிஒட்டன்சொல்-கண்ணிகள்-செஞ்சுருட்டி-ரூபகம்.
வேலைசெய்துவாரேனடி-அன்னமே ஆஆ சொர்னமே
ஒண்டோடியேகேளு திண்டிவனமது
அண்டிவந்தோமிங்கே பண்டுடனேவிதே வேலை

சித்திரவல்லி சொல்லல்.

ஆண்டநகர்விட்டு வந்தமன்னவா ஆஆ சொன்னவா
அண்டவொருவரும் கண்டிலனேயிங்கு
ஒண்டியாகயென்னை விண்டிருக்கச்சொன்ன ஆண்

சாமி ஒட்டன் சொல்லல்.

மாதேநீவயங்கிநீயழுகாதே ஆஆ அன்னமே
சத்திரந்தனிலே பத்திரமாயிரு
நத்திவேலைசெய்து பத்திவாரேன்கூடி வேலை

சித்திரவல்லி சொல்லல்.

மாலையிட்டநாள்முதலாய் மன்னவா ஆஆ சொன்னவா
கன்னியரைவிட்டு மன்னுபிரிந்நீரோ
முன்னவன்விதியால் அந்நீதமாய்ப்போ ஆண்

சாமிஒட்டன் சொல்லல்.

என்னநாம்செய்வோமடி அன்னமே ஆஆ சொர்னமே
சூழ்ந்தவினையாலே வாழ்ந்தவூரைவிட்டு
நேர்ந்துலகினில் தாழ்ந்துயேழையானோம் வேலை

சித்திரவல்லி சொல்லல்.

இந்தவிதிவந்ததென்ன மன்னவா ஆஆசொன்னவா
சொர்னமேனி வர்னமுகம்வாடிட
நிர்ணமாய்மண்ணை வானமாய்வார ஆண்

சாமிஒட்டன் சொல்லல்.

பஞ்சமதுவந்தததுஅன்னமே ஆஆசொர்னமே
கலங்கியனைவரும் வலங்கொண்டோடிய
நலங்கியேமன மிலங்கியேவந்தோம் வேலை

சித்திரவல்லி சொல்லல்

போரேனென்றுசொல்லவந்த மன்னவா ஆஆ சொன்னவா
சென்றுநீரில்விடம் நன்றாய்வருமட்டும்
நின்றுயெதிர்பார்த்துகொண்டிருப்பேனானும் ஆண்

சாமி ஒட்டன் சொல்லல்.

மங்கையரேநீமயங்காதே அன்னமே ஆஆ சொர்னமே
கழுதொன்றில்லாமலே தொழுதுவேலைசெய்து
பொழுதுபோகுமுன்னே வழுவாகயான்வாரே வேலை

சித்திரவல்லி சொல்லல்.

வாரேனென்றுசொன்ன என்மன்னவா ஆஆ சொன்னவா
கிட்டமாகவே எட்டியிவ்வூரினில்
கிட்டவேலைசெய்து சட்டெனவேவாரும் ஆண்

சாமிஒட்டன் சொல்லல்.

வாருமென்றுசொன்னையடி அன்னமே ஆஆ சொர்னமே
உத்தமியேகேளும் மத்தியானவேளை
நத்தியப்பசுக்கு சித்தமெப்படியோ வேலை

சித்திரவல்லி சொல்லல்.

செய்வதென்னவென்றுசொன்னமன்னவா ஆஆசொன்னவா
ஐயமில்லாமலேசெய்யுமிடஞ்சொல்லும்
நொய்போட்டுக்காச்சியே கையில்கொண்டுவாரேன் ஆண்

சாமி ஒட்டன் சொல்லல்.

கஞ்சிகொண்டுவாரேனென்றுசொன்ன ஆஆசொர்னமே
ஐந்துமாதகெற்ப முந்தனுக்கானதே
எந்தவிடந்தேடி வந்திடுவாய்காடி வேலை

சித்திரவல்லி சொல்லல்.

விடமுந்தெரியாமல்போனால் மன்னவா ஆஆ சொன்னவா
தங்கும்வூரிலே இங்கிதமாகவே
அங்குள்ளயோசனை மங்கைகேட்டுவாரேன் ஆண்

சாமிஒட்டன் சொல்லல்.

என்னவிதியெழுதினனந்தபாவி அன்னமே ஆஆ சொன்னமே
சோதியாம்மேல்நாட்டை நீதியாண்டதுபோல
பாதியாய்மெய்வாடி வாதைபுரிந்தோமே வேலே

சித்திரவல்லி சொல்லல்

சமையல்செய்துநானிருப்பேன் மன்னவா ஆஆ சொன்னவா
ஆக்கியசோறதை சீக்கிரமாகவே
தூக்கியும்மைதேடி நோக்கியேயான்வாரேன் ஆண்

பொது-விருத்தம்.

இப்படியாகத்தானே யேந்திழைபுகழஒட்டன்
செப்பினன்கஞ்சிகொண்டு சீக்கிரம்வருவாயென்று
கொப்பெனவுரைத்துத்தானுங் கூடியவூரிற்சேர்ந்து
அப்போதுகூலிவேலைக் கன்புடன்கேட்கலுற்றான்.

வ-ம். இந்தப்பிரகாரமாக தன்பெண்சாதிசொன்னவுடன் சாமி ஒட்டன் கஞ்சி காச்சிக்கொண்டு சீக்கிரம் வரும்படியாக மனைவியுடன் சொல்லி தாம் வேலைசெய்ய செல்க்கிரவிதங்காண்க.

சாமிஒட்டன் வேலைக்குப்போகிற தரு.

அரிச்சந்திரவிலாசத்தில் காசிநாதாயிதுவுன்
னருளோ வெனறவர்ணமெட்டு.

வேலையெனக்களிப்பாரில்லையோ
விதியாம்பாட்சா விதியளிக்காமலே
பதியைவிட்டுநான் மதிகலங்கிவந்தேன் வேலை

மேல்நாட்டையாண்ட ஒட்டன்நானே
மெத்தவும்பஞ்சமும் சுற்றிடவவ்வூரில்
பற்றியமனையாளோடேற்றயிவ்வூர்வந்தேன் வேலை

வண்ணமதாகசுவர் வைப்பேன்
திண்ணமில்லாமலே மண்ணதுங்கூட்டியே
கண்ணில்காணவெகு உன்னிதமாய்செய்வேன் வேலை

ஓடடன்கல்லுகளறுப்பேன்
ஓங்கியேகுழியை பாங்குடன்போடுவேன்
வாங்கியேவெந்தன் தாங்கிதரம்பிரிப்பேன் வேலை

தூரவுடன்யேறித் தொழில்புரிவேன்
தூரவருவேன் வீரியமாகவே
காரியமாயின்னங் கூறிடும்தொழில்செய்வேன் வேலை

சித்திரவல்லி விருத்தம் முகாரி.

பாவிவயிற்றுதித்துயிந்த பார்தனில்யான்பிறந்து
ஆவிதைக்குதையோ ஆசிவநாயகனே
கூவியழுதாலும் குறைதெரிந்துஆதரிக்க
பூவுலகிலொருவரில்லை பெண்ணுளுமென்னசெய்வேன்.

சித்திரவல்லி புலம்பல்.

இந்திரசபாவில் நொய்யுதோ நெஞ்சமிதோ
என்கிற வர்ணமெட்டு.

பல்லவி.

ஐயோநானென்னசெய்வேன் ஆருமற்றபாவியானேன்

அநுபல்லவி.

தையலர்க்கிந்தவிதி தானளித்ததேனுசாமி
பாங்கியர்கள்எவலும்போய் பரதேசியானேனையா
தேங்கியேசத்திரத்தில் தானிருக்ககாலமாச்சே ஐயோ
கஞ்சிகாச்சவகையறியேன் கனையுடனேதானிருப்பார்
வஞ்சியர்க்கிந்தவிதி வாய்த்ததென்னபிரமதேவர் ஐயோ
ரங்கப்புறந்தனிலே பொங்கமுடனேபிறந்து
சங்கையில்லாமலென்னை சாமிஒட்டர்மாலையிட ஐயோ

சித்திரவல்லி புலம்பல்.

அரிச்சந்திரவிலாசத்தில் மறையவனேவிந்த
என்கிற வர்ணமெட்டு.

அய்யோதெய்வமேயிந்த அவதிக்குள்ளாக்கிறுய்
அறிவைநான்படவசமோ தெய்வமே
ஆண்டிருந்தசீமையிலே அரும்பஞ்சங்கள்வரவு
மாச்சுதென்னசெய்வேனையா தெய்வமே
பஞ்சத்தாலேயிருவர் பரதேசிபோல்கிளம்பி
படுந்துயர்பார்க்கொணுதோ தெய்வமே
பாவிநான்பெண்பிறந்து பட்டினிக்கிடக்கவும்
பலபேர்நகைக்கவிட்டாயோ தெய்வமே
கூலிவேலைக்குப்போன கொழுனனுக்கஞ்சிநான்
கொண்டுபோகவேணுமே தெய்வமே
நெல்குத்துவமென்றாலும் கூசுதேயிருகையும்
கொழுநனுக்கேதுரைப்பேன் தெய்வமே

பொது விருத்தம்.

இவ்விதமாய்ப்புலம்பியிருக்கும்போது
இடதுகையில்தோடாசங்கிலியும்பூண்டு

அந்தமுள்ளகிரேகமதில் அங்கியிட்டு
அரையில்கச்சைசல்லடமும் அரைஞாணுடு
சுந்தரஞ்சேர்மதுரைசொக்கர் தமக்குநல்ல
தூயவஸ்திரம்சாத்திட அவ்வழியாய்த்தானே
வந்தசெதாருஒட்டனவன் சத்திரத்தில்
வந்துநின்றான்மாதுஒட்டப் பெண்ணைக்கண்டான்.

வ-ம். இவ்விதமாகவந்த கள்ளஒட்டன் சத்திரத்திலிருக்கும் சித்திரவல்லிப்பெண்ணைக் கண்டவுடன் காமமானது மிஞ்சி கெட்ட சிந்தையுள்ளவனாய் அவளிடம் வார்த்தையாடுகிற விதங்காண்க.

கள்ளஒட்டன்சொல் விருத்தம் தோடி.

புருஷனைப்பிரிந்துமாது போரயிச்சத்திரத்தில்
பரதவித்திருக்கும்பெண்ணே பகர்வதைக்கேளாயிந்த
சிறுவயதிலுனக்கு தீங்குகள்வந்ததென்ன
ஒருமைபாலெனக்குரைத்தால் நின்றுயரகற்றுவேனே.

கள்ளஒட்டன் தரு.

அன்னம்போலிங்கிருந்த ஏமாதேநீ
ஆரடிபுலம்புறது
ஆடிபுலம்புவது ஏமாதேநீ
அறியவுரைக்கவேண்டும்
இந்திராணிமேனகையோ ஏமாதேநீ
எவரிடதாரமோடி
கந்தருடவள்ளியரோ ஏமாதேநீ
கமலசரஸ்வதியோ
ஊர்வசிரம்பையோடி ஏமாதேநீ
உரைத்திடலாகாதோடி
மார்மேல்ஜலம்பெருக ஏமாதேநீ
மனங்கலங்குவதென்ன
அரிச்சந்திரன் தேவியோடி ஏமாதேநீ
அணங்கனமனைவியோடி
தெரிந்திடச்சொல்லடிநீ ஏமாதேநீ
சொல்லவேணுமம்மாதுரை
வர்ணக்கிளிமொழியே ஏமாதேநீ
மனவருத்தம் ஆவதென்ன
மனவருத்தம் ஆவதென்ன ஏமாதேநீ
வந்திடுவாயென்பிறகே

பொது விருத்தம்.

இப்படிக்கள்ளவொட்டன் யியம்பியவார்த்தைதன்னை
மைப்பிடிவிழியானான மாதுசித்திரவல்லிகேட்டு

யெப்படியிவனோடேநாம் யியம்புவோம்பதிலென்றெண்ணி
சூப்புறதலைகுனிந்து கோதையாள்கூறுவாளே.

சித்திரவல்லி-தரு.

தனியாயிருந்தவென்னை ஏசாமி
தானழைத்துகேழ்ப்பதாரு
கேழ்ப்பதுயார்தானையா ஏசாமியிந்த
கேடுகெட்ட சத்திரத்தில்

கள்ளஒட்டன் தரு.

சத்திரத்திலொண்டியாக ஏமாதே நீ
தனியாயிருப்பதென்ன
தனியாயிருப்பதென்ன ஏமாதேயிந்த
சங்கதியை சொல்லடி நீ

சித்திரவல்லி தரு.

சங்கதியைகேழ்க்கவந்தாய் ஏசாமிநாங்கள்
தலைவிதியாலேயல்லோ
யெங்களுடதேசம்விட்டு ஏசாமிநாங்கள்
இங்கேவரலானோமையா

கள்ளஒட்டன் தரு.

வந்தவிபரமதை ஏமாதே நீ
வகையுடன்சொல்லவேணும்
உந்தன் துயரமெல்லாம் ஏமாதே நீ
உரைத்தால் விலக்கிடுவேன்

வசனம்,

கேளாய் சித்திரவல்லியே உன்னைப்பார்த்தால் இரம்பை ஊர்வசிதிலோர்தமை மேனகை இந்திராணியோ அல்லது சந்திரமதியோரதியோ யாள்யாரெனசொல்லத்தகும் உன்னுடைய ரூபசவுந்தரியத்தைகண்ணுற்று நோக்கினால் ஆயிரம்பணாமுடியைத் தரித்த ஆதிசேஷனாலும் சொல்ல முடியாததுபோல் காணுகின்றதே ஆனால் சிற்றறிவுடைய யென்னாலியன்றவரையில் சொல்லுகிறேன்கேளடிமாதே மின்னலைப்போல்ஒளியும் மேகத்துக்கொப்பான கருங்கூந்தலும் அன்னத்தைப்போல நடையும் மலர்ந்த செந்தாமரைப்புட்பம்போன்ற முகமும் மூன்றாம் பிறைபதுபோல் உதடும் விளக்கின் சுடர்போன்ற மூக்கும் தாழமடல்போல் தாழ்வையும் வெண்செங்கைபோல் காதுகளும் யானை மஸ்தகத்தைபோன்ற இரண்டு புஜமும் மன்மதன் கணைபோல மார்பும் பூரண விம்பத்தைப்போன்ற ஸ்தனமும் ஆலம் இலையைப்போல் வயிறும் சுழியதுபோல் தொப்புகளும் சிமில்போன்ற இடையும் இளவாழை தண்டது போல்துடையும் சினைவிரால்துபோல் கெண்டைக்காலும் ஆதிசேடனைப்போல்படமும் சிற்றெறும்புபோல் ரோமங்களும் இப்பேர்ப்

பட்ட இலட்சணங்கள் பொருந்தியமாதர்களுக்கு அரசரே நீ இந்த கேவலமுள்ள சத்திரத்தில் மனதுநொந்து திரேகமெலிந்து உடைகுலைந்து ஒண்டியாகவிருந்து விசனப்பட்டுக்கொண்டு இருக்கும் காரணத்தை விஸ்தாரமாகச் சொல்லவேண்டுமடி சந்திரமுகமான மயிலே.

சித்திரவல்லி-தரு.

எந்தவூருனந்ததேசம்-ஏனையா
எங்கிருந்துஎங்கேபோகிறீர்
எங்கிருந்துஎங்கேபோறீர்-ஏனையா
எனக்கறியச்சொல்லவேண்டும்

கள்ளஒட்டன்-தரு.

வடக்கேவெகுதலைதான்-ஏமாதேநான்
வளநாடுசீமைநாடு
வளநாடுசீமைவிட்டு-ஏமாதேநான்
மதுரைநகர்போரேநடி.

சித்திரவல்லி-தரு.

மதுரைக்குபோரேனென்றீர் ஏசாமியிங்கே
வந்தவயணமென்ன
வந்தவயணமென்ன ஏசாமிநீர்
வகையாகச்சொல்லுமையா

கள்ளஒட்டன்-தரு.

வந்தவிபரமதை-ஏமாதே
வரிசையுடன்சொல்கிறேன்கேள்
வயர்பசியாலேயல்லோ அடிமாதேநான்
வந்தேனடிசத்திரத்தில

சித்திரவல்லி-தரு.

சத்திரத்தில்நீரும்வந்தீர்-ஏசாமிநான்
சாதம்சமைத்துஉங்க அங்கே
தண்ணீர்துறையுண்டு-என்சாமிநீர்
சமைத்துவுங்கபோகுமையா

கள்ளஒட்டன்-தரு.

சமைத்துஉங்கவல்லடி-ஏமாதேநான்
ஜாதிகுலமென்னடிஉன்
ஜாதிகுலங்களெல்லாம்-ஏமாதேநீ
தயவாகச்சொல்லடிநீ

சித்திரவல்லி-தரு.

சம்பந்தஞ்செய்யவேண்டாம்-ஏனையாநீ
ஜாதிகுலங்கேட்கவேண்டாம்

ஜாதிகுலம்கேட்கவேண்டாம்-ஏனையா
ஜல்தியினில்சென்றுவிடும்

கள்ளஒட்டன்-தரு.

சம்பந்தம்செய்யவெண்ணி-ஏமாதேநான்
ஜாதிகுலங்கேட்கவில்லை
ஜாதிகுலங்களெல்லாம்-ஏமாதேநீ
தயவாகசொல்லவேணும.

வ-ம். ஆனால்கேள்மாதரசே நான் எதற்காக உன்வரலாற்றை விசாரிக்கிறேனென்றால் இதைவிட்டு மற்றொரு தேசம்நான்சென்று அவ்விடத்திலுள்ள எந்தசத்திரத்திலாவது வீற்றிருப்பேனேயானால் இந்த திண்டி வனம் சத்திரத்தில் ஒரு கற்புடையமங்கையைக் கண்டேனென்று யாரிடமாவது சொன்னேனேயாமானால் அவள்யாருடையபெண் அல்லது யாருடையதேவியென்று கேட்டால் பதில்மொழி நானென்னசொல்லுவேன் அதற்காகத்தான் கேழ்க்கிறேனேஒழிய வேறொன்றும் விதற்பமாக நினைத்து கேழ்க்கவேயில்லை ஆகையால் உன்ஜாதிகுலத்தை சீக்கிரமாகசொல்வாயடிபெண்ணே.

சித்திரவல்லிசொல்-வசனம்.

அப்படியே சொல்லுகிறேன் கேளுமையா

சித்திர சொல்லுகிறேன்கேளுமையா-ஏசாமிநான்
சுகமானரெங்கபுரம்
ரெங்கபுரமேதானையா ஏசாமி
எங்கள்நகரமையா

கள்ள ரெங்கபுரந்தனிலே ஏமாதேநீ
எங்கே பிறந்தாயடி
எங்கேபிறந்தாயடி ஏமாதேஉன்னை
ஈன்றதகப்பனுமேரா

சித்திர நன்றதகப்பனையும் ஏசாமி
இதமாகசொல்லுகிறேன்கேள்
சொல்லுகிறேன்கேளுமையா-ஏசாமிநான்
சுப்புசெட்டியார்மகள்நான்

கள்ள சுப்புசெட்டியார்மகளே-ஏமாதே
சுகமாகமங்கிலியம் அந்த
மங்கிலியந்தான்தரித்த ஏமாதேயந்த
மன்னவரைசொல்லடி நீ

வ-ம். ஆனால்கேளாய்மாதே இவ்வளவுநாழியாக உன்னைநான் மாதென்றும் அம்மாவென்றும் சொன்னது மகாதோஷம் வந்துநேரிடும் உன்னைநான் குழந்தைபருவத்தில் கண்டது அடையாளம் தெரியவில்லை நீசொல்லும்வரலாற்றைப்பார்த்தால் எனக்குமாமன்

மகளாகிவிட்டாய் யான் உனக்கு அத்தைபிள்ளை யாகிவிட்டேன் ஆகையால் இனி உன்னைபெண்ணேயென்று அழைப்பேன் அவ்விஷயத்தில் மனதில்கவலைவைக்காமல் உன்னுடையபத்தாவின் ஊருபேரும் சீக்கிரத்தில் சொல்லவேணுமடி பெண்ணே.

கள்ளவொட்டன் தரு-தர்க்கம்.

இந்திரசபாவில் அங்குநாலிருந்தவனே
என்கிறவர்ணமெட்டு.

என்னமோசம்வந்ததடி யேந்திழையேவெந்தனுக்கு
சொன்னவார்த்தைதனைக்கேட்டால் சொந்தமாகக்காணுதடி

சித்திரவல்லி-தரு.

சொந்தமென்றென்னைப்பார்த்து சொல்லுவதுமக்கழகோ
எந்தவிதத்திலுமக்கு சொந்தமென்றுகாணுதையா

கள்ளஒட்டன்-தரு.

சுப்புசெட்டிமகளென்று சொல்லிவந்தாயடி பெண்ணே
அப்படியானாலெனக்கு அவர்மாமனாகுதடி.

சித்திரவல்லி தரு.

மாமனென்றுரைத்தீரேநீர் வாழ்ந்திருக்கும் தேசமென்ன
சீமையிலும்மொழிபோலே செப்புவாருமபாருமில்லை

கள்ளஒட்டன்-தரு.

இல்லையென்றுரைத்தாயடி யென்னமசிவுந்தனுக்கு
வல்லமையாய்வுன்னைப்பெற்ற மங்கைபோ அத்தையடி

சித்திரவல்லி-தரு.

அத்தையென்றுரைக்கவந்தாய் அடுக்குமோவுந்தனுக்கு
என்னமுறையைக்கொண்டு இதமாகசொல்லவந்தாய்

கள்ளஒட்டன்-தரு.

சொல்லுகிறேன்மாதரரே செப்படிவுன்நாயகன்பேர்
சொல்லாவிடில்போவதில்லை சுப்புசெட்டியார்மகளே

சித்திரவல்லி-தரு.

நல்லதுகேட்டுவாரும் நாயகன்பேர்சொல்லிவாரேன்
மெல்லியரைமாலையிட்ட மிந்திரன்பேர்சொல்லுகிறேன்

வ-ம். ஆனால் கேளுங்களையா நான்பூமியிலே பெண்ணாகப்பிறந்துவிட்டேன் இனி ஆணாகப்போகிறதில்லை நாம் சொன்னதைப்பற்றியான் கவலைப்படவில்லை ஆனதினால் என் நாயகன்பேர் சொல்லிவருகிறேன் கவனமாய்க் கேளுமையா.

சித்திரவல்லி-தரு

தெற்கேவெகுதூலதான் என்னையா அந்த
மேல்நாடடில்லிபுறம் அந்த

டில்லிபுரம்மாமிசெட்டி ஏனையாயிந்த
மெல்லியரைமாலையிட்டார்

கள்ள மாலையிட்டானென்றுசொன்னாய் ஒட்டப்பெண்ணே
வேலைசெய்யநீவந்ததென்ன
வேலைசெய்யவந்ததென்ன ஒட்டப்பெண்ணேயந்த
விபரமதைசொல்லடீ

சித்தி அறியவுரைப்பேனையா ஏனையாநாங்கள்
ஆண்டிருந்தசீமையுள்ளே
ஆண்டிருந்தசீமையிலே ஏனையா
அரும்பஞ்சம்வந்ததையா

கள்ள பஞ்சங்கள்வந்ததென்று ஏமாதே
பாவையரேசொன்னபடி
பஞ்சங்கள்வந்தாலுமே ஏமாதே
பாவையரேபோகலாமா

சித்தி பஞ்சந்தெளியவில்லை ஏசாமியந்த
பாவியுடபட்டணத்தில்
பாவியுடவூரைவிட்டு ஏசாமி
பரதேசியானேனையா

கள்ள பரதேசியானேனென்றால் ஏமாதேயுன்
பத்தாவுமெங்கேயடி
பத்தாவுமெங்கேயடி ஏமாதே
பார்க்குடனேசொல்லவேண்டும்

சித்தி கூடினநாள்முதலாய் ஏசாமி
குழிவெட்டப்போனதில்லை
நாடியேபோயிருந்தார் ஏசாமிநான்
தேடிகஞ்சிகொண்டுபோரேன்

கள்ள கஞ்சிகலையங்கொண்டு ஒட்டப்பெண்ணே
காட்டுவழிநடந்தால்
காட்டுவழிநடந்தால்-ஒட்டப்பெண்ணே
கன்னிவிடுந்திரேகமெல்லாம்

சித்தி கன்னிதான்போனாலும் என்மன்னனுக்கு
கஞ்சிகொண்டுபோகவேணும்
கஞ்சிகொண்டுபோகாவிட்டால் என்சாமியவர்
களைத்துவிழுந்திடுவார்

கள்ள களைத்துவிழுவாரென்று ஒட்டப்பெண்ணேநீ
கதையாகசொல்லவேண்டாம்

நூதன பெரிய ஒட்டநாட்டார்

பூமியிலேபோருதடி ஒட்டப்பெண்ணேஉன்
பொருமைகுணங்களுக்கு

சித்தி பொருதுமென்றுசொன்னீர்விதியைவெல்ல
ஆருலேயாகுமையா
ஆருலேயாகுமையா ஏசாமி
அடியாள்விதியைவெல்ல

கள்ள வெல்லவுமாகாதடி ஒட்டப்பெண்ணே
சொல்லவுமாகாதடி
சொல்லவுமாகாதடி ஒட்டப்பெண்ணே
தோகைரதியழகி

சித்தி அழகுடன்வாழ்ந்திருந்தோம் ஏசாமிநாங்கள்
ஆண்டிருந்த சீமையிலே
ஆண்டிருந்தசீமைவிட்டு ஏசாமிநான்
அழகுங்குலைந்தேனையா

கள்ள குலைந்துவிட்டேனென்றுசொல்லி ஒட்டப்பெண்ணே
கோதையரேசொல்லாதடி
குழிவெட்டும்ஒட்டருக்கே ஒட்டப்பெண்ணே
கோதையரேயேனமர்ந்தாய்

சித்தி குழிவெட்டும்ஒட்டருக்கே ஏசாமிநான்
கோதையமரவில்லை
அமர்ந்தேனேசெட்டியார்க்கே ஏனையாநீர்
அறிந்துசெல்தென்மதுரை

கள்ளஒட்டன்சொல் விருத்தம்.

மதுரைக்குயேகுமென்று மனம்வந்துசொன்னயடி
இதுஉனக்குசம்மதமோ ஏந்திழையேபெண்ணரசே
கதியொருவரில்லாமல் கலங்குறாய்சத்திரத்தில்
சதமெனஎன்னோடுவந்தால் தையலரேபதம்பெருவாய்

கள்ளஒட்டன்-கண்ணி.

இந்திரசபாவில் என்னுடனேநீபேசாதது
என்கிறவர்னமெட்டு.

மங்கையரேயுந்தன் மையலிலேசிக்கி
மனந்தடுமாறுதே மாதரசேயென்கண்ணே
என்னுடன்கூட இதுநல்லசமயம்
ஏந்திழையேயென்னை இவ்வேளைக்கார்ப்பாயே
மாரன்கணையது சீறியேபாயுது
மடிந்தாலுமுன்னை மறவேண்டிஎன்கண்ணே

நாடக அலங்கார

கண்டவுடன்விரகக்
கன்னியரேகளே
நன்றெனஎன்னுடன்
நடந்திடுவோமறு

காமமூம்மீறுமத
மீறுதடியென்மானே
மங்கையரேவாடி
தேசங்கண்ணேயிப்போதே

சித்திரவல்லி வசனம்.

ஆனால் கேளுமையா நான்சத்திரத்தில் ஒண்டியாயிருப்பதாக எண்ணி இல்லாதவார்த்தைகளை பேசவேண்டாம் சீக்கிரமாக எழுந்து செல்லுமையா நான் கணவனுக்கு கஞ்சிகொண்டு போகவேணுமையா.

கள்ளஒட்டன் தரு.

சென்றுவிடுயென்றுசொல்லி என்கண்ணே நீ
பிண்டுதனம்பேசாதடி நீயும்
சென்றுஎன்கூடவந்தால் ஒட்டப்பெண்ணே
செழிப்பாயிருக்கலாமே.

வ-ம். ஆனால் கேளும்பெண்ணே ஆய்ந்து ஓய்ந்து பார்க்காத காரியம் தான் சாகக்கடவதென்று முன்னோர்கள்சொல்லகேள்விப்பட்டதில்லையோ அத்தன்மைகளை யுணராமல் நீஎன்னோடுவாதாடுவது சரியல்ல என்பின் தென்மதுரை வந்தாயானால் அந்த ஆயிரம் ஒட்டர்களுக்கு மேன்மையா யிருந்ததுபோல் இருந்து வருகலாம் என்னோடு தென மதுரைவந்து சேரடி பெண்ணே.

கள்ளஒட்டனுக்கும் சித்திரவல்லிக்கும் தர்க்கம்.

சித்தி செழிப்பாயிருப்பேரென்று அடபாவி நீ
சேதிவுரைக்கவந்தாய்
கழிப்பாணிமூப்பன்கண்டால் அடபாவியுன்னை
கட்டையிலடிப்பாரடா

கள்ள கட்டையிலடித்தாலுமே ஒட்டப்பெண்ணே
காமன்கணையால்மடிவேன்
கட்டியணையாமல்மடிவேன்வுன்னை
கட்டியணையவேண்டும்

சித்தி அணைவேணணைவேனென்று அடபாவி
ஆரிடத்தில்சொல்லவந்தாய்
ஆரிடத்தில்சொல்லவந்தாய் அடபாவிநீ
அடுக்குமோவையகத்தில்

கள்ள வையகத்தில்நானொருவன் ஒட்டப்பெண்ணே
வகைசொல்லும்பேர்களைத்தான்
வகைசொல்லும்பேர்களைத்தான் ஒட்டப்பெண்ணே
வாயைகிழிப்பேனடி

சித்தி ...ாயைகிழிப்பேனென்று அடபாவியுன்
மதத்தாலேசொல்லவந்தாய்
மதத்தாலேராவணனும் அடபாவி
வையகத்தில்மாண்டானடா

கள்ள மாண்டாலுமுன்னைவிடேன் ஒட்டப்பெண்ணே
மடியிலுயிரிழப்பேன்
மடியிலுயிரிழப்பேன் ஒட்டப்பெண்ணே
மாண்டுமடிந்திடுவேன்

வ-ம். ஆனால் கேளாய்பெண்ணே நீசொல்லிவந்த இராவணனு னவன் பத்துசிரசும் இருபதுகையோடு மூன்றரைகோடி வருடம் ஆயுள்பெற்று அனேகம் தேவர்கள் பணிவிடைசெய்யவும் இராட் சதனென்கிறபெயர்மாற்றி இராவணனென்கிறபெயர்தரித்து மற்ற இராட்சதர்களெல்லாம் பணிந்துநடக்கவும் அரசாண்டுவந்த இரா வணேஸ்வரன் யாண்டிருக்கும் காலத்தில் கேவலம் ஒரு சிரசுளன் ...ன் உன்னால்மடிவதால்மெத்த சுகிர்தமென்றுநினைக்கிறேன் ஒட் டப்பெண்ணே.

சித்தி இறந்துமடிவேனென்று அடாபாவிநீ
இணக்கமுடன்பேசாதடா
இணக்கமுடன்பேசினால் அடாபாவியுன்னை
விளக்குமரத்தாலடிப்பேன்

கள்ள அடித்தாலடிபொறுப்பேன் ஒட்டப்பெண்ணே
அண்டையிலேவீற்றிருப்பேன்
அண்டையிலேவீற்றிருப்பேன் ஒட்டப்பெண்ணே
அணைந்துஒருமுத்தந்தாடி

...தி முத்தந்தருவேனென்று அடாபாவிநீ
சித்தங்கலங்காதடா
சித்தங்கலங்காதடா அடாபாவிஉன்னை
சின்னப்படுத்துவேன்டா

...ள்ள சின்னப்படுத்தினாலும் என்கண்ணேஉன்னை
சேராமல்போகமாட்டேன்
சேரத்தான்வேணுமடி என்கண்ணேஉன்
சித்தமிரங்கடிநீ

வ-ம். கேளாய்பெண்ணே என்னை சின்னப்படுத்துவேனென் ...காஞ்சமேனும் உன்மனதில் இரக்கமில்லாமல் சொன்னையல்ல ...வதற்கொரு உபாயமுள்ள கதைசொல்லுகிறேன் தேவேந்திர ...மெத்த கன்டமடைந்து கிரேகமெல்லாம் யோனியாகஜெபித் ...ற்று வாடினான் ஆனதாலப்பேர்க்கொத்த தேவேந்திரபேர்

சமனுபவித்த இந்திரனே ஸ்திரீசாதியால் பங்கமடைந்திருக்கக்கே வலம் யான் பங்கமடைவதுதானே கெடுதி ஆசையால் உன்னால் என்ன கெடுதலே வந்தபோதிலும் உன்னை கட்டிச்சேராமல் போக மாட்டேனடி பெண்ணே.

சித்தி அன்னகரந்தனிலே அடபாவிநான்
இல்லாதமங்கையரோ
இல்லாதமங்கையரோ அடாபாவிநீ
என்மீது ஆசைகொண்டாய்

கள்ள ஆசைவிரதன் ஒட்டப்பெண்ணே
வேதனையாலல்லவோ
வேதனையாலல்லவோ ஒட்டப்பெண்ணே
வெந்துதணிகிறேனடி

சித்தி வெந்துதணிவேனென்று அடாபாவிநீ
விருப்பமுடன்சொல்லவந்தாய்
என்கணவன்வந்தால் அடாபாவியுனக்கு
இடையூறுநேருமடா

கள்ள கணவனும்வந்தாலுமே ஒட்டப்பெண்ணே
கட்டிவைத்தாலுமே
கட்டிவைத்தாலுமே ஒட்டப்பெண்ணையுனை
கட்டியணையவேணும்

சித்தி பத்தாயிதையறிந்தால் அடாபாவி
பதைக்கவுயிர்வதைப்பார்
பதைக்கவுயிர்வதைப்பார் அடாபாவியுன்
பட்டணத்திற்கோடிப்போடா

கள்ள உயிர்போனால்போகுதடி ஒட்டப்பெண்ணே
உன்னைவிடப்போறதில்லை
உன்னைவிடப்போறதில்லை ஒட்டப்பெண்ணேநான்
ஊருக்கும்போறதில்லை.

சித்தி மதங்கொண்டுபேசாதடாவென்கணவனும்
வருகிறநேரமாச்சு
வருகிறநேரமாச்சு உயிரோடு
வந்தவழியோடிப்போடா

பொதுவசனம்.

இந்தப்பிரகாரமாக கள்ளஒட்டனுக்கும் சித்திர வல்லியுமாக தர்க்கமாடிக்கொண்டதில் வேலைக்குப்போயிருக்கும் தன்நாயகனுக்கு கஞ்சிகொண்டுபோக தவக்கப்பட்டதால் இன்னும் நமதுநாயகி கஞ்சிகொண்டுவரவில்லையோ ஏதோ சூதாயிருக்கின்றதென்றெ

ண்ணி புசியு ரத்திற்கு வருஞ்சமயத்தில் கள்ளவொட்டன் அதுகண்டு ஒளித்துக்கொள்ள விசனமற்றிருக்கும் ஒட்டச்சியை வேலைசெய்யப்போன நாயகன்வந்துகேட்கும் விதங்காண்க.

சாமிவொட்டன்பெண்சாதியைக்கேட்குதல்.

விருத்தம்-முகாரி.

வெய்யலில்மண்சுமக்க விதித்திட்டானீசன்தானும்
தையலேவுன்னால்வாடி தவித்திட்டேன்பசியால்நொந்து
செய்ததென்னவின்னேரம் தீங்குனக்குற்றதென்ன
மெய்சோர்ந்துவாடிநிற்கும் விபரங்களுரைப்பாய்பெண்ணே

சாமிவொட்டன்-தரு.

சாமி பெண்ணேநவமணியே சித்திரவல்லியே
பூஷணமேபொற்கொடியே
கண்ணேநவமணியே சித்திரவல்லியேநீ
கலங்கியிருப்பதென்ன

சித்தி கலங்கியிருப்பதென்ன எசாமிஇங்கே
காரணமொன்றுமில்லை
தலைவிதியைநினைத்து என்சாமிஇந்த
தையலரும்வாடுறேனே

சாமி சிதேவிதன்பலத்தால் சித்திரவல்லியேநாம்
செழிக்கவேவாழ்ந்திருந்தோம்
மூதேவிவந்தாளானால் சித்திரவல்லியே
முறையிடுவதென்னமோடி

சித்தி கஞ்சிகுடித்திடுங்கள் என்சாமி
களையுந்தெளிந்திடுங்கள்
களையுந்தெளிந்திடுங்கள் என்சாமிநீர்
காற்றினில்வீற்றிருங்கள்

சாமி வீற்றிருக்கவொன்றுமடி அடிமாதேயென்னை
வெய்யிலிலேயவைக்க
காத்துயிருந்தாயோடி அடிமாதேயென்னை
கஞ்சிகொண்டு வாராதென்ன

சித்தி நெல்லுகுத்திஆக்கினதில் என்சாமி
நேரமிகவாச்சுதையா
நேரங்களாச்சுதென்று என்சாமிநீர்
கோரங்கள்கொள்ளவேண்டாம்

சாமி கோரங்கள்கொள்ளவில்லை அடிமாதே
கொண்டுவாடிகஞ்சியதை
நேரங்கள் ஆகுமுன்னே வேலைக்கிநான்
நேரிழையேபோகவேணும்

சித்தி கஞ்சியிதோவைத்தேனையா என்சாமிவுன்
களைதீரவுண்ணுமையா
கஞ்சிவரவில்லையென்று என்சாமிஉன்
மனதில்வருத்தம்வேண்டாம்

சாமி கஞ்சிகுடித்தேனடி சித்திரவல்லியே
களையுந்தெளிந்தேனடி
காடுவெட்டப்போறேனடி அடிமாதே
கட்டழகிஜாக்கிரதை

சித்தி போறேனென்றுசொன்னீரையா என்சாமியிந்த
பொடிகொடியாள்கூடவாறேன்
ஆருந்துணையில்லாமலே என்சாமியென்னை
அந்தரமாவிட்டுப்போரீர்

சாமி அந்தரமாய்வந்தோமடி பெண்ணேநமக்கு
ஆகாதகாலமடி
வந்ததனுபவிக்கவேணுமடி
வாழ்ந்திரடிசத்திரத்தில்

சித்தி சத்திரத்திலொண்டியாக என்சாமிநான்
தனியாயிருக்கமாட்டேன்
தனியாயிருக்கமாட்டேன் என்சாமிஇந்த
தையலருங்கூடவாரேன்

சாமி காடுவெட்டும்ஒட்டருடன் அடிமாதே
வீற்றிருக்கஞாயமுண்டோ
வீற்றிருக்கஞாயமுண்டோ அடிமாதேயிது
மெல்லியர்தமக்கழகோ

சித்தி அழகல்லவென்றுசொன்னீர் என்சாமிநான்
அங்கேவந்தால்தோஷமில்லை
பிழையானசொற்கள்வந்தால் ஏனையர்நான்
பெண்ணுளுமென்னசொல்வேன்

சாமி என்னபிழைகள்வருமோ அடிமாதே
எனக்கரியசொல்லவேணும்
சின்னவயதானதால் அடிபெண்ணேயென்
பின்னால்வரலாகாது

வ-ம். கேளாய்பெண்ணே நான் வேலைக்குப் போகையில் உன்னையுங்கூட அழைத்துக்கொண்டு போகலாம் நீ சிறுவயதாயி

...பதால் ...ற்கு வருகிறது ஞாயமல்ல நீ இந்தசத்திரத் ...ல் தனியாயிருப்பதால் உனக்கு என்னபிழை சொல்ல நேரிடும் அதனைச் சொல்லவேணுமடி பெண்ணே.

சித்திரவல்லி-வசனம்.

அதனால் கேளும் சுவாமி உலகத்தின் வாழ்க்கையாவது ஒரு புருஷன் ஒரு வீட்டில்வந்து தாகத்திற்குதண்ணீர் வேணுமென்று கேட்டால் அந்த வீட்டிலிருக்கும் கற்புடையமங்கைதண்ணீர்கொடுத்து தாகத்தைய தெளியவைத்துப் போகச்சொன்னால் அந்த வீட்டிலிருப்பவர்கள்பார்த்து அவர்களிரண்டுபேருக்கும் ஏதோ காரணமொன்று சொல்வார்க ளாகையால் இந்தச் சத்திரத்தில் பாட்டை சாரியாய் போகிறவர்கள் வெகுபேர்கள் எந்திறங்குவார் களக்காலத்தில் தாங்களேதாவது மனதில் சந்தேகங்கொள்வீர்கள் ஆனதால் இந்த கேவலமுள்ள சத்திரத்தில் தனியர்களென்னைவைத் துப்போவது சரியல்ல என்பிராணநாயகரே.

இந்திரசபாவில் அங்குநானிருந்தவனே
என்கிறவர்னமெட்டு
சாமிஒட்டன் தர்க்கம்-தரு

சாமி மங்கையரேவெகுநேர மாருதுநான்போய்வாரேன்
திங்கள்முகத்தாளேயுந்தன் சிந்தைகலங்கிடவேண்டாம்

சித்தி சிந்தைகலங்கிடவில்லை சீக்கிரத்தில்வாருமையா
வந்திரங்கும்பேர்களுக்கு வயர்பசியைதீர்ப்பேனையா

சாமி தீர்ப்பதினாலேநமக்கு தீருமடிசெய்தவினை
பார்ப்பவர்நம்மையொன்று பழுதுசொல்லமாட்டாரடி

சித்தி பழுதுவந்தால்நாமிந்த பாரிலென்னசெய்வதையா
அழுதாலும்விட்டிப்போகாதா தாண்டவன்செய்வதாகும்

சாமிவொட்டன் வசனம்.

ஆனால் நல்லது கேளடிபெண்ணே நீ சொல்லிவந்ததெல்லாம் சரிதான் நாம் ஆயிரம் ஒட்டர்களுக்கு மேன்மையாயிருக்குங்காலத்தில் தினம் ஆயிரம்பரதேசிகளுக்கு அன்ன மளித்தோ மல்லவோ ஏதோ நம்முடைய தலைவிதியானது நமது நகரத்தைவிட்டு இந்தச் சத்திரத்திற்கு வந்தோம் ஆராவது பிச்சையொன்று வந்தால் கால்படியரிசி போட்டு கஞ்சிகாச்சி வைத்திருந்தபோதிலும் அவர்களுக்கு ஒரு அழப்பைகஞ்சி கொடுத்தி களைதெளியவைத் துப்போகச் சொல்லுகிறதுந்தவிர தாகமென்று ஆராவதுவந்தால் அவர்களுக்குத் தண்ணீர் கொடுக்கவும் அதனால்நமக்கு வெகுபுண்ணிய முண்டாகும் நான் உன்மேல் யாதொன்றும் தோஷப்படினேக் கவில்லைநாழிகையாச்சது நான்வேலைக்குப்போறேனடிபெண்ணே.

பொது வசனம்.

இந்தப்பிரகாரமாக இருவரும் சம்பாஷித்து சாமிவொட்டன் சித்திரவல்லியை சத்திரத்தில் விடுத்து வேலைக்குச்சென்ற பிற்பாடு வழிப்போக்காக ஒருபூசாலி வருகிற விதங்காண்க.

பூசாலிவருகிற பொது விருத்தம்.

கையினிலுடுக்கையேந்தி கரகமும்தலைபேல்தூக்கி
மெய்யினில்ருத்ராட்சம்பூண்டு விபூதிசெம்படங்கைகொண்டு
வையகத்தோர்போற்றும்தென் மதுரைக்குச்செல்கின்ற
பொய்சொலாப்பூஜாலிதான் புகழ்சபைதனக்குவந்தான்.

பூசாலி சொல்லி வருகிற தெய்வத்தின் வர்ணிப்பு.

முந்திமுந்திவிநாயகரே மூலாதாரப்பொருளே
கந்தாகடம்பாயெங்கள் கதிர்வேலாவாருமையா
ஆதிசிவனோடு அயன்மாலும்வந்தமரும
சேர்ந்திரும்பார்வதிசெலவ கலவாணிவர
வள்ளிதெய்வானையுடன் ஆகாயக்கன்னியே
அந்திரக்கன்னியோடு இஷ்டமுள்ளதேவர்வர
காளியொடுகள்ளழகர் கனத்தவீரய்யன்வர
அதிவீரபத்ரரோடு ஐயன்பிடாரிவர
மாரியோடு அண்ணமார்கள் வீரியமதாகவர
பொங்கமுடன்தேவரெல்லாம் பூங்கரகம்வந்துநில்லு
அங்காளதேவியரே தங்கவிளையாடுசத்தி
மீனாட்சியம்மனுடமேலானயிக்கரகம்
தளராமலதானடத்த தயைபுரியஐங்கரரே

பொது விருத்தம்.

பூசாலிதானுமப்போ புகழுடன்கரகந்தூக்கி
வாசமாய்தேவர்தன்னை வர்ணித்துச்சொல்லுங்காலை
பாசமாய்கள்ளவொட்டன் பதுங்கியேவர்முன்னின்று
கூசாமல்மனதிலுள்ள குறையதுவிள்ளுவானே.

வசனம். இப்படியாக பாட்டைசாரியாய்ப் போகும் பூசாலியை ஒளித்திருந்த கள்ளவொட்டன் கண்டு சித்திரவல்லிக்குத்தெரியாமல் விசாரிக்கும் விதங்காண்க.

கள்ளவொட்டன் சொல்லும் தெம்மாங்கு.

பூங்கரகம்தூக்கியல்லோ போகும்பூசாலியரே
தாங்கியென்மனக்கவலை தன்னைவிலக்கிடுவீர் நன்

அலங்காரம்.

மகிமைமந்திரமஅறிந்தவரே பலேயாளதேசம்போனவரே
தகமையுளளபெரியவரே தஞ்சமென்னைகாத்திடரே
ஐயாளனதுகவலேதீர்த்தீரானல் இறக்குமளவுமறக்கேனையா
உனக்குயேற்றவெகுமதிகள் வுடனேகொடுத்துபாதம்பணிவேன்
சித்தம்வைதமென்னைக்காருமையா
சந்தோஷமாயுமக்குதீருமையா

தெம்மாங்கு.

மந்திரத்தில்வல்லவரே வசியமையிருந்துதந்தால்
சந்தோஷமாயுனக்கு தருகிறேன் இறைமனேசம் நன்

அலங்காரம்.

சந்திரன்போலமுருகுந்தாரேன் தங்கரைஞாண் தானுந்தாரேன்
உந்தனுக்கேற்றகடுக்கன்தாரேன் ஒத்தக்கல்பதித்தமோதிரந்தாரே
சித்தமிகமகிழ்ந்து செப்புமுகந்து [ன்
வந்தேன் பணிந்துமன துநொந்து நன்

தெம்மாங்கு

முத்துமாலேதருவேன் மோகனமாலேதாரேன்
சித்தம்வைத்தெனேயிவ்வேளே தேசிகரேகாருமையா நன்

அலங்காரம்

இத்தனையும்நான்தருவே னின்னமுங்கேட்டதெல்லாந்தருவேன்
கித்தசனுல்வாடுகிறேன் ஜீவனைக்கேட்டாலுந்தாரேன்
வெற்றிபெருக மெல்லிமேலமோகம்
வைத்துப்போகவசமுமாக நன்

வ-ம் ஆனல் கேளுமையா நான் இத்தனையும் உனக்கு கொடுக்கிறேன் கான காமபாணத்தால் கட்டுண்டு இந்த சமயம் படுகிற கஷ்டம் எப்படியிருக்கிறதென்றால் ஆற்றிலே நட்ட சாணபோலும் சேத்திலிட்ட கம்பம்போலும் அலேகடல்பற்றிய துரும்புபோலும்தாய்முகங்காணு பயிர்போலும் கண்ணையிழந்த பசுபோலவும்என்னுடைய சிந்தையானதுகலங்கி வேரற்றமரம்போலத் தவிக்கிறேன் ஆனதினல் என் மனேபீஷ்டத்தை நிறைவேற்ற வேணுமையா சுவாமி.

பூசாரி வசனம்.

கேளுமப்பா என்மனக்குறை யாவையும் நீக்கிவைக்கவ னல்லவன் யான் யாதொன்றுக்கும்மனஞ்சஞ்சலப்படவேண்டாமப்பா.

கள்ளவொட்டன் வசனம்

நல்லது தாயே என்மனச் சஞ்சலத்தை நீக்குவது உண்மையா உன் மந்திரபலத்தால் இவ்விடத்தில் நடந்த சங்கதியைச் சொலவிவாருமையா பார்க்கலாம்.

பூசாலி வசனம்.

ஆனால் சொல்லுகிறேன் கேளுமையா.

பூசாலி கள்ள ஒட்டனுக்கு குறிசொல்லுகிறது.

வடக்கேவெகுதூலைவு வளநாடுசீமைவிட்டு
மதுரைக்குப்போகுதற்கு மனங்கொண்டுவந்ததுண்டு
வயிற்றுப்பசிக்காகப் படுத்தாய்நீசத்திரத்தில்
சத்திரத்திலோர்மாதை சித்தமுடன்கண்டதுண்டு
மையல்பெருகிப்போ மனந்தடுமாருகிறாய்
கன்னியரைவசப்படுத்த காதத்தில்நினைத்துநீயும்
எண்ணுதுமெண்ணிநீ யெந்தனைக்கேட்டதுண்டோ
அஞ்சாதேபோடாயப்பா அந்தவொருகன்னியரும்
வந்தனைக்கண்டவுடன் ஒருமித்துவிடும்படி
உசியமைஉந்தனுக்கு வளிக்கிறேன்யிந்தாநீ
இந்தநல்லமையதனை எடுத்துதிலர்த்மிட்டு
சந்தோஷமாகவல்லோ சத்திரத்திற்செதிரேநீ
கன்னியற்கு முன்னாலே களிப்பாகபோய்நில்லும்
கண்டவுடன்உந்தனையும் காமனைப்போலெண்ணியவள்
ஆசைப்பெருகியல்லோ அன்பாகபேசிடுவாள்
ஒன்றுங்குறைவுமில்லை வுத்தமனேசென்றுவிடு

பொது வசனம்.

இப்படியாக பூசாலிசொல்லி மையைக் கள்ளவொட்டன் கையில்கொடுக்க மையை நெற்றியிலிட்டுக் கொண்டு மறுபடியும் ஒட்டச்சி சம்பாஷிக்கிற விதங்காண்க.

கள்ளவொட்டன் சித்திரவல்லிக்குச் சொல் விருத்தம்.

மங்கையேயுனைநினைத்து மனமதுவருகிவாடி
சங்கடமிகவடைந்தே தாய்தந்தையாணிழந்தேன்
அங்கஜன் கணைபாலிந்த அவதிககுள்ளானே னுன்னை
இங்குதான் அணைபாவிட்டா லென்னுயிரேகுங்கண்டாய்.

தரு.

கருமேகம்போலேயல்லோ என்கண்ணே
கருத்தகூந்தலழகி
கூநதலழகியரே என்கண்ணேயுனை
கொண்டுபோகவந்தேன்
தந்தைதாய்காணிழந்தேன் என்கண்ணே
தாரமும்காணிழந்தேன்

ரிய ஒட்டி நாட்டார்.

முநானிருந்தேன் என்கண்ணேயுனே
மன்றுவந்தேனடி
உனனேசதமெனறெண்ணி எனகணணே
ஊரைமறந்தேனடி
ஊரைமறந்தேனடி என்கண்ணே
ஊணுறக்கமில்லேயடி
உறக்கமுமில்லேயடி எனமானேநான்
உறுதியாய்ச்சொல்லுறண்டி
இரக்கமுமிலலேயடி அடிமானேயெனக்கு
எவ்வளவுசாதமேனும்
உண்ணுலும்சாதமதை ஒட்டப்பெண்ணே
உடம்பினிலொட்டலேயே
திண்ணுலும்பார்க்கல்லவே ஒட்டப்பெண்ணேயென்
திருவாய்சிவர்க்கலேயே
கண்டசரந்தருவேன் அடிபெண்ணே
கல்லிழைத்தலேதாரேன்
தண்டைகொலுசுதாரேன் அடிபெணணே
சுரிகைபட்டாடைதாரேன்
பட்டாடைதாரேனடி அடிபெண்ணே
பதக்கமுந்தாரேனடி
பதக்கமுந்தாரேனடி அடிபெணணே
பாவையரேகேட்டதெல்லாம்
கேட்டதெல்லாம்நான்தருவேன அடிபெணணேநீ
மாட்டேனென்றுசொல்லாதடி
மாட்டேனென்றுசொனனுயானல் அடிபெண்ணே
மடிவதுசத்தியமே

வசனம்.

இந்தப்பிரகாரமாக கள்ளவொட்டன் சொன்னதைக் கண்ட சித்திரவல்லியானவள் மையினுல் மதிமயஙகி கூறும் விதம்.

சித்திரவல்லி கள்ளவொட்டனுக்கு சொல் விருத்தம்.

மன்னவாயெனக்கிசைந்த மணவாளனஉன்னேயல்லால்
இன்னிலந்தன்னில்வேறே யெவரையுங்காணேன்காணேன்
மனமதன்கணேயால்மெத்த வருந்தியேவாடுமிந்த
கன்னியின்துயாகற்றி காருமிவ்வேளேநாதா.

தரு.

மன்னவாயென்கணவா சாமிநீர்
மதிகொடுக்கும் என் துரை

இன்னேரங்காணுமென்று எனசாமி ... ன்
எண்ணுதுமெண்ணினேண்டா
பேதமைபுத்தியினுல் என்சாமிநான்
பேசாதும்பேசினேனே
யாதுமேல்கோபம்வேண்டாம் என்சாமி
மன்னிப்பீர்செய்ததெல்லாம்

இந்திரசபாவில் சாமியே யின்னம் ஜாலம்
என்கிற வர்ணமெட்டு.

பல்லவி.

சாமிநீர்வாரும் தையலைசேருங் கண்ணாளா

அநுபல்லவி.

காமியாகினேனையா கலஙகுறேன்மெய்யா
தாம்தயினிசெய்யப் போகாவென்கண்ணாளா — சாமி

சரணம்.

மாரன்கணையினுல் மங்கையான்வாடுகிறேன்
காரும்யெனனையிவ்வேளை கணவன்உனனைப்போலே
தாணியில்வேறில்லைசேருங்கண்ணாளா — சாமி

மன்மதரூபனே மதிமுகரூபனே
என்னசெய்வேனநாதா எந்திழையின்மேல்வாதா
சன்னதங்கொண்டேன் தையலைச்சேருங்கண்ணாளா — சாமி

என்குலதெய்வமும்மை யிங்குவரவிட்டதோ
இன்னமுநதடையேனோ யிதுவும்ஞாயந்தானோ
கனனிக்கிசைந்தநாதனே யென்கண்ணாளா — சாமி

வ—ம். கேளுமென் ஆசைதுரையே இன்னேரம் தங்களைக்காணுமல் நான எண்ணுதும் எண்ணியிருந்தேன முன்வந்து தாங்கள் கேட்டபோது பேதமை புத்தியினுல் சில துஷ்டவார்த்தைப் பேசிவிட்டேன் நான் முன்னமே எண்ணியிருந்த யெணணம் என்குலத்தெய்வம் இன்று தான் ஈடேரவிட்டது எனக்கு தகுந்த புருஷன் தங்களைவிட வேறில்லை ஆனதால் யேதாவது குற்றங்களை செய்திருந்தால் பொறுத்து என மனோபீஷ்டத்தை நிறைவேற்றினுல் நாம் இருபேரும் ஒன்றுகூடி வாழ்வதுண்மையானுல் நல்ல கதையா யொன்று சொல்லுமையா ஆசைக்கிசைந்த கண்ணாளா.

சித்தி கலந்துயிருப்போமென்றால் எனசாமி
கதையொனறுசொல்லுமையா
கதையொனறுசொல்லுமையா என்சாமி
கண்ணுட்டிகேட்டுவாரேன்

கள்ள கானக்கருங்கு…யிலே எனகண்ணுட்டி
கதையொன்றுசொல்லுகிறேன
கதையொன்றுசொல்லுகிறேன எண்கண்ணுட்டி
கவனமாய்கேட்டுவாடி

வசனம். கேளடி பெண்ணே எனனை கதைசொல்ல வேண்டுமென்று கேட்டபடியால் கந்தனுக்கும் வள்ளியம்மைக்கும் நடந்த கதையை சுருக்கமாக சொல்லிவருகிறேன் கவனமாய்க்கேளடிஎன் காமரசமே.

கள்ளவொட்டன் சித்திரவல்லி சொல் விருத்தம்.

மாதேவுனமனமகிழ்ந்து மருவியேஅணைவோமென்று
ஓதினாய்கதையொன்று உரைத்திடவேணுமெனறாய்
ஆதலால்வள்ளிதன்னை அரசன்மகிழ்பாலகந்தன
காதலால்அணைந்தகோதை கழறுவேன்கேளாய்மாதே.

வ-ம் ஆனால் கேளாய் மாதர்கட் கரசி உன் மனது மகிழ்ந்து மருவி அணையவேண்டுமெனறு நல்ல கதையாக ஒன்று சொல்லுவாய் எனறும் உரைத்தாய் ஆதலால் சொல்லி வருகிறேன் கருத்துடன கேட்டுவாடி என காமக்கிளியே

தரு. ஐந்துபேர்வேடருக்கே என்மாதே
அரிதான தங்கையொனறு
செங்கையிலமைத்தல்லவோ எனமாதே
செழிப்பாய்வளர்ததாரடி
கையில்வளர்த்தபெண்ணை எனகிளியே
கதிர்வனங்கார்க்கவைத்தார்
கார்க்கவைத்தகன்னியர்க்கே என்கிளியே
வள்ளியென்றுபேருமிட்டார்
கார்ததுவருகையிலே எனமானே
கவுடானநாரதரும்
கவுடானநாரதரும் எனமானே
கவுடைநினைத்தாரடி
கவுடைநினைத்தல்லவோ எனதேனே
கதிர்வனஞ்சென்றாரடி
கதிர்வனஞ்சென்றல்லவோ என்தேனே
கனனியரைகேட்கலுற்றார்

வ-ம் கேளாய் பெண்ணே நாரதர் தினைப்புனங்கார்க்கும் வள்ளியினிடமாகச் சென்று யாதுகேட்கலுற்றாரெனறால் சாட்சாத் பரமேஸ்வரனுடைய பிள்ளை கந்தன் என்னிடமாக விருக்கிறார், அவ

ரைக் கொண்டுபோய் பாணிக்கிரகணஞ்செய்து கொடுக்கிறேன் மனேபீஷ்டத்தை சொல்லவேண்டு மென்றுகேட்டார். அப்போ வள்ளி நாரதரைப்பார்த்து அனேக துஷ்டவார்த்தைகளைச் சொல்லவும் அப்போ நாரதர் சம்பாலர்கா தென்று சந்தரிடஞ் சொனுல் அவனைகொண்டுவந்து விடுவானென்று வள்ளியைப்போல் படமெழுதி வேலவனிடமாக கொண்டுவாது கொடுக்க வேலவரானவர் அந்தப்படத்தைப்பார்த்து மோகித்து விழவும் இப்பேர்ப்பட்ட நின்ற பெண்ணை எவ்விடத்தில் கண்டுவந்தீ ரென்றுகேட்க நாரதர் யேது சொன்னு ரென்ருல்.

தரு. திணைப்புனங்காத்தல்லவோ வடிவேலா அந்த
தேவியரிருக்கக்கண்டேன
உனைக்கொண்டுபோகவல்லோ வடிவேலா நான
ஓடிவந்தேனுன்னருகில்
அருகினில்வந்தேனையா வடிவேலா அந்த
அணங்கைப்போல்கண்டதில்லை
மறவிலிருந்தாலுமே வடிவேலா ஆஆ
மையல்கொடுக்குங்கிளி
மையல்கொடுக்குங்கிளிவடிவேலா
வனத்திலேகண்டேனையா
கண்டுவந்தபெண்ணையல்லோ வடிவேலாநீ
கொண்டுவரவேணுமையா.

வ-ம் கேளாய் பெண்ணே இந்தப்பிரகாரமாக நாரதர் சொன்னதைக்கேட்ட சுப்பிரமணியரானவர் ஏதுசெய்தா ரென்ருல்

தரு. வில்தனைக்கைபிடித்தார் வடிவேலரவர்
வேடனைப்போல்ரூபங்கொண்டார்
வேடனைப்போல்ரூபங்கொண்டவனந்தருகே
ஓடிவந்தார்கந்தரவர்
கந்தரவரோடிவந்து வனத்திலுள்ள
கன்னியரைகேட்கலுற்ருர்
சந்திரமுகத்தழகி உன்வாய்திறந்தினி
எந்தனிடம்பேசாயோடி
பேசாயோவென்றுசொல்லிவடிவேலரந்த
பெண்ணெதிரே நின்றல்லவோ
கூசாமல்பேசிவந்தார் வடிவேலரந்த
கோதையினமேல் மோகம்வைத்து
வைத்ததுதானறிந்து வள்ளியவள்
மனதில்யேதுநினைத்தாள
மனதில்தானினைந்தாள் வேடர்களை
வந்தார்கள் அவருளகே

வேடரைக்கண்டவுடன் வடிவேலரவர்
வேங்கைமரமாகினரூர்
வேங்கைமரமாகினரூர் இப்பாதகியால்
வேலவரும்பெண்ணருகே

வ-ம் அப்போது வந்த வேடர்கள் தங்கையைப்பார்த்து என்றைக்கு மில்லாத வேங்கைமரம் இனறைக்கு முளைத்திருப்பதென னவென்று வினவ வள்ளியம்மையானவள் முனனடந்த தெல்லா முறைக்க கேட்டவுடன அந்த வேங்கைமரத்தை வெட்டுவதற்கு நினைத்தார்கள். அதில் ஒருவேடன் எனறைக்குமில்லாத வேங்கை மரம் இனறு முளைத்தமையால் அதனை வெட்டவேண்டாம் இன னம் யோசித்து செய்வோமெனறு சொனனதை கேட்டவர்களெல் லாம் உடனே வேட்டைக்குப்போய் விட்டாகள் போய்விட்ட பிற கு நடந்ததை சொல்லுகிறேன கேளடிமயிலே.

தரு வேங்கைமரமாயிருந்தவடிவேலர்பின்பு
வேடரைப்போல்ரூபங்கொண்டு
வேடரைப்போல்வந்தல்லவோ வடிவேலர் அந்த
மெல்லியரைக்கேட்கலுற்றூர்
மெல்லியர்க்குக்கோபமாகிவடிவேலர் தம்மை
வெறுத்துப்பேசினதாலே
வெறுத்துப்பேசினதாலே வடிவேலர் அவர்
வேறுருபந்தானெடுத்தா
வளையல்விற்குஞ்செட்டியைப்போல் வடிவேலர் அவர்
வந்துநினறூர்பெண்ணெதிரே
வந்துநின்றுகேழ்க்கையிலே அதற்குமந்த
வள்ளிபிணங்கவில்லை
இணங்காதிருக்கையிலே வேடர்களெல்லாம்
எங்கிருந்தோவந்துவிட்டார்
வந்தவேடரைக்கண்டு வடிவேலர் அவர்
மறுவேடமதானெடுத்தார்
ஆண்டிக்கிழவனைப்போல் வடிவேலர்நின்று
அன்னமளியுமென்றூ
அன்னமளியுமெனறு வடிவேலர் அவர்
சன்னுசிபோலிருந்தார்

வ-ம். அப்போது வேலரானவர் பண்டாரக் கிழவனைப்போல் ரூபங்கொண்டு வள்ளியைச் சாதங்கேழ்க்கும் காலத்தில் வள்ளியா னவள் இப்பேர்ப்பட்டவனத்தில் சாதங்கேட்டால் நானெங்குபோ வேன் தினைமாவாவது தருகிறேன் தினறு பசியாறிப் போங்களெ ன்றுசொல்லி மாவைப்பிசைந்து வேலரிடமாகக் கொடுக்க வாங்கி வாயில் போட்டுக் கொண்டு என்ன சொன்னு ரென்றூல்.

தரு.

அடிமென்னியையடைக்குதடி வள்ளிகொஞ்சம்
தண்ணீரிருந்தால்கொண்டுவாடி
கொஞ்சம்தண்ணீரிருந்தால்கொண்டுவாடி வள்ளி
தாகவிடாய்தீர்க்கவேணும்.

வ-ம். அப்போது வேலரானவர் தண்ணீர் கேழ்க்கவும் வள்ளியானவள் இந்தவனத்தில்தண்ணீருக்கு யானெங்குபோவேன் அதோ ஒருசுனையிருக்கின்றது அந்த சுனையிலே சென்று தண்ணீர் சாப்பிட்டு வாருங்களென்று சொல்லவும் அப்போது வேலரானவர் நீருங்கூட வரவேணும் பெண்ணேயென்று சொலவும் வள்ளியானவள் வேலரோடு செல்லுகையில் வேலவரானவர் வள்ளியைப் பார்த்து இந்தவனத்தில் மிருகஜாதிகள் விசேஷமாயிருக்குமே எனக்கு பயமாயிருக்கிறதே உனக்கும் அப்படித்தானே யிருக்குமென்று கேழ்க்க வள்ளியானவள் எங்கள் ஜாதியிலே சகலமான மிருகங்களையும் பிடித்துக்கட்டித் தின்கிறது இந்தமிருகங்களை கண்டால் எனக்குப் பயமிருக்காது ஆனையைக்கண்டால் மெத்த பயமுண்டாகும் இந்தக்காட்டில் யானையில்லை பயப்படாமல் வாரும் பெரியவரேயென்று சொல்ல உடனே பண்டாரக் கிழவனாகயிருந்த வேலவரானவர் தமது சகோதரனாகிய கணபதியை நினைக்க கணபதியானவர் வெள்ளையானை ரூபங்கொண்டு ஓடிவரவும் வள்ளி யானையைக் கண்டு பயந்து வேலவரை கட்டிப்பிடிக்கவும் அப்போது வேலவரானவர் மயிலவாகனரூடராய் சுயரூபத்தோடு வள்ளிக்கு காட்சிக் கொடுத்து தனது ஆசிரமத்திற்குக் கொண்டுபோனார்.

கள்ள இந்தகந்தரும்வள்ளியும்போல் என்மானேநான்
கலந்திருப்போம்வாடி
கலந்திருப்போம்வாடி அடிமாதேஉன்
கருத்தின்படியாகவே

சித்தி கந்தரும்வள்ளியும்போல் என்சாமிநாம்
கலந்துயிருப்போமென்றால்
கலந்துயிருப்போமென்றால என்சாமிநாம்
கர்ப்பூரந்தானணையும்

கள்ள கானக்கருங்குயிலே என்கண்ணேயுனை
கைவிடலையென்று சொல்லி
கைவிடலையென்று என்கண்ணேயிந்த
கற்பூரம்அணைத்துதாறேன்

சித்தி தாறேனென்றுசொன்னீரையா என்சாமி
சந்தேகமில்லாமலே

சந்தேகமில்லாமலே என்சாமிநீர்
முந்திபணியுமப்பா

கள்ள அணைக்கிறேனபாரடீ. எனகண்ணேயென்
ஆயுசுஉள்ளமட்டும்
ஆயுசுஉள்ளவும் உன்னைவிட்டு
அகலாமல்நிற்குறேண்டி

சித்தி நிற்பதுஉண்மையானல் எனசாமிநான
நினைத்ததுபோல்முடிக்க
இப்போதுகூடத்திற்கே என்சாமிநீர்
எழுந்துவருவீரையா

கள்ள கூடத்தேவந்தேனுல் கண்மணியேஉன்
கொண்டகணவனகண்டால்
கொண்டகணவன்கண்டால் கண்மணியேஉன்
குடியிருப்பானடி

சித்தி குடியிருப்பானென்று என்சாமிநீர்
குறைவாகப்பேசவேண்டாம்
அடியாளிருக்கும்போது எனசாமிஒரு
ஆபத்துவாராதையா

பொது வசனம்.

ஆனல் கேளுந்துரையே ஸ்திரீகளுக்கு யானையை சுளுவாய் மறைக்கும்படியான சாமர்த்திய முண்டென்று உமக்குத் தெரியாதா அதுபோல் தங்களை என்வதுகையால மூடுவேன தாங்களொன்றுக்கும் யோசிக்கவேண்டியதில்லை அருமைக்கண்ணுளா.

பொது விருத்தம்.

மாதுயீதுரைக்கக்கேட்டு மனமகிழ்ந்துஒட்டன்
காதலோடுள்ளேசென்று கனனியைபுணர்ந்திருக்கும்
போதினில்வேலைசெய்யப் போனதோர்சாமிஒட்டன்
வேதனையோடுவந்து மெல்லியையழைக்கலுற்றன்.

வசனம். இந்தப்பிரகாரமாக கள்ள ஒட்டனும் சித்திரவல்லியும் கலந்திருக்குஞ் சமையத்தில் வேலைசெய்யப்போன கொண்டகணவன் வந்து கதவை தட்டி கூப்பிடும் விதங்காண்க.

சாமிஒட்டன் விருத்தம் முகாரி.

அன்னமயிலேயெந்தன் அன்பிற்குஉரியமாதே
உனனையான்சத்திரத்தில் ஒண்டியாய்விடுத்துச்சென்று
என்விதிவசத்தால்மண்ணை யெடுத்திடநேர்ந்ததாலே
கன்னிநான்களைத்துவந்தேன் கதவதைதிறப்பாய் பெண்ணே.

தரு

பெண்ணே நவமணியே சித்திரவல்லி
பூஷணமே பொற்கொடியே
கண்ணேயென் கற்பகமே அடிமாதே
கதவைத்திறப்பாயடி
கூவுறதுகேழ்க்கலையோ சித்திரவல்லி
கொடும்பசியாகுதடி
பாவையரே திறந்து பேசாமல் என்ன
பண்ணுகிறாய்சொல்லடிநீ

பொது விருத்தம்.

கணவனும்வந்துநின்று கனனியையழைக்கும்போது
மனமகிழ்ந்திருக்குங்கள்ள மாப்பிள்ளையான ஒட்டன்
தலைமெழுகதனைப்போல் தவித்தவன் மனதுருகி
அணங்கினகைபற்றியிந்த ஆபத்தைதவிர்ப்பாயெனறான்.

வசனம். இவ்விதமாக வேலைக்குப்போன கொண்டகணவனாகிய ஒட்டன் கதவைத்திறப்பாய் பெண்ணேயென்று கூப்பிடுந்தருணத்தில் மிகவும் சந்தோஷத்தோடு குலாவிக்கொண்டிருந்த கள்ள ஒட்டனானவன் தணலிலிட்ட மெழுகைப்போல் மனமானது உருகித்தவித்து உச்சியின் கையைப்பிடித்துக் கொண்டு கூறும் விதங் காண்க.

அரிச்சந்திரவிலாசத்தில் என்னசெய்குவேனண்ணா,

என்கிறவர்ன மெட்டு.

என்னசெய்குவேன் பெண்ணே எதுசெய்குவேன் கண்ணே
எவரோவுனையழைத்தார்மானே

சித்திரவல்லி தரு.

கொண்டகணவனென்னை கூப்பிடுகிறானையா
கொஞ்சமுமஞ்சாதீர் பிராணா

கள்ள ஒட்டன்

அஞ்சவேண்டாமென்று அரிவைசொன்னாயிந்த
ஆபத்திற்கென்னசெய்வேனமானே

சித்திரவல்லி

ஆபத்தொன்றுமில்லை அடியாளுள்ளவரையில்
அருமைதுரைவாடாதே

கள்ள ஒட்டன்

வாடாதேயெனறாயுந்தன் மணவாளனிங்குவந்தால்
மறைவாயிருப்பதெங்கேமானே

சித்திரவல்லி

எங்குகிர்போகவேண்டாம யிதோகொல்லேபுறத்தி
லிருந்தாவிடர்வாருது பிருணு.

பொது வசனம்.

இவ்விதமாக கள்ள ஒட்டனும் சிததிரவல்லியும் சம்பாஷித்துக்கொண்டு கள்ள ஒட்டனைக் கொல்லேப் புரமாகப்போய் இருக்கும்படியாக சொல்லி கதவைத்திறந்தவுடனே சொந்தநாயகன் மனதில் கொஞ்சம் சந்தேகந்தோன்றி சிததிரவல்லியை கேழ்க்கும்விதம எப்படி யென்றால்.

தரு.

சாமி இன்னேரம்யென்னசெய்தாய் சித்திரவல்லி
இரும்போடிஉன்மனது
மின்னலிடையழகி அடிமாதேநீ
விபறத்தைச்சொல்லடியே

சித்தி சொல்லுகிறேன்கேளுமையா என்சாமிநான்
தூங்கியிருந்தேனையா
மெல்லிமேல்கோபவேண்டாம் என்சாமிநீர்
உள்ளேவருவீரையா

சாமி வருகிறேன்கேளடி நீசித்திரவல்லிஉன்
மனதில்வருத்தம்வைத்து
உருவங்குலேந்தல்லவோ அடிபெண்ணே
ஒடிவருவதென்ன

சித்தி ஆக்க அரிசியில்லேஎன்சாமி
அடுப்புக்குஒன்றுமில்லே
காச்சக்கரியுமில்லே என்சாமிநான்
கலங்கிப்போய்நிற்கிறேனே

சாமி கலங்கிப்போய் நிற்கிறதை அடிமாதேயந்த
காரணத்தையானறிவேன்
குலத்தைக்கெடுக்கவந்த அடிபெண்ணே
கோடாலிக்காம்பானயடி

சித்தி இப்படிசொல்லலாமா என்சாமிநான்
என்னதப்பிதஞ்செய்தேன்
என்னதப்பிதஞ்செய்தேன் என்சாமிநான்
எடுத்துரைக்கவேணுமையா

சாமி கதவைத்திறக்கச்சொல்லி அடிபெண்ணே
கத்தினதுகேளாமலே
கதவைத்திறந்தசத்தம் அடிசாண்டாளியென்
காதினில் கேட்கலேயோ

சித்தி கொல்லைப்புரமாகவே என்சாமிநீர்,
கூப்பிட்டீரென்றுசொல்லி
மெல்லியாள்போய்திறந்தேன் என்சாமிநீர்
வேறென்றுமெண்ணவேண்டாம்

சாமி கதவைத்திறந்தவுடன் அடிபெண்ணே ஒரு
கள்ளனவன் ஓடலையோ
கள்ளனவன் ஓடையிலே அடிசண்டாளிநான்
கண்டுகலங்கினேனே

பொது வசனம்.

இவ்விதமாக சாமிஒட்டனும் சித்திரவல்லியும் தர்க்கஞ்செய்து க்கொண்டதில் மேற்படி ஒட்டச்சியானவள் இதுசமயமென்று யெண்ணி தன்புருஷச்குச் சொல்லுகிற விதங்காண்க.

சித்தி கண்டதுஉண்மையானால் என்சாமியிந்த
கன்னியரைசெய்வதென்ன
உண்டோஇவ்வனியாயம் என்சாமிநீர்
உரைப்பதுமென்விதியோ

சாமி விதிபோல்நடக்குப்படி அடிபாதகிநீ
வேசியென்றும்பேரெடுத்தாய்
வேசியென்றும்பேரெடுக்க அடிசண்டாளிநாம்
வேறுதேசம்வந்தோமடி

சித்தி இந்தாரும்நாயகரே நீரொன்றும்
இடக்காகபேசவேண்டாம்
எந்ததேசத்திலேனும் நான்சென்று
இரந்துகுடித்திடுவேன்

சாமி இரந்துகுடித்தாலென்ன அடிபாதகிநீ
எவனோடுபோனாலென்ன
சரடுந்தாலியும்வைத்து அடிசண்டாளி
தையலரேவோடிப்போடி

சித்தி சரிதான்சரிதானடி அடபாவியந்த
சரடுந்தாலியுமாகயென்
பெரியஅண்ணன் கொடுத்தார்தெரியாதோடா
பேசாதென்க்குசொந்தம்

சாமி சொந்தமென்றுசொன்னாயடி சண்டாளியந்த
சொருகோலையென்னதடி
சந்திரபிரைசூரியபிரை இதுகளெல்லாம்
தையலரேவைத்துப்போடி

சித்தி வைத்துதான்போவேனென்று அடபாவிநீ
வழக்குகள்பேசுகிறாய்

சிற்றப்பன் தந்தாராடா யிதுகளெல்லாம்
தெரியாதோடாயுந்தனுக்கு

சாமி முருகுஜிமிக்கியெங்கே அடிபாவியென்
மூக்குத்திதானுமெங்கே
திருகாணிகொப்புமெங்கே அடிசண்டாளி
திருடிநீபோகாதடி

சித்தி முருகுஜிமிக்கியடா அடாபாவியிந்த
மூக்குத்திகொப்புமல்லோ
சர்வமுமென்னுதடா
தந்தாரென் தகப்பன்

சாமி போனாலும்போகுகடி அடிபாவிநீ
போய்விடடியூரைவிட்டு
வீண்வார்த்தைபேசாதடி அடிசண்டாளி
வெளியேநடந்திடடி

சித்தி போய்வாரேன்வாழடாநீ அடாபாவியிந்த
பெண்ணாளுநீயுமாக
மாயக்கள்ளியெவளோ அடியெனக்கு
வந்தாளே தீம்பாக

சித்திரவல்லி விருத்தம் தன்யாசி.

மெல்லியைதனியேவைத்து வேலைக்குச்செல்லும்போது
வல்லபாவினைக்கண்டெந்த மங்கையோமையலாகி
நல்லுறவாகப்பேசி நாரிசொல்தொட்டீரென்று
கள்ளமருந்திட்டாளோ கடிந்தென்னைவெறுத்திட்டீரே

வசனம்.

ஆனால்கேளும் நீர்வேலைக்கி செல்லும்போது எவளோ உன் மேல் ஆசைகொண்டு அவள்சொல்லை தட்டாமலிருக்கும்படியாக உம்மோடு உறவாகப்பேசி திருட்டுத்தனமாய் மருந்கிட்டதுபோல் காண்கிறது ஆனதால் நீரென்னைக் கடிந்துபேசி ஓடிப்போகச் சொன்னீர் அதுவும் அவள் சொல்லிக்கொடுத்து என்னைத் துரத் தும்படி சொன்னதுபோல் காண்கிறது ஆனதால்நீரும் அந்த மங் கையும் கூடிக்கலந்து சுகமாய் வாழ்ந்திருங்கள் நான் போய்வரு கிறேன்.

பொது விருத்தம்.

இருவரும்தர்க்கமாடி யேந்திழைவொட்டமாது
புருஷனையிகழ்ந்துபேசி போய்விட்டகள்ளஒட்டன்
தருணமீதென்றுயெண்ணி தையலைபழைத்துச்செல்ல
ஒருவனும்சாமிஒட்டன் உளம்வாடிபுலம்புவானே

வசனம்

இவ்விதமாக புருஷனும் பெண்ஜாதியுமாக தர்க்கமாடிக்கொண்டதில் சித்திரவல்லியானவள் தன்புருஷனை வாயில்வருதவார்த்தைகளைப்பேசிப்போய்விட கள்ளஓட்டன் இதுதான்தருணமென்று அவளை அழைத்துச்செல்ல சத்திரத்திலிருக்கும் சாமிஒட்டன் தனக்குச்சேர்ந்த கஷ்டத்தைநினைத்து புலம்புகிறவிதங்காண்க.

சாமிஒட்டன்-விருத்தம்-இ-ம்-முகாரி.

பஞ்சத்தால்தேசம்விட்டு பரதேசியானேனிந்த
வஞ்சகரூரில்வந்து மண்ணைதைசுமக்கலானேன்
தஞ்சமென்றிருந்தயெந்தன் தாரமிழந்தேனையா
அஞ்சாதேயெந்தனுவி யாரிடமுரைப்பேனையா.

இந்திரசபாவில் அரவாபரணனே என்ற
வர்ணமெட்டு

ஐயையோயெனதுவுள்ளம் நையுதென்செய்குவேன்
ஆலமுண்டவனேகாரும் — ஐயோ

பையரவணிந்தோனே பார்வதிபாலனே
படைத்தாயெனைப்பெரும் பாவியெனவுலகில் — ஐயோ

வாழ்ந்தநகரிருந்துநான் வாடித்தவிக்கும்போது
மண்ணுப்சுமக்கலானதே — ஐயோ

ஊழ்வினையாலேயிந்த வுடம்பெடுக்கவாச்சுதே
உம்பர்முதலேவுனதுசோதனையிதோ — ஐயோ

மாலவயதில்தொட்டு தாலிகட்டினயெந்தன்
மனைவிதனையுமிழந்தேன் — ஐயோ

வேலைக்குச்செல்வோமென்று வெளியில்புறப்பட்டாலும்
வெட்கமாகுதேயிந்த விதிக்கெனசெய்குவேன் — ஐயோ

இந்தவிதிக்காளாக யென்னைத்தானேநினைந்தீர்
ஈசாவுமக்குஞாயமோ — ஐயோ

சிந்தைகலங்குதென் தேசத்தையும்விடுத்து
திண்டிவனத்தில்வந்துஒண்டியானேன்சிவமே — ஐயோ

பொது வசனம்.

இவ்விதமாகசாமிஒட்டன் புலம்பிக்கொண்டிருக்க சித்திரவல்லியானவள் கள்ளஒட்டனோடு சேர்ந்துபோகும் விதங்காண்க

இனி நான்காம்பாகமென் றறிவீர்கள்.

கள்ள ஒட்டன் விருத்தம் கமாஸ்.

அன்னமேமானேதேனே அதிரூபமுள்ளமாதே
உன்னையும்பிரிந்தாலென்ன வுயிரதுதரித்திடாதே
இன்னேரமுனைக்காணுமல் யெண்ணுதுமெண்ணிநின்றேன்
கன்னிநீசெய்ததென்ன கணவன்வந்தேதுரைத்தான்

வசனம்.

கேளடிபெண்ணே உன்னைப்பிரிந்துயான் ஒண்டியாக விருந்தாலென னுயிர்தரிக்குமோ அடிமாதே நீயின்னேரம் என்னசெய்துக்கொண்டிருந்தாய் உன்கணவன் வந்தேதுரைத்தான் விபரமாய்ச்சொல்லடிகட்டிக்கரும்பே.

கள்ள இன்னேரமென்னசெய்தாய் ஒட்டப்பெண்ணே
இளங்கொடியேமாதரசே
மின்னல்முகத்தழகி அடிமாதேநீ
விபரத்தைசொல்லடியே

சித்தி கூலிவேலைக்குப்போன எசாமியென்
கொண்டகணவன்வந்தான்
தாலியறுத்துவைத்து எசாமியென்னை
தாய்வீடுபோடியென்றான்.

சித்திரவல்லி-விருத்தம்-கமாஸ்

மன்மதசொரூபமுள்ள மதிமுகத்தாரேகேளீர்
என்னமோமனதில்தோன்றி யெனைவெறுத்திட்டுதாலி
தன்னையேயறுத்துவைத்து தாய்வீடுசெல்வாயென்றான்
இன்னகர்விட்டுநாமும் ஏகுவோம்வாரீர்நாதா

வசனம்

ஆனல்கேளும் மன்மதசொரூபமுள்ள என்மனதிற்கிசைந்த மணவாளனே நான் இன்னேரங் கணவனோடு வழக்குப்பேசி அவனென்ன சந்தேகமோ மனதில்வைத்து என்னை தாலியை யறுத்துவைத்துப் போகச்சொன்னன் அவனிடந் தர்க்கமாடினதால் இத்தனை நேரமாய்விட்டது ஆனதால் நாமிதைவிட்டு வேறே எந்ததேசத்திற்கேனும் செல்லுவோம் வாருமென்காமனே.

தரு.

கள்ள செல்லுவோமாபயிலே அடிமானேயிந்த
திண்டிவனத்தைவிட்டு
திண்டிவனத்தைவிட்டு அடிமானேநாம்
சேர்வோமடிமாயவரம்

சித்தி மாயவரம்சேர்வோமென்று என்சாமிநீர்
மகிழ்வாகசொன்னீரையா
மகிழுடன்செல்வோமையா என்சாமி
வாங்குமையாடிக்கட்டுமே
கள்ள சக்கின்கிளாஸ்வண்டி என்கண்ணேநான்
தனிப்பாகவாங்கிவாறேன்
தனிப்பாகவாங்கினேனடி அடிமாதேநீ
தையலரேயேரடி நீ
சித்தி ஏறினேன்நாயகரே என்சாமிநாம்
இறங்கிடும்வூர்வரையில்
நேரில்வரும்வூரெல்லாம் என்கண்ணாளா
நினைவுடனேசொல்லுமையா
கள்ள சொல்லுகிறேன்மாதரசே என்னருகினில்
சுகமாக வீற்றிரடி
சுகமாகவீற்றிரடி அடிமாதேயென்
தோகைமனோரஞ்சிதமே
சித்தி திண்டிவனஸ்டேஷனேறி என்சாமிநாம்
திறமானவண்டியேறி
அண்டங்கிடுகிடென்ன என்சாமிஅது
அவுட்டாகிபோகிறதையா
கள்ள போகிறவேகத்திலே என்சாமிநீர்
புத்திமயங்குதையா
புத்திமயங்குதையா என்சாமிநீர்
புகலுமடுத்தவூரை
சித்தி மங்கையரேசொல்லுகிறேன்கேள் வொட்டப்பெண்ணே
மயிலம்வர் துசேர்ந்தோமடி
இங்கேயிருந்தபடி அடிமாதரசே
ஏகுதுபார்விக்கிரவாண்டி
கள்ள விக்கிரவாண்டிஸ்டேஷன்பாரும் வொட்டப்பெண்ணே
வெகுஜனக்கூட்டம்பாராய்
பக்கமிருக்கும்ஸ்டேஷன' அடிமாதேயென்
மெல்லியரேயின்னமுங்கேள்
சித்தி விக்கிரவாண்டிஸ்டேஷன் கண்டேன்என்சாமிநான்
வெகுஜனக்கூட்டங்கண்டேன் இந்த
பக்கமிருக்கும்ஸ்டேஷன் என்சாமி
பகரவேணுமெந்தனுக்கு
கள்ள பகருவேன்உந்தனுக்கு வொட்டப்பெண்ணேயிது
யாரடிவிழுப்புரமாம்

விழுப்புரம்தாண்டினேமே வொட்டப்பெண்ணேயிது
மேன்மையுள்ள நெல்லிகுப்பம்
நெல்லிகுப்பங்கடந்தோமே அடிமாதேயிது
நேர்த்திருப்பாப்புலியூர்
நேர்த்திருப்பாப்புலியூர்பாரு என்கண்ணே அதில்
தேவஸ்தானங்கள்பாரு

சித்தி திருப்பாப்புலியூர்கண்டேன் என்சாமிநான்
தேவஸ்தானமுங்கண்டேன்
தேவஸ்தானமுங்கண்டேன் எனசாமிநான்
சிந்தைமகிழ்ந்துகொண்டேன்

கள்ள மஞ்சாகுப்பம்கூடலூரு மாதேரயில
வந்துதடிவேகமுன்
வஞ்சியரேஆலப்பாக்கம் ஸ்டேஷனிது
மகிழ்வாகப்பாரடிநீ
ஆலப்பாக்கம்ஸ்டேஷன்வந்தோம் அடிமாதரசே
அடுத்தஸ்டேஷன் பரங்கிப்பேட்டை
பரங்கிப்பேட்டைஸ்டேஷனடி அடிபெண்ணே
பார்த்துவருவாயடி

சித்தி பரங்கிப்பேட்டை ஸ்டேஷன்கண்டேன
பார்த்துமனமகிழ்ந்தேன்
பார்த்துமனமகிழ்ந்தேனையா இன்னம்
பகரவேணுமெந்தனுக்கு

கள்ள பகருவேன்கேட்டுவாடி அடிமாதேநீ
பாரடிகிள்ளைஸ்டேஷன்
ஜெகமெல்லாங்கீர்த்திபெற்ற அடிபெண்ணே
சிதம்பரம்வந்தோமடி
சிதம்பரம்ஸ்டேஷன்பாராய் அடிபெண்ணே
தெரியுங்கோபுரம்பாராய்
பதம்பெறலாகுமடி அடிமாதேயிதை
பார்த்துதெரிசித்தவர்
தங்ககலசமிட்டு அடிமாதேசெப்பு
தகட்டோடுதான்பரப்பி
சிங்காரமாய்வேலைசெய்வார் அடிமாதேயது
சிறந்தசபையாமடி

சித்தி சிதம்பரம்ஸ்டேஷன்கண்டேன் என்சாமியிங்கு
தெரியுங்கோபுரங்கண்டேன்
மதியுளமென்துரையே என்சாமிநாமும்
வரும்போதுபார்க்கவேணும்

கள்ள வரும்போது சிதம்பரத்தில் அடிமாதே நாம்
வந்திரங்கிப்போவோமடி
வந்து இறங்கினுக்கால் என்பெண்ணே அந்த
மகாசபையைக்காணலாம்
சித்தி காணுமல்போவதில்லே என்சாமியிந்த
கனகசபைதனையே
கனகசபையைக்கண்டு என்சாமிநாம்
கைகுவித்தால்மோட்சமுண்டு
மோட்சமடையலாமே என்சாமியெனசகு
மூன்னிருக்கும்ஸ்டேஷன்பேரை
மாட்சிமைதங்கினேரேயெனக்கரிய
மன்னவரேசொல்லுமையா
கள்ள கொள்ளடத்துபாலகரை என்பெண்ணேரயில்
மெள்ளவருகுதடி
மெள்ளவந்து ஆணிக்காரன்சத்திரத்தில்
மெல்லியரேநிற்குதடி
ஆணிக்காரன்சத்திரந்தான் வொட்டப்பெண்ணே
அடுத்தஸ்டேஷன்சீர்காழிதான்
சீர்காழிஸ்டேஷன்பாராய் அடிமாதே
தெரிநதிடுவாயின்னஞ்சொல்வேன்
சித்தி சீர்காழிஸ்டேஷன்கண்டேன் எனசாமிநான்
சிந்தைமகிழ்ந்தேனையா
சிந்தைமகிழ்ந்துகொண்டேன் என்சாமிவாரும்
ஸ்டேஷனெல்லாம்சொல்லுமையா
கள்ள திருப்பிணிவிலக்கும் அடிமாதே
சிவனமர்ந்தவேளூரடி
வேளூரில்வந்ததற்கு வொட்டப்பெண்ணே
விலக்கும்பிணிகளெல்லாம்
சித்தி தேவனென்றுசொன்னீரையா எனசாமியிந்த
தேவன்பேரெந்தனுக்கே அந்த
தேவனபேரெந்தனுக்கே என்சாமி
தெரியவேசொல்லுமையா
கள்ள வைத்தியநாதரடி அடிபெண்ணே
மங்கைதையலம்மையர்க்கு
மங்கைதையலம்மையற்கும் என்பெண்ணரசே
மகன்முத்துகுமாரனடி
சித்தி இத்தனைபுமறைத்து என்சாமிநீர்
எடுத்துரைக்கலாகுமோதான்

மற்றஸ்டேஷன்பேரெல்லாம் என்சாமிநீர்
வரிசையாய்சொல்லுமையா

கள்ள அனந்தநாதபுரத்தான் வொட்டப்பெண்ணே
அடுத்தஸ்டேஷன் மாயவரம்
மாயவரம்வந்தோம் அடிமாதே
மகிழ்வாயிரங்கடிநீ

சித்தி இரவகிறான்வாரேனையா என்சாமிநான்
இருப்பதுமெந்தவிடம்
எந்தவிடத்தைக்கண்டு என்சாமிநான
இருந்திடப்போரேனுமையா

கள்ள இடந்தானமக்கில்லையோ வொட்டப்பெண்ணே
எதிரிலுள்ளகானகத்தில்
திடமானவீடுகட்டி அடிபெண்ணேநாம்
சேர்ந்துமேவாழ்வோமடி

சித்தி சேர்ந்துதான்வாழ்வோமையா யென்சாமிநீ
சீக்கிரத்தில்வாருமையா
சீக்கிரத்தில்வந்தீரானல் என்சாமி அங்கு
சென்றுபசிதீர்த்திடுவோம்

வசனம்

கேளும் ஆசைக்கிசைந்த மன்னவரே நாமிந்தகானகத்தில் வீடுகட்டி யிருப்பதாகச் சொன்னீர் அப்படியே செய்வோம் சீக்கிரத்தில் வாருமையா நாம் பசிதீர்க்கலாம் என் பிராணநாதா.

கள்ளவொட்டன் வசனம்.

அப்படியே வருகிறேன் பெண்ணரசே

பொது விருத்தம்.

மட்டில்லாகீர்த்திபெற்ற மாயூரம்வந்துகள்ள
வொட்டனே மங்கையந்த ஊரில்நாமிருப்போமெனருல்
இஷ்டம்போலிருப்பதற்கு யிடந்தானேநமக்குபஞ்சம்
எட்டியேவாடியென்று யிடங்குறித்தவிடஞ்சென்றான்.

வசனம். இந்தவிதமாக கள்ளவொட்டனும சித்திரவல்லியுமாக மாயூர ஸ்டேஷனில் வந்து இறங்கி கள்ளவொட்டனை சித்திரவல்லி நாமெஙகிருந்து வாழ்வதென்று வினவ கள்ளவொட்டன் இதோநமக்கு யெதிரிலுள்ள கானகத்தில் சிறிய வீடுகட்டி யிருப்போம்வாடி யென்று அழைத்து சென்று சித்தர்காட்டில் ஓரிடத்தில்வீடுகட்டி யிருவரும் வாழ்ந்து வரும நாளில சித்திரவல்லி யானவள் கெர்ப்பந்தரித்து கெற்பவேதனைப்படும் விதங்காண்க.

சித்திரவல்லி விருத்தம் முகாரி

ஆதியேஅமரர்வேந்த அகிலமும்படைத்தநாதா
சோதியேசுடரேயெந்தன் துயரதைபகற்றுரோ

நாதியில்லாமலிந்த கடுங்கானகத்திற்கெற்ப
வாதசகித்திடாமல் வருந்துதேநெஞ்சமையோ.

வேறு பத்தியம்.

எனனுயிர்சோருதே இடுப்பதுநோகுதே
என்னசெய்வேனபிராணநாதா இனிபொருத்திடேனையா
கண்களுமிரட்டுதே காதுதானடைக்குதே
கதியாருமில்லாமல் கலங்குறேனே.

எண்ணுதுமெண்ணுதே யென மனங்குண்ணுதே
என்னுயிர்புரியுதே யிதற்கென்னசெய்வேன்
பின்னுதேகுடலெல்லாம் பிறட்டுதே அடிவயர்
பிள்ளைதான்வந்துதே கொல்லத்தானே.

அரிச்சந்திரவிலாசத்தில் ஆண்டமாரேயென்கணவன்
என்கிற வர்னமெட்டு.

பாவியானேன்பாவியானேன் பாரில்பிரிந்துயென்னை
பாதுகாத்திடவுமொரு பாவைகாணேனே
கூவியழுங்குரலோசை கொண்டவரும்வாராரோ இரு
கோதையருகில்வைத்து குலாவிவாழ்ந்தேனே,

ஆவிதுடிக்குதென்செய்வேன் அருமைதுரையேநான்
ஆரைதுணைகொண்டு துன்பமகற்றிப்போவேன்
நாவறண்டுபோகுதையோ நானென்னுசெய்வேன்
நமனைப்போல்கெற்பத்தில் பிள்ளைானடைந்தேனே.

வ-ம் இப்படியாக சித்திரவல்லி புலம்பிக்கொண் டிருக்கும் போது கள்ளவொட்டன் சொல்லுகிற விதங்காண்க.

விருத்தம் கல்யாணி.

மங்கையேநீமனதுநொந்து வாடுவததனால்நாமும
தங்கியகானகததில் தையலர்வருவதுண்டோ
இங்கெனமெவரைக்காண்பே னென்செய்வேன்னடியேமாதே
சங்கரன்விதித்ததாமே தயங்குவததனால்போமோ.

வ-ம் கேளாய் மங்கையே இந்தகானகத்தில் புலம்புவதால் யார் உதவிசெய்யப்போகிறார்கள் நான் எவரைக்கண்டு தேடுவேன் ஆனதால் ஈசன் விதித்ததுபோல் நடக்கும் யாதொனறுக்கும் வருத்தமடைய வேண்டாமடி பெண்ணே.

சித்திரவல்லி விருத்தம் முகாரி.

இத்தனைதுயரமுற்றேன் இவ்வனந்தனிலிருக்கும்
பத்திரகாளிநீதான் பாதுகாத்திடலாகாதோ
குத்துதேதிரேகமெல்லாங் குடலெல்லாம்சுருட்டுதையோ
சற்றேநேர்விலகிகில்லும் தருணமென்பிராணநாதா.

சித்திரவல்லி தரு.

அய்யோநானென்னசெய்வேன் என்சாமியென்
அங்கமெல்லாம் நோகுதையோ
தையல்சகிக்கேன் என்சாமித்
தருணம் விலகிநில்லும்

வனத்திலிருக்குங்காளி என்தாயேநீ
வந்துகார்த்தா லாகாதோ
பினத்தும்பிம்மா துக்குரல என்தாயேயுன்
பெருங்காதில் கேழ்க்கிலேயோ

உன்னைப்போல்பெண்ணல்லவோ என்தாயேநான்
ஒருவருமில்லாமலே
கன்னிதவிக்கிறேன் என்தாயேநீ
கார்க்கவு மாகாதோடி

ஆவிதுடிக்குதையோ என்செய்வேன்
அடிவயர்நோகுதையோ
பாவைகுடல்பின்னுதே என்செய்வேன்
பதறுதே நெஞ்சமைய்யா

பொது விருத்தம்.

பத்துமாதஞ்சுமந்து பாரினிலீன்றெடுத்த
புத்திரன்றனையெயந்த பூவையாள்காத்திலேந்தி
மூத்தமுங்கொடுத்துநல்ல முகத்தோடுமுகமணைத்து
சித்தமுங்களித்துமாது சிறக்கதாலாட்டுவாளே

வ-ம். இவ்விதமாக கானகத்திலிருந்த சித்திரவல்லியானவள் மிக்க துயரமுற்று பத்துமாதஞ்சென்று ஓர் ஆண்குழந்தையை ஈன்றபின் மகிழ்வுற்று பிறந்தபுத்திரனை கரத்திலேந்தி தாலாட்டும் விதங்காண்க.

தாலாட்டுதல்.

ஆருரோ ஆரீரோ ஆருரோ ஆரீரோ

கண்ணேநவமணியே கானகத்திலேயுதித்தாய்
பொன்னேயென்பூஷணமே புத்திரனேகண்வளராய் ஆ

ஈரைந்துமாதம் யென்வயற்றிலேதரித்துச்
சூரியன்போலுதித்த சுந்தரனேகண்வளராய் ஆ

உன்னையாநீன்று உலகமதில்தாலாட்ட
என்னதவஞ்செய்தேனோ யென்மகனேகண்வளராய் ஆ

முத்தங்கொடுத்து முகத்தோடு முகமணைத்து
புத்திரனேஉனைத்தொட நான் புண்ணியமென்செய்தேனோ ஆ

பொது வசனம்.

இப்படியாக மைந்தனை ஆசையோடெடுத்து முத்தங்கொடுத்து மார்போடணைத்து தாலாட்டிவளர்த்துவருகையில் பின்புசிலகாலஞ் சென்று மற்றொருமைந்தனைப் பெற்று வாழ்ந்துவரும்நாளில் இவர்கள் கையிலிருந்த பொருள்களெல்லாம் செலவழிந்து வேறே சீவனத்திற்கு வழியில்லாமல்போகவே சித்திரவல்லியானவள் தன் சோரநாயகனைநம்பி யெந்தவிடத்திலாவது சென்று கடன்வாங்கி ஜீவனஞ்செய்வோமென்று நினைந்து சிலநாள் கடன்வாங்கி சாப்பிட்டும் சம்பாதித்துக்கொடுக்கவும் வழியில்லாமல் கடனுயரவே கள்ளவொட்டன் எவ்விதமாய்க் கொடுக்கப்போகிறோமென்றும் இரண்டு குழந்தை பிறந்தவுடன் சித்திரவல்லிமேலிருந்த விருப்பமாரியும் தன் சொந்தநாயகி நினைவுகொண்டு சித்திரவல்லிமேல் வெறுத்து கூறும்விதங்காண்க.

விருத்தம் தன்னியாசி.

கன்னியேவூரைச்சுற்றி கடன்வாங்கியுண்போமானால்
பின்னையார்கொடுக்கப்போறார் பேதமைபுத்தியாலே
என்னையேயீடாய்தீர்க்க எண்ணியேவாங்குகின்றாய்
பெண்ணேயென் னூர்க்குச்செல்ல புறப்படப்போறேன்நானே

வ-ம். ஆனால் கேளடிபெண்ணே ஊரைச்சுற்றி கடன்வாங்கி சாப்பிட்டால் பிறகு யார் கொடுக்கப்போகிறார்களென்று வாங்குகின்றாய் வாங்கும்கடனுக்காக என்னையீடாய் தீர்க்கலாமென்று யோசித்தோ வாங்குகின்றாய் நான் என் தாய்தந்தைகளை விட்டுவந்து நாளாகிவிட்டது அவர்கள் தேடியலைவார்கள் ஆனதால் நான் என் ஊருக்குப்போய் வரவேண்டியதாக விருக்கிறது என்னைநம்பி ஒருவரிடத்திலும் கடன்வாங்க வேண்டியதில்லையடி பெண்ணரசே

கள்ளவொட்டன் தரு.

என்னையும்நம்பாதடி ஒட்டப்பெண்ணே
எழுதிகடன் வாங்காதடி
உன்னையும்நான்பிரிந்து ஒட்டப்பெண்ணே
ஊருக்குப்போய் வாரேனடி
மாதாபிதாவைவிட்டு அடிமாதே
வந்துவெகு நாளாச்சுதே
ஏதுஞ்சொல்லாமல்வந்தேன் அடிமாதேயவர்
எங்குமலைவாரடி
சொக்கர்பாதஞ்சேவித்து அடிமாதேயென்
சொந்தவூரு போகவேணும்
மக்களிருவருடன் அடிமாதேநீ
மகிழ்வாக வாழ்ந்திரடி

சித்திரவல்லி தரு.

போய்வருகிறேனென்று என்சாமி
புகன்றிடஞாயமோதான்
செய்களைவைத்தல்லவோ என்கண்ணாளா
சிந்தைகலங்குவேனே
தாய்வீடுபோனாலும் அடப்பாவியென்னை
தள்ளியேவைப்பாரடா
வாய்கூசாமல்சொன்னால் அடப்பாவியென்னை
மங்கைபழிபொல்லாதடா
உன்னாலேயல்லவடா அடப்பாவியெனக்கு
உண்டாச்சுபிள்ளைரெண்டு
என்னநான்செய்வேண்டா படுபாவிநான்
இதைவைத்துக்கானகத்தில்

கள்ள ஒட்டன் தரு

பிள்ளைபிறந்தாலென்ன ஒட்டைமுண்டை
பேரிழவெடுத்தாலென்ன அதை
தள்ளிபுதைத்தாலென்ன அடிப்பாவி அதை
துள்ள அறுத்தாலென்ன
எனக்குத்தான்பிள்ளையோடி ஒட்டமுண்டை
உனக்கதுகல்லோவடி
பினத்தவும்வேண்டாமடி அடிமுண்டை
பெருங்கோபமாகுதடி

சித்திரவல்லிசொல் ஆசிரிய விருத்தம்.

மதிகெட்டுப்பேசிடும் மன்னவனேயிருவரும்
மருவிடுங்காலந்தன்னில்
மானென்றுந்தேனென்றும் வனத்தில்வாழ்குயிலென்றும்
மதன்தேவிரதியோவென்றும்
துதிசெய்தீரதுவெல்லாம் தூரத்திலேவைத்து
தூரிடவும்வந்தழகோ
சொந்தநாயகனென்று கதவைத்திரக்கையில்
துடித்தென்கைப்பற்றிநின்று
இதுசமயசிகமெனவென்காலிலவீழ்ந்ததை
யெண்ணமற்போனதென்ன
எனைவைத்துகார்ப்பேனென் திருகையால்கற்பூர
மேத்தியேஅணைத்துதந்தீர்
சதிராகயெனையிந்த கானகந்தன்னில்
தனியாய்விடுத்துச்செல்ல
தகுமோடாவுயிருடன் தாயிடஞ்சேர்வையோ
தையலைக்கார்ப்பார்யாரோ.

சித்திரவல்லி தரு.

கந்தனும்வள்ளியும்போல் படுபாவிநாம்
கலந்துயிருப்போமென்று
கலந்துயிருப்போமென்று அடபாவி
கதையுமேசொன்னையடா
சொன்னதெல்லாம்மறந்து படுபாவிநீ
என்னென்னமோ பேசுகிறாய்
பெண்பாவம்பொல்லாதடா என்னை விட்டு
பிரிவதுஞாயமுண்டோ
மதனும்ரதியும்போல அடபாவிநாம்
மருவியேவாழ்ந்ததெல்லாம்
சதிகாராயெண்ணியெண்ணி படுபாவியிந்த
தையல்தயங்கிரண்டா
மெத்தத்துணிவுடனே படுபாவியிந்த
பத்தினியைதான்கெடுத்தாய்
பத்துநாளைக்குள்ளாக அடபாவிநீ
பாடையிலேபோவாயடா

கள்ள என்னடிவாய்கொழுத்து அடிசண்டாளி
ஏற்காமொழியுரைத்தாய்
உன்னாலேநான்கெட்டதை அடிமுண்டையெந்த
ஊராருங்காண்பாரடி

சித்திர ஆண்பிள்ளையைப்பெண்கெடுத்தா ளென்றுசொன்னால்
அடுக்குமோவையகத்தில்
மானங்கெட்டுப்பேசாதடா படுபாவியெனக்கு
வழிசொல்லிபோவாயடா

கள்ள தாளமேளத்துடனே ஒட்டமுண்டை உன்னை
சபையிலேகுந்தவைத்து
மாலைதரித்துனக்கு அடிபாவிநான்
மங்கிலியஞ்சூட்டினேனோ
கன்னிகாதானமாக அடிப்பாவிஒப்பன்
கைபிடித்துதந்தானோடி
என்னமதியாலடி ஒட்டமுண்டை
எதிர்த்துவாதாடுகிறாய்
கைகோத்தரசாணிக்கால் அடிமுண்டையாரும்
காணவேசுற்றினோமோ
தையலேநான்போய்வாரேண்டி ஒட்டப்பெண்ணே
தடுப்பதாலென்றுமில்லை

பொது வசனம்.

இந்த விதமாக கள்ள ஒட்டனும் சித்திரவல்லியும் வாதராடி சித்திரவல்லி இரண்டு குழந்தைகளுடன் பயங்கரமான கானகத்தில் யாதொரு ஆதரவன்னியில் விடுத்து கள்ளவொட்டன் தான் வாழ் நகருக்கேகினவுடன் சித்திரவல்லி அந்த ஆரணியமான கானகத்யுல் தன் விதியைநினைந்து கனிகாய்களை பறித்துத் தின்று பிள்ளைதிந் தானுமாக வயர் வளர்த்து வருத்தமடைந்திருக்கும் காலத்தில் பிள்ளைகள் பசியினால்வருந்தி தன்தாயிடமுரைக்கும விதங்காணக.

பிள்ளைகள் விருத்தம் முகாரி.

என்னையீன்றஅன்னையேகேள் யித்தனைதுயரத்தோடு
தனியேயிக்கானகத்தில் தயங்கிடும்வகைதானேது
மனமதுகலங்கிநாங்கள் வருந்துறோம்பசியால்வாடி
மூனமெங்கள்பசியைத்தீர்க்க முயலுவீர்பெற்றதாயே.

பிள்ளைகள் தரு.

அம்மம்மாயெங்களுக்கு என்தாயே
அரும்பசியாகுதம்மா
சும்மாயிருப்பதென்ன என்தாயேநீ
சோறுசமைத்திடாமல்
மெத்தபசியாகுதே யென்தாயே எங்கள்
சித்தமகலங்குதம்மா
சித்தமுந்தான்கலங்கி யென்தாயே இந்த
சிறுவர்கள்கேழ்க்கனுற்றோம்
சோறுசமைத்திடாமல் யென்தாயேநீ
சோர்ந்துயிருப்பதென்ன
ஆறுந்துணையில்லாமல் யென்தாயேநீ
அடைந்ததென்னகானகத்தே
கானகந்தானடைந்து யென்தாயே உன்
கண்ணால்ஜலம்பெருக
கண்ணாலஜலம்பெருக யென்தாயேநீ
கலங்கியிருப்பதென்ன
எங்கள்தகபபனெங்கே யென்தாயே அவர்
எந்தவிடஞ்சென்றாரம்மா
சங்கதிசொல்லுமம்மா யென்தாயே
சரணம்சரணமம்மா.

வ-ம், சரணம் சரணமம்மா தாயே அடியேங்கள் பசியினால்வருந்துகிறோம் எங்கள் பசியைத் தீர்ப்பது மல்லாமல் தாங்கள்இந்த கானகத்தில் ஒண்டியாயிருந்து புலம்புவதும் எங்களையீன்ற தந்தையானவர் இன்னவிடத்தில் சென்றிருக்கிறாரென்றும் தயவுசெய்து சொல்லவேணுமம்மா தாயே

சித்திரவல்லி-தரு.

கேளடாஎன்மகனே என்பாலா
கீர்த்தியுள்ளவுன்தகப்பன்
மாளாவரமளிக்கும் என்னப்பா
மதுரைக்குச்சென்றிருக்கா
மதுரைக்குப்போனவர்கள் என்பாலா
வந்துசேரும்நாளாகுது
வந்திடுவார்யென்மகனே என்னப்பா
மனக்கவலைகொள்ளாதடா
பசிக்குதேயென்றாயடா நான்பெற்ற
பாலகாநானென்னசெய்வேன்
புசித்திடுங்காய்கனிகள் என்பாலா
நொடியில்தருவேன்வாடா
வாடாயென்கண்மணியே என்பாலா நாம்
வாழுமிந்தகானகத்தில்
கானகத்துள்வந்தாயானால என்னப்பாநான்
கனிகள்பரித்துதாரேன்
பரித்துதாரேனடா என்கண்ணே நீங்கள்
பசியாறிவந்திடலாம்
அரிசிதானில்லையடா ஆக்குதற்கு
ஆரிடத்தில்கேழ்ப்பேனடா

வ-ம். என்னருமை மைந்தர்களே உங்களையீன்ற தகப்பனார் மதுரைக்குச் சென்றிருக்கின்றார் வருகிறகாலம் சமீபித்து விட்டது அதைபபற்றி வியாகூலம் வேண்டாம் உங்கள் பசியை தீர்ப்பதற்கு இவ்விடத்தி லொன்றுமில்லை ஆகையால் கனிகாய் பரித்துவுண்டுபசி தீர்த்துக்கொள்ளலாம்என்பின் வாருங்களடா கண்மணிகளே

பிள்ளைகள் வசனம். அப்படியே வருகிறோமம்மா தாயே.

பொ-வ-ம் இவ்விதமாக நிருதரவாயிருக்கும் சித்திரவல்லியை குழந்தைக ளிருவரும் பசிக்குதென்று சோறும்பாடமமா வென்று கேழ்க்க தாயானவள் மனங்கொதித்து குழந்தைகள் பசியை என்னவிதமாய் ஆற்றுவேன் யென துக்கித்து கனிகாய் பறித்தாவது கொடுத்து பசியைத்தீர்ப்போமென் றெண்ணி குழந்தைகளை அழைத்துக்கொண்டுபோய் ஓரிடத்தில நிறுத்தி புத்திமதிகள் சொல்லும் விதங் காண்க.

விருத்தம் நாதநாமக்கிரியை.

கண்மணிமகனேயிந்த கானகந்தன்னில்சென்று
உண்பதற்கிசைந்தகாய்கள் வுதிர்ந்திடுங்கனிகள்சொய்து
பண்புடன்வருகுமட்டும் பாலகாயிவ்விடத்தில்
பண்புடன்வீற்றிருங்கள் நானதிசீக்கிரம்வாரேன்.

சித்தி கண்மணியேயென் துரையே என்னப்பாநான்
கனிகாய்பரித்துவாரேன்
கனிகாய்பரித்துவாரேன் என்னப்பா இங்கு
களிப்புடன்வீற்றிருங்கள்

பிள்ளை நாங்களும்வாரூமம்மா என் தாயேமனம்
நடுங்குது இங்கிருக்க
தாங்கள தனித்துச்செலல வேண்டாமென்
தாயேவிடைகொடம்மா

சித்தி நடக்கவுமாட்டாயடா என்பாலாநான்
நாடிப்போகும்வழியில்
கிடச்குமேமுளகிளேகள் என்னப்பாநீ
கேளடாயென்மொழியை

பிள்ளை சீக்கிரத்தில்போய்வாருங்கள் என் தாயே
திரமானபாதையோடு
ஜாக்கிரதையாகச்சென்று யென்னம்மாநீ
தக்ககனிகொய்துவாங்கள்

சித்தி இங்குவிடத்தைவிட்டு என்பாலாநீ
எங்குமேசெல்லவேண்டாம்
வந்தவிடமல்லடா என்கண்ணேநான்
வழிதப்பிநிற்பேனடா
தம்பியைக்கைவிடாதே யென்பாலா
தனித்துவிட்டுப்போகாவே
எம்பிமரங்கள்மீது என்னப்பாநீ
ஏரிவிளையாடாதே
துஷ்டமிருகமது என்பாலாயிங்கு
துணிந்துவருகுடா கண்டால்
கஷ்டபடுத்துமடா என்பாலா
கண்ணேயெங்குஞ்சொல்லாதே

சித்திரவல்லி கனிபறிக்கிற-தரு.

கனிகள் பறிக்கிறேனே அந்தக்கலே-முற்றிலுவுரை
நிலைமைக்குரியதோர் தலைமைப்பாலரிட களையதுநீங்கிட
பலவின்கனிபறித்தேன் இதோ
பற்றியேமாங்கனி நற்றியதேங்கனி
சுற்றியகளைதனை முற்றிலும்நீங்கிட கனி

கோவைக்கனிபறித்தேன் எந்தன்
குழந்தைகள்மகிழ்ந்திட அத்தனும்புகழ்ந்திட
சித்தம்நான் மகிழ்ந்திதோ வுத்தமமாம்வாழை கனி

கிச்சிலையுமபறித்தேன் இதோ
கிளரொணுநிலத்தையும் தளரொணுநெல்லியும்
பலமுளதிராட்சியும் குலமகனருந்திட கனி

பொது வசனம்.

இந்த விதமாக சித்திரவல்லி தன் குழந்தைகளுக்கு புத்திகளை ப்போதித்து கனிபறிக்கச் சென்றவுடன் பெரியகுமாரன் தாய்சொன்ன வார்த்தைகளைமறந்து தம்பியைவிட்டு வேறிடஞ்சென்றுவிளையாடிககொண்டிருக்கும் தருணத்தில சின்ன குழந்தையை அக்கானகத்திலுள்ள ஓர்புலியானது கண்டு தூக்கிக்கொணடுபோய் விளையாடப்போன பெரிய பிள்ளையானது தம்பியை விட்டு வந்தோமேயென்று நினைத்து தான் விட்டுப்போன விடத்தில வந்து பார்த்தான்தம்பியைக் காணுமல் சிலதூரஞ்சென்று தேடிப்பார்த்து காணுதவனுய் பிறகு இவர்கள் தாயார் நிறுத்திபோன விடத்தில் வந்து தாயார்வந்து கேட்டால் எது சொல்லுகிறது அடிப்பாளே யென்கிற பயங்கரத்தோடு தானுமடிவதே நலமென்றெண்ணி ஓர் மரத்தின்கிளையில் தூக்குண்டு மடிவோமென்று புலம்பும் விதங்காண்க.

அரிச்சந்திர விலாசத்தில் மறையவனே யிந்த
என்ற வர்ன மெட்டு.

தாய்சொன்னதைமறந்து தனிமையில்விட்டுப்போன
தம்பியைக்காணேனையா தெய்வமே
வந்துஎன்தாய்கேட்டாலெவ்விதமவளுக்கு
மறுமொழிநானுரைப்பேன் தெய்வமே
எங்குமலைந்திட்டேன் இதுவரையிலுங்காணேன்
இனியானென்செய்வேன் தெய்வமே
சொன்னதைமறந்தேனென் றென்னையடிப்பாளே
தூக்கிட்டிறக்கப்போறேன் தெய்வமே

அப்புசெட்டி வசனம்.

தெய்வமே தாய்சொன்னதை மறந்து என்தம்பியை தனியே விடுத்துச் சென்றேனே இன்னவிடத்தில் சென்றுனென காணகிலேனே என் தாய்வந்து கேட்டால் எது பதிலுரைக்கிறது ஐயோ மனங்கலங்குதே இதைவிட நாமும் உயிரை மாய்த்து விடுவதே நலமென்று தோன்றுகின்றது இந்த மரத்தில் தூக்கிட்டு மடியப் போகிறேன் தெய்வமே.

வ-ம். இந்தவிதமாக பெரிய குழந்தையும தூக்கிட்டு இறந்தானபிறகு கனி காய் பரிக்கச்சென்ற சித்திரவல்லி குழந்தைகளைவந்துபார்க்க சின்ன குழந்தையைக் காணுமலும் பெரியவன் தூக்குமாட்டி யிறந்திருப்பதையுங் கண்டு திடீரென்று கீழேவிழுந்து புரண்டு புலம்பிச் சொல்லும் விதங்காண்க.

அரிச்சந்திர விலாசத்தில் ஐயையோ யீதென்ன
என்கிற வர்னமெட்டு.

ஐயையோயீதென்ன அன்னீதம் அன்னீதம்
ஆர்பொருப்பாரித்துன்பம் ஓ சிவமே சி சி
மைந்தர்பசிக்குதென் மாபாவிபோனேனே
மறித்துவரவுங்காணேன் ஓ சிவமே சி சி
இரண்டுமைந்தரைப்பெற்றும் ஏனுதியானேனே
இருக்கேனிருக்கேனினி ஓ சிவமே சி சி
என்னைப்போலபெண்களு மிருப்பாரோபுவியினில்
எதுக்கித்துயர்வைத்தாய் ஓ சிவமே சி சி
பட்டகாலிலேபடும் கெட்டகுடியேகெடும்
திட்டமின்றுகண்டேனுன் ஓ சிவமே சி சி
பாலரிருவர்மாண்டும் பதியிலிருப்பாரோ
பாழ்கிணரிதோபோறேன் ஓ சிவமே சி சி

சித்திரவல்லி அகவல் எதுகுல காம்போதி.

பாவிடில்லி பட்டணமதில்
மேவியேவாழும் வேந்தனால்நாங்கள்
தேசமுமிழந்து சிந்தைகலங்கி
காசினியதனில் கடும்வழிநடந்து
திண்டி வனத்தில் சேர்ந்துமேயங்கு
கண்டசத்திரத்தில் ஒண்டியாயென்னை
வைத்துயென்கணவர் மண்ணதைசுமக்க
சித்தமுங்கலங்கி செல்லவேயதன்பின்
சத்திரந்தனிலே தனியாயிருந்த
பக்திதன்னை பார்த்தொருகள்ளன்
மதிதனைமயக்கி மருவியிருக்க
அதனையென்கணவன் அறிந்தபின்னென்னை
தாலியையறுத்து தந்திடுவென்றான்
நீலிநிர்மூடி நீங்கடியென்றும்
பகர்ந்தஎன்கணவனை பதைத்திட்டேன்தாசி
மகனையாகம்பி வந்திட்டேன்தாசி
பிள்ளையிரண்டு பிறந்திட அவனும்
கள்ளமாயிருந்த கானகந்தனிலே
இருபிள்ளையோடு பெண்ணயிங்குவிட்டு
மறுதேசஞ்சென்றான் மாபாவிகள்ளன்
மைந்தர்களோடு மனதுகலங்கி
இந்தவனத்தில் யிருந்திடபசியால்
சிந்தைகலங்கி செல்வர்களென்முன்
வந்துமேஅம்மா வயர்பசியென்றார்

பழவகைபறித்து பசிதீர்ப்போமென்று
பெரியவன்தொங்க பிரேதமாயிருக்க
சிறுவனைக்காணேன் தெய்வமேயிப்படி
வருமென்றுணரா மாபாவியானேனே
இதுவெல்லாம்நினைந்து யெதற்குநானழுவேன்
பதியையிழந்த பரதேசியானேனே
குழந்தையைவிடுத்து கோதையாள்செனறேன்
இத்தனைதுயரமுற் றிருந்துவாழ்வதிலும்
இத்தலமீது யிறப்பதுநலமே
பத்திரகாளி பாவைநீயல்லவோ
இத்தனைகொடுமை யெனக்கேண்டிவிதித்தாய்

அரிச்சந்திரவிலாசத்தில் நீதிநெறியுணர்ந்த
என்கிற வர்னமெட்டு.

எனசெய்வேனிதற் கேதுசெய்வேனையோ தெய்வமேநான்
இவ்வனந்தனில்வந்து இவ்விதிக்காளானேன் தெய்வமே
மையினுல்சிக்கி மதிமோசம்போனேனே தெய்வமேயென்
மணவாளன்மனம்நோக வைத்ததால்வந்ததே தெய்வமே
கொண்டகணவனுக்கு ரெண்டகஞ்செய்ததால் தெய்வமேயிந்த
கொடியானகானகமீது படுகிறேனநான்துனபம் தெய்வமே
தாலிகட்டினவனை தள்ளிவந்ததினுலே தெய்வமேயிந்த
சண்டாளியிங்கு சவிர்துவாடுகிறேன தெய்வமே
இன்னமென்னகதி யெனைவந்தணுகுமோ தெய்வமே அந்த
யேமனென்னசெய்வானு யென்னுயிர்போகையில் தெய்வமே
வேசியென்றுபெயர் மேதினியிலெடுத்தேன் தெய்வமேயிங்கு
மெத்தப்பசியினுல் சித்தங்கலங்குறேனே தெய்வமே
பத்துமாதஞ்சுமந்து பெற்றவன்பாலனை தெய்வமேயிங்கு
பறிகொடுத்துயிர்வைத்து பாரினிலிருக்கப்போமோ தெய்வமே
உற்றூர்பெற்றோருமிழந்தேன் ஊரும்பேருமிழந்தேன தெய்வமேயிப்
போ ஒண்டியாகினேனிஙகு உயிரிழக்கப்போறேன் தெய்வமே

பொது விருத்தம்.

இப்படிவொட்டமாது யேங்கியேகானகத்தில்
ஒப்பிலாதுயரங்கொண்டு வோங்கியேபுலம்பும்போது
கொப்பவேதெய்வலோகக் குறத்தியும்வட்குமுன்னே
கொப்பெனக்குறிகள்சொல்லும் கோதைவருகின்றுளே.

வ-ம். இவ்விதமாக சித்திரவல்லி கீழவிழுந்து புரண்டழுது நாழுமிரப்பதே நலமென்றெண்ணி மனதைரியத்தோடு அவ்வனத்திலுள்ள ஓர் பாழுங்கிணரை நாடிச்செல்லுந் தருணத்தில் தெய்வலோகக்குறத்தி அவள் முன் தோன்றுகிற விதங்காண்க.



இனி ... ப்பாக மென்றறிவீர்க

குறத்திவந்தனளே குறிசொல்லும்
குறத்திவநதனளே

திருத்தமாகவேதேடிகுறிசொல்லும்
கருத்துள்ளகுறவஞ்சியும்நானென்று
கக்கத்திற்பிள்ளையுங் கையினில்கூடையும்
பக்குவமாகிய பாலவயதுள்ள
அண்டர்முனிவரும் கண்டுமயங்கிட
ரெண்டுஸ்தனமுடன் கெண்டவிழியுள்ள
நினைத்தகுறிதன்னை க்ஷணத்திலுரைத்துமே
கனைத்தவெகுமதி கைதனிலேவாங்கும் குற

குறத்தி சொல்லிக்கொண்டு வருகிற குறம்.

பச்சை குத்தலேயோ அம்மே
பச்சை குத்தலேயோ
காருபச்சை நீருபச்சை கணவர்பச்சை குணவர்பச்சை
குத்தலேயே அம்மை
வங்கிப்பச்சை வாளைப்பச்சை ரவிக்கைபச்சை ரங்குபச்சை
குத்தலேயே அம்மே

குறத்தி வசனம்.

ஆ இக்கானகத்தில் யாரோ ஒருபெண் அழுதகுரலாய் கேட்கிறது அதை விசாரிப்போம்.

குறத்தி விருத்தம் கமாஸ்.

ஆரம்மாமாதேயிந்த அடவியாங்கானகத்தில்
சீரதுகேட்டுநீயுஞ் சிந்தையுங்கலங்கிவாடி
கோரமாய்புலம்பும்சேதி கொப்பெனவுரைத்தாயானல்
கோதாயுனக்குநானும் நிகழ்த்துவேன்குறிதானம்மா.

வ-ம். கேளும் மாதே இந்த அடாதகானகத்தில் நீ இவ்வளவு துயரமுற்று தனியே புலம்புகிற காரணத்தை எனகருத் தெரியச் சொல்லுவாயாகில் உன்மனது கவலே யகலக் குறி சொல்லுகிறேன தாயே.

சித்திரவல்லி விருத்தம் முகாரி.

என்னசொல்வேனம்மா யெங்களின்விதிவசத்தை
நன்னியகானகத்தில் நான்படுந் துயரந்தன்னை
அன்னைப்போல்தீர்ப்பதற்கு ஆச்சிநீர்வந்ததாலே
என்னிடகுறியைச்சொல்ல யிணையடிபோற்றினேனே.

வ-ம். சேளுமம்மா வஞ்சியரே நான் திவசத்தை என்ன வென்று சொல்லப்போகிறேன் இக்கானகத்தில் என்னைக்காக்கும் அன்னைப்போல் வந்தபடியால் என்மனக்கவலை தீரும்படி இனிநடக்கும் பலனை சொல்லுவாய் தாயே.

கு-வ-ம். அப்படியே சொல்லுகிறேன் ஒட்டப் பெண்ணே.

குறத்தி சித்திரவல்லிக்கு குறிசொல்லுகிறது.

குள்ளத்தாரா வர்ன மெட்டு

இனிநடக்குஞ்சேதிதன்னை ஓஒட்டப்பெண்ணே
இயம்பிடுவேன்கேட்டிடுவாய் ஓஒட்டப்பெண்ணே
மனக்கவலைதீர்ப்பதற்கு ஓஒட்டப்பெண்ணே
மாகாளிவந்துதோன்றி ஓஒட்டப்பெண்ணே
மாண்டதோர்பிள்ளைகளை ஓஒட்டப்பெண்ணே
மகிட்சியுடன்யெழுப்பிடுவாள் ஓஒட்டப்பெண்ணே
வேண்டியவரந்தருவாள் ஓஒட்டப்பெண்ணே
விமலரோடுதேவர்சூழ்வார் ஓஒட்டப்பெண்ணே
காளியோடுதேவரெல்லா ஓஒட்டப்பெண்ணே
களித்துவாசிகூறிப்போவார் ஓஒட்டப்பெண்ணே
அப்போதுடில்லிபாட்சா ஓஒட்டப்பெண்ணே
ஆனையொன்றுவனுப்பிடுவார் ஓஒட்டப்பெண்ணே
சீராய்மூத்தப்பிள்ளைக்கு ஓஒட்டப்பெண்ணே
செண்டுபூமாலைபோட்டு ஓஒட்டப்பெண்ணே
அவன்தனை தூக்கிக்கொண்டு ஓஒட்டப்பெண்ணே
ஆண்டமேல்நாட்டிற்போகும் ஓஒட்டப்பெண்ணே
கவனமுடன்டில்லிபாட்சா ஓஒட்டப்பெண்ணே
கட்டுவாரேபட்டமுந்தான் ஓஒட்டப்பெண்ணே
பட்டமதுகட்டியல்லோ ஓஒட்டப்பெண்ணே
பாராளுமிகவாழ்வீ ஓஒட்டப்பெண்ணே
அட்டியில்லாமலிப்போ ஓஒட்டப்பெண்ணே
அனைத்துமுனக்குச்சொன்னேன் ஓஒட்டப்பெண்ணே

பொது விருத்தம்.

அன்புடன்குறத்திதானும் மானமோர்குறியுரைத்து
தென்புடன்குறத்தியப்போ தீவிரம்போனபின்பு
பண்புடன்பத்திரகாளி பரிவுடனகானுமிப்போ
இன்புருவொட்டமாதின் எதிரினில்தோன்றுவாளே.

வசனம் இப்படியாக தெய்வலோகக்குறத்தி குறமுரைத்து சென்றபின்பு அக்கானகத்தில் வாழும் பத்திரகாளி சித்திரவல்லி யென்னும் ஒட்டப்பெண்மணிமுன் தோன்றுகிற விதங்காண்க.

கா...தேவி விருத்தம் தன்யாசி.

இத்தனை துயரமுற்று இவ்வனந்தனிற்புலம்பி
சித்தமுங்கலங்கிநிற்கும் சிறுமங்கையாடுரன்றோதி
மெத்தவுமனமிரங்கி மெல்லியாள்முன்னதாக
பத்திரகாளிதானும் பண்புடன்தோன்றினளே.

காளிகாதேவி தரு.

கானகத்திலொண்டியாக என்னம்மா
கலங்கிடும்மாதாரடி
கலங்கிடும்மாதாரடி என்னம்மா
காரணத்தைச்சொல்லடிநீ
எந்தவூரடிஉனக்கு என்னம்மா
இங்குயேன்தனியேவந்தாய்
வந்தவிபரத்தை என்னம்மாயிந்த
மங்கையர்க்குசொல்லடிநீ
சொல்லடிஉனக்குவந்த என்னம்மா
துயரமகற்றுகிறன்
துயரமகற்றுகிறேன் என்னம்மாநீ
சொல்லடி சீக்கிரத்தில்

சித்திரவல்லி காளிகாதேவியைத் துதிக்கிற அகவல்.

ஆதிபராசத்தி யம்மணிரேணுகா
கோதிலாக்குணத்தி குமரிநீகௌரி
யும்பர்க்குவீரி யுலகர்க்குமாரி
யும்பனுகரத்தி யடங்காப்பிடாரி
நீலிவிமலி நிகழ்த்தொணுச்சூலி
பாலியெனனுளம் பணிந்திடுங்கோமலி
பேச்சிபிணத்தி பிங்களிஜெகத்தி
யாச்சிபைரவி யறியொணுமாதவி
பேய்ப்படையாளே பெரும்பூதத்துரைச்சி
வாய்க்கவுன்னருளிதோ வருந்திமெனடியாள்
இரசிகாட்டேரி மாய்க்காளிருத்திரி
சரியெனக்கெவரையுஞ் சாற்றிடப்போமோ
சமயமீதம்மா சாம்பவியெனக்கு
பையவேதருக வருள்புரிவாயே
என்குறைமெத்த விருக்குதுவுரைத்தால்
நன்மதிபுரிந்தே நயந்துவாக்கருளே

சித்திரவல்லி தரு.

வாழ்ந்தஒட்டநாடு எனதாயேநான்
வந்தசித்தர்காடு

காட்டில்என்னைவிடுத்து என்தாயே
கள்ளனவன்வோடிவிட்டான்
புருஷனைநானவிடுத்து எனதாயேமறு
புருஷனோடிங்குவநதேன்
வந்ததினுலேயல்லோ என்தாயேயெனக்கு
இந்தவிதிவந்துதம்மா
மைந்தரிருவருண்டு எனதாயே
மடிந்தாரிக்கானகத்தில்
சிந்தைகலங்குறேனே எனதாயே
சிவனைவிடப்போகிறேன்

பொது வசனம்.

இந்தவிதமாக சித்திரவல்லி காளிகாதேவிக்குச்சொல்ல காளிகாதேவி மனமிரங்கி ஒட்டச்சி தன சொந்தநாயகனைப் பிரிந்துசோரநாயகனை அடைந்தவளா யிருந்தாலும் சுயபுத்தியோடு வராமல் மையினுல் மோசம்போனவளாதலாலும் அப்படியே போயும் வேறொருவனைநாடாது சொந்த நாயகனைப்பிரிந்து பிச்சென்றுணர்ந்து தன னுயிரைவிட நினைந்தமையாலும் நன்மையும் நினைத்து காளிகாதேவி கூறும் விதங்காணக.

காளிகாதேவி வசனம்.

கேளாய் பெண்ணே உனபுருஷனுககு நீசெய்த துரோகத்தையவன் நினைத்து அதேவிசனமுற்று இறந்துவிட்டான் அந்தபழியானது உன்குழந்தைகளைச்சார்ந்து சின்னகுழந்தையை புலியெடுத்துக்கொண்டு போய்விட்டது பெரியவன் நீவந்து அடிப்பா யெனகிற பயத்துடன் தானுந்தூக்கிட்டு மடிர்தான் ஆகையால நீயெனனைநினைத்து உன மனக்குறைகளை வுரைத்தமையால் உன குழந்தைகளிருவரையும் இதோ யெழுப்பித்தந்தேன் உனக்கும் இனி யாதொரு குறைவுமில்லை இனியாவது புத்தியோடு ஓர் நகரத்துட்சென்றுகுழந்தைகளோடு சுகமாய் வாழ்வாயடி பெண்ணே நான் போய் வருகிறேன்.

சித்திரவல்லி வசனம்.

அப்படியே செய்கிறே னம்மா தாயே

பொது விருத்தம்.

பத்திரக்காளிதானும் பரிவுடன்பிரசன்னமாகி
சித்தமாய்ஒட்டப்பெண்ணின் சேயர்கள்தனையெழுப்பி
சுத்தமாமூவரோடு சூழ்ந்துமேதேவரெல்லாம்
மெத்தவேமகிழ்ந்துவாசி மேல்நின்றுகூறினரே.

வ-ம் அகோகெப்படி யென்றுல் காளிகாபரமேஸ்வரி சித்திரவல்லிப் பெண்ணுக்கு பிரசன்னமாகி அவளுடைய வரலாற்றை

விசாரித்து ... வள் மனக்குறையகல மாண்டுகிடக்கும் இரண்டுபிள்ளைகளையு ... மழுப்பித்தா அத்தருணத்தில் மும்மூர்த்திகளோடு தேவர்கள் யாவரும் அந்தரமார்க்கமாக வந்துநின்று ஆசிகூறிகாளியோடு தேவர்களுஞ் சென்றபின்பு இரண்டு பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு அக்கானகத்திலுள்ள காய்கனிகளைப்பறித்து புசித்துக்கொண்டிருக்குந் தருணத்தில் டில்லிபாட்சாவால் அனுப்பிய ஆனைவருகிற விதங்காண்பீர்கள்.

இனி ஆரூடபாக மென்றறிவீர்.

ஆனைவருகிற தரு இ-ம் அசாவேரி அடதாளம் பல்லவி.

ஆனைவருகுதுபார் மத
ஆனைவருகுதுபார்

அநுபல்லவி

கானகத்தன்னைநாடிக் கன்னிசுதனைதேடி
கள்ளமிலாபாட்சாதந்த கனத்தபூமாலைதாங்க — ஆனை

சரணங்கள்.

பத்திரகாளிதந்தப் பாங்கானவரமோங்க
பாவையொட்டப்பெண்ணின் படுந்துயரதுநீங்க — ஆனை

சித்தமானசித்துக் காட்டைமிகவேதேடி
சிறுவன்கழுத்தில்பூ மாலைப்போடவேநீடி
நாலுகாலில்தண்டை நலமாகவேசொலிக்க
சடுநெற்றியில்வீரப் பட்டமதுதுலங்க — ஆனை

கோலமாகப்பூ மாலைதும்பியிலேந்தி
குலுங்கநடைநடந்து வலங்கரமாகவே
உறுதியாய்டில்லிபாட்சா கருத்ததுபோலவே
அட்டாளதேசமெங்கும் ஆனைமிகவேதேடி — ஆனை

ஆனை பூமாலைபோடுகிற விருத்தம்

அந்தநல்லொட்டப்பெண்ணி னருஞ்சுதன்மூத்தோனுக்கு
விந்தையாயானைதானுங் கழுத்திலேமாலைபோட்டு
சொந்தமாய்மேல்நாட்டிற்கு துலங்கவேகொண்டுசேர்க்க
சந்தோஷமாகடில்லிப் பதிசெய்யும்வாறுகேளே.

வ-ம் அகோதெப்படியென்றால டில்லிபாட்சாஉத்தரவின்படி ஒட்டப்பெண்ணின் மூத்தகுமாரனாகிய அப்புசெட்டி ஒட்டனுக்கு ஆனை பூமாலையைப்போட்டு சித்துக்காட்டைவிட்டு மேல்நாட்டுக்குக்கொண்டுவர அப்போது டில்லிபாட்சா அறிந்து அவனுககுமேல்நாட்டை பட்டங்கட்டுகிற விதங்காண்க.

அப்புசெட்டி ஒட்டராசனுக்கு பட்டங்கட்டுகிற தரு.

ஆனைபூமாலைபோட்டு என்னையா
அன்பாகத்தானெடுத்து
சேனைகள்புடைசூழ என்னையா
சேர்ந்ததுமேல்நாட்டை
கண்டோர்மிகக்களிக்க என்னையா
காளையவன்சுந்திரம்போல்
பண்டநகுங்காளிவரிம் என்னையா
பலித்சதுமிகத்தழைத்து
பட்டத்துயானைமீது என்னையா
பன்பாகவந்திறங்கி
திட்டமுடன்பாட்சாவின் என்னையா
திருவடியைத்தான்பணிந்தான்
பணிந்தஒட்டவாசனுக்கு என்னையா
பாட்சாயாசீர்வதித்து
அணிந்தமேல்நாட்டைபட்டம் என்னையா
அன்பாகக்கட்டுதற்கு
மந்திரியைத்தானழைத்து என்னையா
மகிட்சியாயப்பொழுது
சுந்தரமாய்மேல்நாட்டை என்னையா
சொன்னுறலங்கரிக்க
கேட்டல்லோமந்திரிகள் என்னையா
கடுகெனவேயப்பொழுது
பொட்டெனவேபறைசாற்றி என்னையா
புகழாகயேதுசெய்வார்
வீதிக்குவீதியுமே என்னையா
விசித்திரப்பந்தல்களும்
சோதியாய்ப்பூப்பந்தல் என்னையா
சொகுசாயலங்கரித்தார்
மாவிலைத்தோரணமும் என்னையா
மகுடநல்லதோரணமும்
கோலமாய்தேசமெங்கும் என்னையா
கொப்பெனவலங்கரித்தார்
அன்பானவாத்தியமுடன் என்னையா
அதிர்வேட்டுத்தான்முழங்க
உம்பருகைம்போலே என்னையா
ஓங்கிடவேமேல்நாடும்
டில்லிப்பதியையாளும் என்னையா
தீரமுள்ளபாட்சாவும்

உல்லாசமாகவல்லோ என்னையா
உத்தமன் மனமகிழ்ந்து
அன்பத்தியாறுதேசம் என்னையா
அடவாகச்சீட்டெழுதி
இன்பமுடனப்பொழுது என்னையா
இஷ்டமுடன்வரவழைத்து
வேதமுறைப்படியே என்னையா
வேதியர்கள்சொன்னபடி
நிலையுள்ளநன்முகூர்த்தம் என்னையா
நேமித்துவப்பொழுது
வேதியர்களாசிகூற என்னையா
வேந்தர்கள் புடைசூழ
சோதியாய்மந்திரிகள என்னையா
சுகமாயருகிருக்க
அப்புசெட்டிவரசனுக்கு என்னையா
அன்பாகமுடிசூட்டி
செப்பமாய்செங்கோலே என்னையா
சித்திரம்போல்கையில்தந்தார்
பூரிக்கொடுத்துமல்லோ என்னையா
புரிந்தார்கள்வெகுதானம்
தரணியாளுமரசர்க்கெல்லாம் என்னையா
தாம்பூலமிகக்கொடுத்தா
தானவர்களாறிகூறி என்னையா
தன்பதியைபோயமர்ந்தார்
மேல்நாட்டையப்புசெட்டி என்னையா
அரசனும் ஆண்டுவாரார்
மாதமும் மாரிகளும் என்னையா
மறவாமல்பெய்திடுமாம்
போதவேகுடிகளெல்லாம் என்னையா
புகழாகவாழ்ந்திடுவார்

அப்புசெட்டி யரசனுக்கு மகுடம் சூட்டல்.

தரு-இ-ம்-கல்யாணி-ஆதிதாளம்-பல்லவி.

மகுடாபிஷேகம்செய்தார் அப்புசெட்டிக்கு
மகுடாபிஷேகம்செய்தார்

அநுபல்லவி.

அகிலபுவனங்கள் ஆளுப்வேந்தர்கூடி
சுகமுடன்ரத்தினமுடி சொகுசாய்கையிலேந்தி மகு

சரணம்.

எங்குமுள்ளவேந்தர்கள் எதிர்சேவைகொண்டிட
மங்களமென்றுபெண்கள் மகிட்சியாய்கொண்டாட மகு

திங்கள்வதனம்போன்ற தேவியருகில்நாட
இங்குமேல்நாடாளும் இவரேயரசனென்றுபாட மகு

நாரதர்பாட திவ்யகாதாககள்கூட
மலர்களும்போட எதிரினில்மாதுகள்பாட மகு

சத்தியமென்னும்செங்கோல் சார்ந்துகையில்பிடித்து
எத்திசைபுகழ்ந்திட எதிரில்லாவேந்தனென்று மகு

இரத்தினமுடிதரித்து இராஜர்கள் புடைசூழ
இராஜகெம்பீரனென்று ராஜாய்கொலுவிருக்க மகு

பொது விருத்தம்.

செப்பமாயப்புசெட்டி வரசனுமேல்நாடன்னை
கொப்பெனவாண்டுதானும் குலவிலாகீர்த்தியோங்கி
ஒப்பிலாக்காளியீந்த வோங்கியவரமுந்தாங்கி
மெய்ப்புடன்கொலுவினுக்கு மேன்மையாய்வருகின்றாரே.

வ-ம். அகோதெப்படியென்றால் அப்புசெட்டி ஒட்டவரசன் மேல்நாட்டை சிரப்புடன் ஆண்டு குடிகளுக்கு யாதொரு குறையும நேராமல்படிகது காளிகாபரமேஸ்வரி இந்த வரப்பிரசாதத்தினால் கீர்த்தியோங்கி மந்திரி பிரதானிகள்சூழக் கொலுவிற்கு வருகிறவி தங் காண்க.

அப்புசெட்டி ஒட்டவரசன் கொலுவிற்கு வருகிற தரு.

பல்லவி.

அப்புசெட்டியரசன் வந்தான் கொலுவிருக்க
அப்புசெட்டியரசன் வந்தான்

அநுபல்லவி

செப்பமுடனேகையில் செங்கோலேந்தியே
சிரசினில்நவரத்தின மகுடமின்ன
ஒப்பிலாமார்பினி லுயர்ந்தபதக்கமும்
ஒளியது பளபளென்ன அப்பு

சரணம்.

சந்திரனைப்போலே சூழ்ந்தவடிவமுடன்
சொர்குசாகப்பணிகள் துன்ன
மந்திரிப்பிரதானி மகிட்சியாய்புடைசூழ
மாலைத் தளதளென்ன அப்பு

மங்களமாகவே மகிழ்சபைதனைதேடி
மகிழ்ச்சியாய்தேச விசாரணைசெய்ய
பொங்குமதாகவே புகலும்கொலுவைநாடி
பூரித்து அரசுசெய்ய அப்பு

மறையோர்களாசிதனை மாதர்களாடி
மகிட்சியாய் கொலுவமர்ந்தார்
ஒருமையாய்மேல்நாட்டை யுத்தமனாகவாண்டு
ஒட்டவரசனென்று உலகம்புகழவேதான் அப்பு

அப்புசெட்டி கொலு விருத்தம்

தருமமாய்யெனதுநாடு தழைத்துமேயெண்ணும்வாழ்க
தருமமாய்வேதம்வாழ்க தரணியில்முனிவர்வாழ்க
தருமமாய்குடிகள்வாழ்க தருமமேயென்னாளும்வாழ்க
தருமமாய்யெனதுசெங்கோல் தழைத்திடவருள்வாய்போற்றி

அப்புசெட்டி ஒட்டவரசன் விருத்தம்.

அன்புள்ளமந்திரிமாரே யடைவுடன்பூசைதானும்
தென்புறவாலயத்தில் திரிகாலப்பூசைதானும்
பண்புடன்நடக்குதாசொல் பட்சமாய்க்குடிகளெல்லாம்
இன்புற்சுகித்துநாளு மியல்புடன்வாழ்கின்றாரா.

வ-ம் அகோதெப்படி யென்றால கேளுங்கள் எனது அன்புள்ளமந்திரிமார்களே நமது மேலநாட்டில் விளங்கும் ஆலயங்கள் யாவும் திரிகாலப்பூசைகள் நடந்துவருகிறதா மந்திரி மார்களே.

க.வது மந்திரி சொல் விருத்தம்

அரசேகேள்நமதுநாட்டில் யாதொருகுறைவுமின்றி
திறமுடனாலயத்தில் தினம்பூசைநடக்குதையா
மருவியேமாரிதானும் மாதமும்மாரிபெய்து
நிறைபடக்குடிகள்யாவும் நீடியேவாழ்ந்துவாரார்.

வ-ம் அகோ கேளுமையா வரசே நமது நாட்டில் யாதொரு குறைவன்றி ஆலயங்கள் முழுதும் திரிகாலப்பூசைகள் தவறாமல் நடந்தேறி வருவது மன்றி மாதமும்மாரி பெய்து குடிபடைகள யாவும் குறைவன்றி வாழ்ந்து வருகின்றார்கள் அரசே.

உ.வது மந்திரி சொல் விருத்தம்

கள்ளமில்லாமலிந்த கனமுடன்மேல்நாட்டன்னை
சொல்லிடும்நீதிசத்தியம் சொகுசுடன்பரிபாலித்து
மெல்லியபாகம்கொண்டு மேதினிலயரசுசெய்ய
அள்ளியேதானம்செய்யும் அரசனேபோற்றிபோற்றி.

௩,வது மந்திரிசொல் விருந்தம்.

சத்தியசெங்கோல்தாங்கி சராசரமெங்குமாள
நத்தியேவந்திரா நரபதியரசேயுந்தன்
முத்தியபதத்தையானு முகந்துமேமனதில்நாட்டி
நித்தியம்வணங்கிநின்றேன் நின்னடிபோற்றிபோற்றி.

கட்டியன் எச்சரிக்கை.

சூரனேசகலகுணவீரனேயெனையாளுந்
தூயனேவெகுபராக்கு
சொல்லொணாநீதியைவழுத்துவாய்சத்யநெறி
தோன்றலேவெகுபராக்கு
தீரமின்பகைவர்மனம்வாடிடவேயம்போடு
செய்யனேவெகுபராக்கு
செப்பரியதேசமெங்குமைக்கியமும்வளர்ந்தோங்க
செய்யுமரசேவெகுபராக்கு.

அப்புசெட்டியார் வசனம்.

கேளும் மந்திரி நான் இந்த ராச்சியததை யாளவந்து முதல் நமக்கு கீழ்ப்பட்டவரசர்கள் கப்பம் செலுத்தி வருகிறாரா.

க'வது மந்திரி வசனம்

கேளும் அரசே தாங்கள் இந்த மேல்நாட்டுக்கு அரசராகவ தீரோ அன்றே சகலமான பேர்களும் தங்களுக்கு ஐக்கியமாயிரு ந்து பகுதி கட்டுகிறார்கள்.

அப்பு செட்டியார் வசனம்

சந்தோஷம் மந்திரி என்னருகில் வருவாய் அப்பா இரண்டா வது மந்திரி நமது நாட்டில் மாதமும்மாரி பெய்து குடிகள் சுகமா யிருக்கின்றார்களா.

உ'வது மந்திரி வசனம்.

மகாபிரபு தாங்களென்று இவ்வரசுக்குள் அமர்ந்தீரோ அந் நாள் துடங்கி இந்நாள் வரைக்கும மாதமும்மாரி பெய்து குடிகள் சுகமாய் வாழ்கின்றனர்.

அப்புசெட்டியார் வசனம்

வெகு சந்தோஷம் மந்திரி சீக்கிரம் நமது கட்டியனுக்குத்தெரி வித்து நாட்டியமாதரை வரவழைப்பாய்.

௩.வது மந்திரி வசனம்.

இதோ ஆண்டவா அடா கட்டியம் சீக்கிரஞ் சென்று நடன மாதரை கொலுவிற் கழைப்பாய்.

கட்டியன் வசனம் அப்படியே பிரபு.

நாட்டியப்பெண்கள்வருகிற தரு இ-ம் மோகனம் ஆதிதாளம்

சுந்தரமாய் சுகிர்தநாட்டியப் பெண்கள் வந்தாள்.

அந்தத்திலமிருந்த அனைவருக்குகந்த
பந்தமாய்ப்பதம்பாடி பணிந்துராஜனைத்தேடி சுந்தர

சரிகைசேலையுங்கட்டி சரசமாய்கைகளைநீட்டி
நிறைந்தபூஷணம்பூட்டி நிகழ்மோகனமாலைசூட்டி சுந்தர

ச்கிர்த்தகிர்தோமென தத்திமிதோம்தத்தோமென
சுகமாய்சுரங்கள்பாடி சுந்தரன்கொலுவைத்தேடி சுந்தர

நாட்டியப்பெண்கள் வசனம் மகராஜ் வந்தனம்.

அப்புசெட்டியார் வசனம்.

சபாஷ் பெண்களே ஏதோ மோகமீறும்படியான பதங்கள்தெரிந்தால் தனித்தனியாகப் பாடுவீர்.

நாட்டியப்பெண்கள் வசனம்

தங்களிஷ்டம்போல்பாடி நடிக்கின்றோம்

நாட்டியப்பெண் ஜாவளி.

இ-ம் இந்துஸ்தானி ஆதி தாளம்.

மையலாகினேன் சாமி
மையலாகினேன்
தையல்தனைக்கூடிச்சேர மைய

காமமீறுதே கண்கள் ரெண்டும் சோறுதே
சோமன்கணைதைக்குதே
சுந்திரனேவந்துசேர மைய

கன்னியிடைதளருதே கலைகள்வந்துகப்புதே
உன்னைமனம்கோறுதே
உத்தமனேவந்துசேர மைய

கன்னய்யன்பதம்பாடி காட்சியாகவுன்னைநாடி
சின்னவளும்வந்தேன்தேடி
சித்தம்வைத்துவந்துசேர மைய

அப்புசெட்டியார் வசனம்.

சபாஷ் பெண்ணே எது என்மீது இவ்வளவு தயை வந்தது இன்னொரு பதம் பாடுவாய்.

நாட்டியப் பெண்கள் வசனம் அப்படியே மகா பிரபு.

இதுவுமது ஜாவளி.

இன்னம் என்னடா தாம்தம்நீ செய்கிறாய்.

காலம்போகாமுன்னமே கட்டியணையடாசாமிநீயே
என்ஜாலம் நீசெய்வது தகாதடாநான்காமியே இன்

மன்மதனும்வில்லினாலென்னை மாட்டுறானேசாமியே
கல்லடாவுன்மனம் கரையிலேயாநான்காமியே இன்

அப்புசெட்டியார் வசனம்.

ஆ ஆ சபாஷ் மாதே என்னருகிலமருவாய் பெண்ணே சரசவ தனை இனி உன்னுடைய கடமையன்றோ.

நாட்டியப் பெண்கள் வசனம் ஆம் சுவாமி.

சாமியிதோசரணம் வேறுஜாவளி செய்குவேனே
அனுமானம் இன்னமென்னடா சாமி

கங்கையும்வாடுது கடலுந்தேடுது
இங்கினிச் செய்வதென்னடா சாமி

இடையதுதுவளுது என்னசெய்கிறது
தடையின்ன மாகுமோடா சாமி

கண்களும்சோருது கனமுமீறுது
பண்படுத்துவ தென்னடா சாமி

அப்புசெட்டியார் வசனம்

சந்தோஷம் பெண்ணே இன்னொருதரம் பாடுவாயா கண்ணே.

நாட்டியப் பெண்கள் வசனம் அப்படியே பிரபு.

வேறு ஜாவளி.

அணைவானோ நங்கை ஐயையோராஜ னணைவானோ நங்கை
இணையவானென்றுமே எங்கிநானின்றுமே
கணையால்நொந்துமெத்தக் களைத்தேனேமங்கை
வாக்கருதானோ தங்கை
நானிங்கே அவனெங்கே இனியெங்கே அணை

உபாதிச்மாதி ஊட்டுமெனத்ததி
தவறிலெனக்கினித் தகுதியார்மங்கை
இனித்தாளேனே தங்கை
நானிங்கே அவனெங்கே இனியெங்கே அணை

அப்புசெட்டியார் வசனம்.

பெண்களே இனி உங்களுடைய பாடலைக்கேட்பேனுகில்என் மனம் பொறுப்பது கடினமாகும் அப்பா மந்திரி இவர்களுக்கு தக்க பரிசுகளைக் கொடுத்தனுப்பு வாய்.

மந்திரி வசனம்.

அப்படியே கொடுக்கிறேன் பிரபு.

அப்பு செட்டியார் வசனம்.

மந்திரி நான் அந்தப்புறம் செல்கின்றேன் நீபோவீர்.

அப்புசெட்டி ஒட்டவரசனுக்கு

திருமணஞ்சூட்டுகிற தரு.

சீருடனேமேல்நாட்டை அப்புசெட்டி
சித்தரசனுளையிலே

பேருடனேமணங்கள்செய்ய என்னையா
பெண்தேடிப்பார்த்தல்லவோ

நாட்டையலங்கரித்தார் என்னையா
நலமாகவப்பொழுது

சட்டமாகவரசரெல்லாம் அங்கே
கும்பலாகச்சேர்ந்தல்லவா

ஆரம்பைபைப்போலவேதான் என்னையா
அலங்கரித்துபெண்ணையுமே

வரம்போலமைத்தென்று என்னையா
வையகத்தோர்தான்புகழ

மறையோர்புடைசூழ்ந்து என்னையா
மங்கிலியவாசிகூற

பெருமையுடன்மணவறையில் என்னையா
புகழாகக்குந்தவைத்து

செய்யும்சடங்குகளை என்னையா
சிறப்பாகவேநடத்தி

வையம்புகழவேதான் என்னையா
வண்மையுடனப்பொழுது

கட்டினனப்புசெட்டி என்னையா
கழுத்திலே தாலியும்

திட்டமாய்சபையிலுள்ளோர் என்னையா
திறமாகவாசிகூற

அம்மிமிதித்தல்லவா என்னையா
அரசாணிசுத்திவந்தார்

செம்மையாயனைவருக்கும் என்னையா
தாம்பூலம்புட்பம்கொடுத்தார்

அளவற்றதானங்களை என்னையா
அள்ளிமிகக்கொடுத்து

வளமாகஅவரவர்கள் என்னையா
வளவினில்போயமர்ந்தார்

காளியுடகிருபையினல் என்னையா
காளையந்தஅப்புசெட்டி

மேலானமேல்நாட்டை என்னையா
மேன்மையுடனண்டுவாரார்

புத்திரமித்திரரும் என்னையா
புகழாகத்தான்பெருக

சுத்தமுடன்மந்திரிகள் என்னையா
சூழவேவாழ்ந்துவாரார்

வாழி-தரு-

ஐங்கரன்முகன்வாழி என்னையா
ஆதிசரஸ்வதிவாழி

திங்களணிந்தோன்வாழி என்னையா
திருமாலும்வாழி

தேவிகாளியும்வாழி என்னையாள் டில்லி
தேசத்தரசன்வாழி

பூவைஒட்டப்பெண்ணும்வாழி என்னையா
அவள்புத்திரரும்வாழிவாழி

பாடிப்படித்தோர்வாழி என்னையா
பாவலர்கள்வாழிவாழி

ஆடிகளித்தோர்வாழி என்னையா
அதனைப்பார்த்தோரும்வாழி

இயற்றினோர்களவாழி என்னையா
இதைப்பதிப்பித்தோர்வாழி
நயமுடன்விற்போர்வாழி இவர்களெல்லாம்
நலமுடன்வாழ்க வாழ்கவே.

வாழி விருத்தம்.

சீர்வாழ்கவொட்டநாடகம் சிறப்பாய்வாழ்க
ஜெகமதனிலிதைப் படித்தோரும்வாழ்க
நீர்வாழ்கநில்மையுள்ள பெரியோர்வாழ்க
நித்தியமும்குருவின்பாதம் நிகழ்ந்துவாழ்க
பேர்வாழ்கபுவியிலுள்ள முனிவர்வாழ்க
பேசிடவேயிதைப் படித்தோரும்வாழ்க
கார்வாழ்க கவிசிங்கன் தானும்வாழ்க
கனமுடனேயச்சிட்ட கனவான்வாழ்க.

மங்களம்.

இ-ம் அசாவேரி அடதாளம்.

பல்லவி.

அம்மைபத்திரகாளிக்கு மங்களம்
புகழீனமேல்நாட்டிற்கு மங்களம் மங்க

அநுபல்லவி.

செம்மையாகசெட்டிக்கும் சிறந்தபாக்கியவதிக்கும
சித்திரவல்லியோடுசுதன் குருவுக்குமங்களம் மங்க

சரணம்.

மாதவத்திலுயர்ந்த பார்முனிமறையோருக்கும்
மகிழும்பூவுலகினி லுள்ளவர்களுக்குமங்களம் மங்க
ஒட்டவரசன்கீர்த்தி ஓங்கிடப்புகழ்வோர்க்கும்
மட்டிலாயிச்சரிதை மகிழ்ந்துவாசிப்போர்க்கும் மங்க
தேவரோடுமூவருக்குந் திரைசூழுலகினிற்கும்
ஆவலாகயிதைப்பாடி யச்சிலிட்டவர்களுக்கும். மங்களம்

நூதன பெரிய ஓட்ட நாடகம்
முற்றிற்று.